மங்கை

அணா எட்டு

சர்வதாரி வைகாசி

பெண்களின் மாதப் பத்திரிகை



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2? JUN 1948
MADRAS

கையிலேயிருக்கும் பொம்மை குழந்தையின் கருத்தையும் கவர்ந்துவிட்டதில்
அதிசயம் இல்லை!

கலியாண விசேஷங்களுக்கும்,

திருவிழா விசேஷ நாட்களிலும் அணியத் தகுந்த

எங்கள்



"போட்டோ மார்க்"

சேலைகள்

கெட்டியான சாயத்திற்கும்
உறுதியான உழைப்பிற்கும்
கியாரண்டி தரக்கூடியது

தயாரிப்பவர்கள் :

ஸ்ரீ சாரதா அண் கோ.,

நடேசர் சன்னதி, பழனி.

ஏஜண்டுகள் :

1. ஸ்ரீ முருகன் அண் கோ, மால் 2-வது தெரு, மதுரை
2. M/s பால முருகன் கம்பெனி, மால் 5, ஹனுமார் கோவில் தெரு, மதுரை
3. M/s R. M. H. S. மூர்த்தி கம்பெனி, லக்ஷ்மிபுரம் குறுக்குத் தெரு மதுரை
4. ஸ்ரீ பால முருகன் கோ, 166, தெற்கு மாசி வீதி, மதுரை
5. M/s M. S. T. சுப்பய்யர் அண் சன்ஸ், 199 சந்தை ரோடு, நாகல்நகர், திண்டுகல்
6. கஸ்தூரி ரெங்கய்யர், நாகையர் அண் கோ, ஸௌராஷ்டிர தெரு' வத்தலகுண்டு
7. ஸ்ரீ சுப்ரமணியம் கம்பெனி, சேலம் அண்டு N. A. Dt.
8. M. R. சுப்பையா செட்டியார் ஜவுளி, வியாபாரம், 150, ராஜாமில்ரோடு, பொள்ளாச்சி

(N. B.) ***40, 60, 80 நெ. ஜவுளி தினுசுகளுக்கும்,***

பிரிண்டெட் வாயல் சேலை தினுசுகளும்,

சரஸ்வதி வீவிங் கம்பெனி

நாகல் நகர், திண்டுக்கல்

32, லக்ஷிமிபுரம் 3-வது தெரு, மதுரை

22 JUN 1943
MADRAS

சக்தி வாய்ந்த நூல்கள்

காந்தி மகான் கதை: கொத்தமங்கலம் சுப்பு

மகாத்மா காந்தியடிகள்-நம்மை அடிமை வாழ்விலிருந்து விடுவித்த சரித்திரத்தை நாட்டுப் பாடல் வடிவத்தில் பாடியிருக்கிருர். அழகான அட்டைப் படம்—உயர்ந்த காகிதம். கலிகோ பைண்டு டெம்மி அளவில் பக்கம் 260.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

சக்தி பிறக்குது: சுரபி

எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சாக இருந்த சுதந்தர வாரத்தில் 'சுரபி'யின் உள்ளத்தில் பெருக்கெடுத்த உணர்ச்சி வெள்ளத்திலே எழுந்த கவிதை அலைகள். அருமையான பதிப்பு.

விலை அணா: ஆறு — தபால் செலவு தனி

லெனின் பிறந்தார்: ஆர். ராமநாதன் எழுதியது

லெனின் பிறந்தார் என்ருல் கூடவே புரட்சி இயக்கமும் பிறந்தது என்றுதான் பொருள். இந் நூலில் லெனின் வரலாறு சொல்லும் வகையில் புரட்சி இயக்கம் வளர்ந்த வகையையும் ஆசிரியர் விளக்கி யிருக்கிருர். படங்களுடன்

விலை ரூ. மூன்றரை — தபால் செலவு தனி

இனி நாம் செய்யவேண்டுவது யாது?

டால்ஸ்டாய் எழுதியது. ரா. விசுவநாதன் மொழிபெயர்ப்பு

காந்தியடிகளின் கருத்தைக் கவர்ந்தது இந் நூல். "உழைப்பவனுக்குத்தான் உணவு, உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம்" எனும் அரிய சித்தாந்தம்தான் இந் நூலில் அடங்கி யிருக்கிறது. இப்போது தமிழில் மூன்ரும் பதிப்பாக வெளிவந்திருக்கிறது. அழகிய மொழிபெயர்ப்பு:

விலை ரூ. மூன்று — தபால் செலவு தனி

உலோகமும் நாமும்: மு. அருணுசலம் எழுதியது

உலோகங்களைப் பற்றிய விரிவான முறையில் தெளிவாய் விளக்குவது இந் நூல். தமிழ் உலகுக்குப் புதிது.

விலை ரூ. ஐந்து — தபால் செலவு தனி

ஹிந்து பத பாதுஷாஹி

வீர சாவர்க்கர் எழுதியது 'அபிநவம்' மொழி பெயர்ப்பு

இந்து சாம்ராஜ்யம் பற்றிய விவரிக்கும் சிறந்த நூல்.

விலை ரூ. மூன்றேமுக்கால் — தபால் செலவு தனி

சக்தி காரியாலயம் சென்னை—14.

பொருள் அடக்கம்

தொகுதி 2 : பகுதி 9

○

உஷார்	...	தலையங்கம்	5
குழந்தை வளர்ப்பு	...	மு. அருணாசலம்	7
காணி நிலம்	...	ய. லக்ஷ்மிநாராயணன்	11
லேடி டைபிஸ்ட்	...	ரங்கதேவி	17
சகோதரிகளின் சந்தேகங்கள்	...	ஸ்ரீமதி அன்னபூரணி	23
அன்பின் வண்ணம்	...	திருப்புகழ் மணி	25
உடலோம்புதல்	...	டாக்டர். நாமகிரி	27
பாரதியாரும் பெண்மையும்	...	சசிரேகா	29
புருஷனும் புடவையும்	...	கே. மீனாக்ஷி	33
தாத்தாவின் கடிதம்	...		40
இனிக்கும் சொற்கள்	...	எம். சியாமளா	42
ஔவைச் சித்திரம்	...	வித்வான் ஏ. கே. பாலாம்பிகை	44
அழகுக் குறிப்பு	...	ஸ்ரீமதி ஆத்மநாதன்	49
வாசல்	...	சாவித்திரி	54
பயணம்	...	ஜயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்	57
எதிர்பாராதது	...	"கல்பனா"	64
பெண்களும் யோக ஆசனமும்	...	சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி	68
உலகம் உண்மையை உணராது	...	ஜெயஸ்ரீ	72
மங்கை வாசகர்களுக்கு	...		80

✲

1948 ஜூன்

சக்தி


காய்கறித்தோட்டம்
தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து
என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?
கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமைக் காய்கறி வகை
பயிரிடக் கற்றுக்
கொள்ள வேண்டுமா?
இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணசலம் எழுதியது
விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி
சக்திகாரியாலயம்
சென்னை 14.

197649

᠎# மங்கை

பெண்களின் புத்தகம்

தொகுதி 2	சென்னை. ஜூன் 1948	பகுதி 9

உஷார்

○

லார்ட் டென்னிசன் பிரபு "இளவரசி" என்னும் தம் காவியத்தில் பெண்களுக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"பெண்மக்கள் முக்கியமாகத் தமது வாழ்க்கை நிலையை உயர்த்துவது போலத் தோன்றும் காளான்களிடம் உஷாராக இருக்கவேண்டும். அவை அவர்களைக் காலைவாரி விட்டுவிடக் கூடும். ஆணும் பெண்ணும் சமமாக இருக்க பெண், ஆண்களின் அலுவல்களை மேற் கொண்டு தன் பெண்மையை இழந்து விடக்கூடாது" என்று தீர்க்கதரிசியாகிய புலவர் பிரான் மனித வர்க்கத்திற்கோர் எச்சரிக்கையைக் கொடுத்திருக்கிறார். அதை நாமெல்லோரும் ஞாபகம் செய்து கொள்ள வேண்டிய வேளை வந்திருக்கிறது.

யுத்தத்தின் போது பெண்மக்கள் பல துறைகளில் ஆண்கள் செய்துவந்த அலுவல்களை மேற்கொண்டு உயர்ந்த, சுயநலமற்ற பணியாற்றினார்கள். யுத்தம் முடிந்து வெற்றிக் கொடியோடு வீரன் வீடு திரும்புகையில் தன் தொழில் பறிக்கப்பட்டு விட்டதை யறிகிறான். அவனால் சோம்பேறியாக இருக்க முடியாது. செய்யத்தகாதன செய்யத் தூண்டப்படுகிறான்.

பெண்கள் தமக்குரிய தொண்டுகளை வைத்துக்கொண்டு சமாதான காலத்தில் தொழில்களை ஆண்களிடம் ஒப்புவித்து விடுவது உசிதமான விஷயம். பெண்கள் செய்யக்கூடியவை யாவை என்பதைக் குறித்துப் பட்டியல் தயாரிக்க வேண்டாம். அது எல்லோருக்கும் தெரியும்.

சமீபத்தில் தினசரிகளில் வெளியாகும் சில விஷயங்கள் பெண்களை அவர்களுடைய இயற்கையான இடத்திலிருந்து பெயர்க்கக் கூடியவையாகத் தோன்றுகின்றன. உலகில்

அமைதியையும் இன்பத்தையும் நிலை நாட்டக்கூடியவள் பெண். அவளுக்கு இராணுவப் பயிற்சியளித்தால் அவளது மிருதுத் தன்மையும் தாயுள்ளமும் மறைந்து விட ஏதுவுண்டாகும்.

அடுத்த படியாகப் பெண்களைப் போலீசில் சேர்த்துக் கொள்வது. இதுவும் பெண்களுக்குகந்த தொழிலன்று. இதற்குப்பதில் குற்றம் செய்யாமல் தடுக்க ஒரு பெண்படையைத் தயாரித்தால் அதற்கு உலகமே கடமைப்பட்டிருக்கும் ஆண்களின் உணர்ச்சிகளை நல்வழிப் படுத்தும் தன்மை பெண்களுடன் பிறந்த குணம். தாய்க்கும், மனைவிக்கும் சகோதரிக்கும், தன் மகளையும், தன் கணவனையும் தன் சகோதரர்களையும் தீய செயல்களிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதையும் அவர்களை நல்வழியிலிருத்த முயல வேண்டுமென்பதையும் பிரசாரம் செய்ய ஓர் பெண்படையைச் சேர்த்தார்களென்றால் நமது காங்கிரஸ் மந்திரிகள் அழியாப்புகழைத் தேடிக் கொள்வார்கள்.

காந்திமகான் மக்களை ஒன்றுபடுத்த பிரார்த்தனையைப் பெரிதும் நம்பினர். அந்த சாத்விக, அஹிம்சா ஆயுதத்தைக் கைக்கொண்டு இப் பெண் படையினர் வீடுவீடாகவும், கிராமம் கிராமமாகவும், ஊர் ஊராகவும் சென்று பஜனை நடத்தி பெண்மக்களுக்குத் தமது கடமையை அறிவுறுத்தினல் பெண் போலீஸ்—ஏன் ஆண்போலீஸ்கூட—தேவையில்லாமற் போய்விடும்.

இயற்கை அழகை அனுபவிக்கும் கவிஞனுக்கும், செயற்கை அலங்காரத்தை அனுபவிக்கும் சாதாரண மனிதனுக்கும் சரி, பெண்கள் தான் உதாரணம் காட்டப் பெறுகிறார்கள்.

'டென்னிஸன்'

குழந்தை வளர்ப்பு

மு. அருணாசலம்

பள்ளிக்கூட வாழ்க்கை

சிறு குழந்தை பள்ளிக்கூடம் போகிறான் என்றால், அங்கு அவன் பாடங்களைக் கற்பது முக்கியமன்று. வருஷத்துக் கொரு பாடமாக, முதல் பாடப்புத்தகம், இரண்டாம் பாடப் புத்தகம், மூன்றாம் பாடப் புத்தகம் என்று முறையே அவன் படித்து முடித்துவிட்டான் என்று பெற்றோர் சிலர் எண்ணித் திருப்தி யடைகிறார்கள்; இந்த எண்ணம் உடைய ஆசிரியர்களும் பலர். இது கொஞ்சமும் சரியன்று. பள்ளிக்கூடத்தில் பாடம் படிப்பதென்பதை வியாஜமாக வைத்துப் பையன் வாழ்க்கையையே கற்றுக் கொள்கிறான்.

நடக்கவும் ஓடியாடவும் பேசவும் கற்ற சிறு பையனுடைய தொழிற்பாடுகள் அனைத்துக்கும், வீடும் குடும்பத்திலுள்ள மனிதர்களும் போதவில்லை. சில வீடுகளில் உறவினர் யாருமின்றி, பெற்றோர் மட்டுமே இருப்பார்கள். அங்கு, பையனுக்கு வெகு சீக்கிரம் துணை போதாமற்போகிறது. இவ்விதத் துணை குறைவாயிருந்தால் பையன் விரைவில் குடும்பத்தைவிட்டு வெளியே பழக ஆசைப்படுவது இயற்கை. தாத்தாவும் பாட்டிமாரும், சகோதர சகோதரிகளும் மாமா மாமி முதலான உறவினரும் வேலை செய்வோரும் சேர்ந்த பெரிய குடும்பமாயிருக்கும் பட்சத்தில், இன்னும் அதிக நாள் வரையில் அக் குடும்ப வாழ்க்கையே அவனுக்குப் போதுமானதா யிருக்கிறது. இதைக் கவனித்தால், குடும்பமே அவனுக்குச் சிறிய அளவில் ஒரு பள்ளிக்கூடம் போலாகி விடுகிறது. இன்னும் கொஞ்ச நாளானபின், இதுவும் போதாமல் அவனுக்கு வேறு இன்னும் விரிவான சூழ்நிலை தேவையா யிருக்கிறது.

குழந்தைப் பருவமானது குழந்தைக்கு எல்லாத் துறைகளிலும் மிக்க விரிவாய் வளர்ச்சி தருகிற பருவம். உடல் வளர்ச்சி, உள வளர்ச்சி, அறிவு வளர்ச்சி என்றெல்லாம் அவனுடைய வளர்ச்சி பெருகப்பெருக, அவன் தேவையும் பெருகுகிறது. உடல் வளர்ச்சியின் பெருக்கத்துக் கேற்றபடி, பையன் அதிக உணவு சாப்பிடுகிறான். இதனால் உடலின் தேவைகள் நிறைகின்றன. மற்றத் தேவைகள் பூர்த்தி

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் குழந்தை வாழ்க்கையைப்பற்றி அன்பர் அருணாசலம் எழுதியிருக்கிறார். அவர் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பகுதியும் சுவாரஸ்யமானது மட்டும் அல்ல, முக்கியமானது.

யாவது எப்படி? வீட்டிலுள்ள பெற்றோரும் மற்றவர்களும் தங்கள் தங்கள் வேலைகளைக் கவனிக்க வேண்டியவர்கள். இவற்றில் ஓய்வு கிடைத்து வீட்டிலிருக்கும் போதுதான் அவர்கள் பிள்ளைகளைக் கவனிப்பது சாத்தியம். மற்றப்படி பிள்ளைகளைக் கவனித்து வேண்டுவன செய்வதே வேலையாக அவர்கள் கொள்வது சாத்தியமில்லை. அன்றியும் மேற்கூறியவாறு பிள்ளைகளின் தேவை பெருகி வரும்போது, எல்லாவற்றையும் தெரிந்து அவர்களே கவனிப்பது இயலாது. இப்படி கவனிப்பதற்கென்றே ஏற்பட்ட ஸ்தாபனம், பள்ளிக்கூடம். இதன் பொருட்டு விசேஷப் பயிற்சியும் அவகாசமும் கொடுத்து நியமிக்கப்பெற்றவரே உபாத்தியாயர்.

பள்ளிக்கூடம் போவதனால் முதலாவதாக, குழந்தையின் சூழ்நிலை மாறுபடுகிறது. வீட்டில் சில உறவினரோடும் நண்பரோடும் வேலையிலீடுபட்டோரோடும் மட்டும் பழகிய பையன் பள்ளிக்கூடம் சென்றபின், உலகம் எவ்வளவு விரிந்தது என்பதையும், அதில் அறிவதற்கும் பழகுவதற்கும் தன்னையொத்த சிறுவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதையும் முதன் முதலாய் அங்குதான் அவன் கண்டு அதிசயிக்கிறான் என்பது மிகையன்று. தன்னைப்பற்றிய எண்ணமும் தற்காரிய மிகுதியுமே கொண்டிருந்த அவனுள்ளம், அதையெல்லாம் இடபோது உதறித் தள்ளிவிட்டு, வேகமாக விரிவடைகிறது. தன்னையொத்த இளம் பிள்ளைகளுடன் உறவாடுவது, புதிய உபாத்தியாயர்களுடன் பழகுவது, அவர்கள் சொல்லும் பாடத்தைக் கேட்பது, தானும் புதுப் புதுக் காரியங்களைச் செய்வது ஆகிய யாவும் இவ் விரிவுக்குத் துணை செய்கின்றன.

புதியது எதிலும் குழந்தைக்கு உற்சாகம் பெருகுதல் இயல்பு. பள்ளிக்கூடம் சேர்ந்தவுடன், இங்கு எல்லாம் புதிதாயிருக்கின்றன. அன்றியும் தன் வீட்டில், அன்புகாரணமாயும், தன் குழந்தைப் பருவம் காரணமாயும், பெரியவர்களான தன் பெற்றோர் உறவினர் ஆகிய யாவரும் ஓரளவு தன்னுடைய 'சட்ட திட்டங்'களுக்குக் கட்டுப்பட்டே நடந்து வந்தார்கள். இதனால் பையனுக்குத் தன்னினைவும் தற்பெருமையும் அதிகம். ஆனால் இப்போது அந்த நிலை மாறுகிறது; தான் பள்ளிக்கூடத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடக்கவேண்டியவனாகிறான். இந்த நிலை ஒரு புதிய அனுபவம். தான் மட்டும் அடங்கி நடக்கவேண்டியிருந்தால், ஒரு சமயம் எதிர்ப்புணர்ச்சி தோன்றி வலி பெறக்கூடும். அப்படியின்றிப் பல சிறுவர் அடங்கி நடந்து வருவதால், அடங்கி நடப்பதன் அவசியத்தைத் தானும் உணர்கிறான்; மனத்தில் தயக்கமும் முணுமுணுப்புமின்றி நடக்கிறான்.

இடம் புதியது, வேலையும் புதியது, தோழர் புதியவர்கள். புதிய ஆசிரியர்கள், புதிய புத்தகங்கள், கருவிகள். இவையனைத்தாலும் சிறுவனுடைய உற்சாகம் சலிக்காமல் மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. பாடத்திட்டமும் படிப்புமுறையும் அவனைத் தன் புறுத்தாமலிருக்கும் வரையில், அவனுடைய ஊக்கம் குன்றாது மேலோங்கி, வளர்ச்சிக்கும்

ஆன்ம வளர்ச்சிக்கும் அருந் துணையாயிருக்கிறது.

இவ்வளர்ச்சிக்கு அவசியமான பல அம்சங்களைப் பள்ளிக்கூட வாழ்க்கை தரும். உலகத்தைப் பற்றிய அறிவு பையனுக்குத் திட்டமான முறையில் வளர, வகுப்புப் போதனையும் பாடமும் துணைபுரியும். தன் நாடு, பிறநாடுகள், அவற்றின் அமைப்பு, நதி, மலை, கடல், காற்று, தட்ப வெப்பம், சூரிய சந்திரன் முதலிய இயற்கைச் செய்திகள் பலவற்றை அவன் படங்கள் மூலமாயும் செவியாறலாயும் கற்றுக் கொள்கிறான். பல இடங்களுக்குச் சென்று, காணாத கடல்; மலை நதி என்றெல்லாம காண வசதி பாடசாலையில் இருக்குமானால், பையனுடைய அனுபவம் உண்மையும் உறுதியும் அடைகிறது.

இந்திய சுதந்திர சரித்திரம், புராதன சரித்திரம், பக்தர் வரலாறு, சோழர் முதலான மன்னர் வரலாறு; காப்பிய வரலாறு, வீரர் வரலாறு, முதலியவற்றை அவன் அறியும்போது, அவனுக்கு மக்கட் சரிதம், நாகரிகம், கலை முதலான அம்சங்கள் புலப்படுகின்றன. இவற்றின் மூலம் படிப்பின் லக்ஷ்யத்தையும் வாழ்க்கையின் லக்ஷ்யததையும் அவனுக்குப் பள்ளிக்கூட வாழ்க்கையே திட்டமாய் உணர்த்தவல்லதாகும். சுற்றுப் புறங்களிலுள்ள கோயில்களைக் கண்ணாரக்கண்டு, அப்பர், மாணிக்கவாசகர் முதலான அடியவர் பாடிய அருட் பாடல்களைப் பாடும் பழக்கம் ஏற்படுத்திக் கொண்ட பையனிடம் நல்லொழுக்கமும் தெய்வ சிந்தனையும் வளர்வது உறுதி. சிவாஜியின் கதையைக் கேட்ட பையனிடம் வீர வுணர்ச்சி வளரும். காந்தியடிகள் வாழ்க்கையையும் இந்தியச் சுதந்திரப் போரையும் அறிகிற சிறுவன், தேச பக்தியும் அன்பும், சத்தியமும் கொண்டு வாழ்வான்.

கோயில்களையும் அங்குள்ள சிற்பம், சித்திரம், இசை, நடனம் என்பவற்றையும் சிறுவனுக்கு ஊர் தோறும் அழைத்துச் சென்று உபாத்தியாயர் காட்டும் போது; திட்டமான கலையுணர்ச்சியும் சமய உணர்ச்சியும் ஏற்படும். இன்ன அரசன் கட்டிய கோயில், இன்ன காலம், இன்ன அடியார் பாடிய பாடல் என்ற விவரங்களில் இளம்பிள்ளைகளுக்கு அளவற்ற ஆர்வமுண்டு. கோயிலைப் போலவும் சிற்பங்களைப் போலவும் படமெழுதவும் களிமண்ணுருவம் செய்யவும் பிள்ளைகளைப் பழக்குவது, அவர்கள் கைத்திறனையும், வரையும் திறனையும் பழக்குவதுடன், இவற்றின்மூலம் மூளையையும் வளர்க்கும். கூர்ந்து நோக்கும் திறனையும் உணருந் திறனையும் பலப்படுத்தும். நகரத்தில் வாழ்க்கைத் தொடர்பே இல்லாமல் வாழும் பிள்ளைகளுக்கு இவ்விதப் பிரயாணமும் காட்சியும் மிக்க பயன் தருவன. உழவு, நடவு, அறுவடை முதலான வேலைகள் நடக்கும்போது கிராமங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று காட்டுவதால், பயிர்த் தொழில் விவரங்கள், ஏழை உழவர் வாழ்க்கை, கிராமங்களின் சீர்கேடான நிலை என்பவற்றை அப்பிள்ளைகள் நிதர்சனமாய்க் காண்பார்கள். இக் காட்சியும் அறிவும் பிற்காலத்தில் அவர்களுக்கு என்னென்ன வழிகளில் பயன்படக்கூடும் என்பதை இப்போது யாரே கூற இயலும்?

இப்படியே பலவகையான உற்சவம், பொருட் காட்சி, பூக்

காட்சி, கண்காட்சி, மிருகக் காட்சி முதலிய வற்றை பிள்ளைகள் கூட்டமாய்ப் பார்க்கச்செய்தல், பாடசாலை வாழ்க்கையில் மிகவும் முக்கியமான அம்சம். சிங்கம், புலி, கரடியை நேர்முகமாய்க் காணத் தினசரி வாழ்க்கையில் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் குறைவு இல்லவும் இல்லை. கதையில் இவற்றைப் படித்தால் மட்டும் போதாது. நேரே பார்க்கும் போது வரும் அறிவும் ஆனந்தமும் வேறுவழியில் பிள்ளைகள் பெறுவதற்கில்லை. இப்படியே பாட்டு, ஆட்டம், நாடகம், விளையாட்டு முதலியன யாவும் பள்ளிக்கூட வாழ்க்கையில் தான் விரிவான முறையும் கூட்டுமுறையிலும் சாத்திய மாகும். பல வகையான சமூகப் பூசல்கள் மறைய, இத்தகைய பாடசாலைக் கூட்டு வாழ்க்கை தான் துணை செய்ய வல்லது.

எனவே இவ்விதம் பள்ளிக் கூட வாழ்க்கையின் பல் வேறு அம்சங்களையும் ஆராய்ந்தால் இளம்பிள்ளையின் உடல் உள்ளம் உயிர் என்ற பண்புகளை வளர்க்கவும் விசாலப்படுத்தவும், அதுவே மிகச்சிறந்த சாதனம் என்பது தெளிவாகும்.

மனச்சாட்சி

உண்மையைச் சொல்லாம லிருந்துவிட்டோம் என்று உணருவதே மனச் சாட்சியின் ஆரம்ப வேலை. மறைத்த உண்மையை வெளியிடத் தீர்மானிப்பதே இடை வேலை. முடிவில் வெளியிட்டு மனப் பாரத்தை இறக்குவதே மனச் சாட்சியின் இறுதி வேலை.

[முன் கதை: ஆகஸ்டு இயக்கத்தின்போது கோடங்குடி கிராமத்தில் நிர்மாண சேவை செய்ய வந்த நாணுஜிக்கு அப்புப் படையாச்சியும், அவன் மருமகனும் நண்பர்களாகிறார்கள். உள்ளூர் மைனரின் மகன் ராஜகோபாலும், தேச சேவிகை சகுந்தலாவும் நாணுஜி இயக்கத்திலீடுபடவேண்டுமெனக் கூறுகிறார்கள். ஆனால் நாணுஜி அப்புப்படையாச்சி போன்றவர்களின் துன்பங்களைத் தீர்ப்பதுதான் தற்போதைய முக்கியமான பணி என்று மறுத்துப் பேசுகிறார். அவர் நடத்தும் முதியோர் கல்விப் பணி அவர்களுக்கு விந்தையும் வியப்புமாயிருக்கிறது!]

எனக்குத் தெரியாமலில்லை.

சகுந்தலாவுக்கு மட்டும் அல்ல. அனேக தீவிரவாதிகளுக்கு இந்த முதியோர் கல்விப் பயிற்சி விஷயம் பிடிக்கவில்லை! தவிரவும், தேச சேவையில் பழுத்த சிகாமணிகள் பலருக்கே இந்த எழுத்தறிவியக்கம் பிடிக்காதிருப்பது விபரீதமாய்த்தானிருக்கிறது.

நான்கூட தேச சேவையில் ஈடுபட்ட ஆரம்பகாலத்தில் இம்மாதிரிதான் அபிப்பிராயப்பட்டேன். பிரான்ஸ்போன்ற நாடுகளில் நடந்த விடுதலைப் போரில் படித்தவர்களைவிட படிக்கத்தெரியாதவர்கள் அதிகம் ஈடுபட்டு எவ்வளவோ பாடுபட்டிருப்பதைப் பற்றிப் படித்திருக்கிறேன். ஒரு நாடு பூராவும், அதாவது அந்த நாட்டு மக்கள் பூராவும் படித்தவர்களானால்தான் விடுதலைப்போர் வெற்றியடையும் என்றோ அல்லது பயன் கிட்டுமென்றோ எண்ணுவது தவறு என்பது பல தேசபக்தர்களின் எண்ணம். தீவிரவாதிகளான சிலருக்கு சமூக சீர்திருத்தத்தில் நம்பிக்கையில்லை. ஆலயத்தைத் திறந்துவிட்டு ஹரிஜனங்களை விடுவதனாலும், வகுப்பு விகிதாசார உரிமைகளாலும் பிரசாரத்தாலும் சமூகம் சீர்திருந்தி விடாது. சட்டபூர்வமான கட்டாய முறையில் சமூக அமைப்பை மாற்றிவிட வேண்டும். அதாவது எந்த முறை மாறுதலானாலும் அதிகாரம் நம் கைக்கு வந்த பிறகுதான் செய்ய வேண்டும்—செய்யவும் முடியும்

என்று அபிப்பிராயப் படுபவர்கள்.

சகுந்தலாவும் இந்த அபிப்பிராயத்தி லிருந்து ஒதுங்கி யிருக்க வேண்டியவள் அல்லவே! இயக்கத்தில் முழு மூச்சாக ஈடுபட்டு வேலை செய்யாமல், என்னமோ நிர்மாணம், அது, இது என்று சொல்லி மரத்தடியில் நாலு பேரைக் கூட்டி வைத்துக் கொண்டு அ, ஆவன்னு சொன்னால்......!

உலகநாதன் மனம் படிப்பில் செல்லவில்லை. நெருப்பில் கிடந்து தகிப்பவனைப்போல் தவித்தான். நெடுநேரம் வரை அவன் என்னமோ சொல்லத் துடித்தானுலும் சமயம் கிடைக்கவில்லை. கொஞ்சநேரம் கழித்து நானே ஆரம்பித்தேன்.

'நீங்கள் உழைப்பிலே எவ்வளவு அக்கறையா யிருக்கிறீர்களோ அவ்வளவு அக்கறையைப் பொறுமையைக் கடைப் பிடிக்கும்போதும் காட்ட வேண்டும்' என்று நான் செல்லி முடிப்பதற்குள் சகுந்தலா சட்டென்று 'நாணுஜி, நீங்கள் இப்படிச் சொல்லுவதற்கும் கோவில் பூசாரிகளுக்கும் என்ன வித்தியாசம்? அவர்கள் 'கடவுளை நம்பிப் பொறுமையாயிரு' என்று சொல்லுகிறார்கள்: நீங்கள் செல்வர்கள் கொழுத்துக் கொழுத்து தானுகவே அழிவார்கள் என்று நம்பிப் பொறுமையா யிருக்கும்படி சொல்லுகிறீர்கள். வித்தியாசம் ஏதுவுமே இல்லை' என்று இடைமறித்துச் சொன்னதும், நான் வியப்படைந்து மவுனமா யிருந்தேன். ராஜகோபால் இருந்தாற்போலிருந்து சகுந்தலாவுக்கு என்ன வந்து விட்டது என்று பிரமித்து விழித்தான். 'இது அரசியல் விவாத மேடையல்லவே சகுந்தலா!' என்று நான் மிக நிதானமாகச் சொன்னதும் அவளும் பிரமித்து விட்டாள்.

நானும் விவாதம் வளரா மலிருக்க விஷயத்தை மாற்றினேன். என்னைப்பற்றி மைனரிடம் கன்னு பின்னுவென்று சொல்லிய அந்த நபர்—அந்தப் பிராந்தியத்திலே ஆனைக்காலன் என்று பேர் எடுத்த ஆசாமியைப் பற்றி விசாரித்தேன். நான் அவன் பேரைச் சொன்னேனே இல்லையோ கண்ணுச்சாமி துள்ளி எழுந்தான்.

'நீங்கள்ளாம் அந்தப் பேர்வழியைப்பத்தி ரவைகூட நெனைக்றதே எனக்குப் புடிக்கலீங்க. என்னு அந்த மனுஷன் அவ்வளவு அயோக்கிய சிகாமணிங்க. ஆளை அடிச்சா அரைக்காசு கெடைக்காது. ஆனுல் என்னமோ ஆயிரம், ஐயாயிரம்னு தான் பேசுவான். அக்கிரகாரத்துலேயே அந்த மனுஷனைப் பத்தி அப்படி இப்படின்னு தாங்க சொல்லுவாங்க' என்று சொல்லிவிட்டு உலகநாதனைப் பார்த்தான். ஆனுல் உலகநாதன் கவனம் பூராவும் எங்கோ இருந்ததை நான் ஊகித்துக் கொண்டேன்.

கண்ணுச்சாமி மறுபடியும் 'நீங்க நாலு நாளைக்கு முன்னுலே பறைத் தெருப்பக்கமா, கையிலே பஞ்சோ என்னமோ எடுத்துகிட்டுப் போனீங்களே. அப்போ நான் வரப்போரமா கஞ்சி குடிச்சிக்கிட் டிருந்தேன். பெரிய பண்ணையாரும், அந்த ஆனைக்காலனுமா வந்தாங்க. திடீர்னு இருந்திருந்தாப்லே இந்தக் கண்ணுச்சாமியை வேணுமின்னுலும் கேளுங்கன்னுரு அந்த ஐய்பிரு.

நான் வெலவெலத்துப் பூட்டேங்க......'

அவன் இப்படிச் சொன்னதும் அத்தனை பேரும் கடகடவென்று சிரித்து விட்டனர். குப்புச்சாமி படையாச்சி 'தம்பி, பலே! போயும் போயும் அந்த ஆசாமியைக் கண்டா பயந்துக்கிட்டே' என்று ஏளனமாகக் கேட்டதும் கண்ணுச்சாமிக்குக் கொஞ்சம் கோபங்கூட வந்து விட்டது.

'அட, கொஞ்சம் பொறுத்துத்தான் கேளுங்களேன். திடுதிப்னு ஒத்தன் வந்து இவனையுங் கேட்டுப் பாருங்களேன்னா யார்தான் விளிக்க மாட்டாங்க? மைனரு தொண்டையைக் கனைச்சுக்கிட்டு 'ஏண்டா கண்ணுச்சாமி உங்களுக்கு இருந்திருந்தாப்லே என்னடா வந்திச்சின்னாரு.'

'என்னாங்கன்னேன்! ஏண்டா ஆறகாலமெல்லாம் ஆபிடிச்சி, அஞ்சுலே வளையாதது அம்பதிலே வளையுமாடா? என்னடா படிப்பு உங்களுக்கெல்லாம். அவன் வேறொருத்தன் சாக்கைக் கட்டிக்கிட்டு ஜெயிலுக்குப் போனவன். அவன் என்னென்னமோல்லாம் பேசறானாம். ஏழையாவது பணக்காரனாவதுன்றானாம். உழைக்கிற ஜாதிங்கறானாம், உண்ணற ஜாதிங்கறானாம். என்னடான்னா கடைசிலே படிப்புச் சொல்றேங்கற பாவனைலே இதெல்லாம் நடக்கிறது! உண்மைதானே என்று கேட்டாங்க. நான் என்னங்க பதில் சொல்றது?'

நான் அவனுடைய முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். மேற்கொண்டு அவன் என்ன சொல்லப் போகிறான் என்பதைத் தெரிந்து கொள்ள எனக்கு மட்டும் அல்ல, அத்தனை பேருக்கும் ஆவலாயிருந்தது என்பதை அவர்கள் முகபாவத்திலிருந்தே தெரிந்து கொண்டேன். கண்ணுச்சாமி அதிக நேரம் எங்கள் பொறுமையைச் சோதிக்கவில்லை.

'மைனரு இப்படிக் கேட்டதுக்கு நான் சட்டுனு ஒண்ணும் சொல்லலிங்க. ஆனால் அந்த ஆனைக்காலய்யிரு முன்னே வந்து எம்பா அவுரு கேக்கறதுக்குப் பதில் சொல்லேன். இங்கெல்லாம் இருக்கிற ஜாதி—பொருதுன்னு புதுசா உழைக்கிற ஜாதி ஒண்ணு திங்கற ஜாதி ஒண்ணு உண்டுன்னு சொன்னாரா இல்லையா? சுத்தம் சோறு போடும். நீங்கள்ளாம் சுத்தமாருந்தா தீண்டாமை கிடையாது, தரித்திரம் கிடையாதுன்னு சொன்னாரா இல்லையா? இப்படியெல்லாம் படபடன்னு கேட்டதும் எனக்கும் பொறுக்கல்லே. ஒரே கோபம் வந்துடிச்சு. அட ஏன் அய்யா நீங்க இப்படி வெறட்டு வெறட்டுன்னு கத்துறீங்க? உங்கமாதிரி அவரு கெடும்பாப் பேசறவரும் இல்லே, செய்யறவரும் இல்லே, சும்மாருங்கன்னேன். இப்படிச் சொன்னேனோ இல்லையோ ஆ! ஊன்னு சாமி வந்தவருமாதிரி மைனர் கிட்டே என்னென்னமோ சொன்னாரு!

'வந்திருக்கற சாக்குச் சட்டைக்காரனை எப்படியாவது தொரத்தித்தான் ஆகணும்னுட்டு மைனரும் சொல்லிக்கிட்டாரு. அப்பொறம் அவுங்க என்ன பேசினாங்கின்னு தெரியாது' என்று ஒரு பெரிய கதைப் பிரசங்கம் மாதிரி சொல்லி முடித்தான். சட்டென்று உலகநாதன் 'ஆமாங்க, ஆனைக்காலன் மேலே செஞ்ச னாது என்ன தெரியுங்

களா? என் மாமனும் நீங்களும் சிநேகமா இருக்கறதை எப்படியாவது முறிச்சிப்புடணும்னு நெனைச்சி ஒரு சூழ்ச்சி பண்ணினாரு. கடனைக் கொடுக்கிறியா? நெலத்தைப் புடுங்கிக்கிட்டுமா? இல்லே காலிலே வந்து உளுந்து கெஞ்சி அந்த காந்திக்காரன் சகவாசம் இனிமே வச்சுக்கலீங்கன்னு சொல்லப் பண்ணனும்! இந்த அப்புப் படையாச்சியை. இது நடக்குங்களா? நடக்க உட்டுடுவேனா. நான் செத்தாலும் சாவரேன் உயிரு இருக்கிற வரைலே முடியாதுங்க. எங்களுக்கு ஒரு நாயம், அந்த மைனருக்கு ஒரு நாயம்னு சட்டமிருந்தா அந்தச் சட்டத்தையும் எதித்துச் சாகத்தயாருங்க. நம் பளவனுவ கண்ணை முளிச்சிட்டானுவ என்னு ஏனுங்க இந்த மிராசுதாருங்க தவிக்கணுங்க? நீங்க சொல்றமாதிரி பொறுமையாத்தான் இருக்கறோம். வண்டி மாடு சுமக்குது. பாரத்தை ஏத்தறாங்க. முடிஞ்சா சுமக்கும். இல்லாட்டி படுத்துடும். அதுவும் மீறினா கழட்டிக்கிட்டு பூடும். வண்டி கொடைசாய வேண்டியது தாங்க, இல்லீங்களா? ஆனாக்க இந்த மைனருங்க ஒரேயடியா எங்க வயத்திலே அடிச்சுட்டா சரிப்பட்டுடும்னு நெனைக்கிறாங்க பாருங்க. அதுதான் மோசத்திலே கொண்டு விட்டுடுங்க. இதைத்தான் அவங்க இப்போ அவசரமாத் தெரிஞ்சிக்கணுங்க. ஆமாம்,' என்று அலாதி ஆவேசத்துடன் சொல்லிவிட்டு தன்னுடைய படபடப்பை அடக்கிக்கொள்ள முயன்றான். ஆயினும் அவனுடைய வார்த்தைகள் அத்தனை பேரையும் ஆவேசமடையச் செய்து விட்டது. சகுந்தலா ஆச்சரியங் கலந்த பார்வையுடன் அவர்கள் அனைவரையும் மாறி மாறிப் பார்த்தாள். நானோ ஒரு வார்த்தைகூட பேசாமல் ராஜகோபாலை உற்றுப் பார்த்தேன். இத்தனை அளவு குடியானவர்கள் பேசத் தெரிந்தவர்களா? இவர்களுக்கு இவ்வளவு விஷயமா தெரியும்? நாம் என்னமோ நினைத்தோமே என்று சகுந்தலா வியப்புற்றிருக்கலாம். ஆனால் ராஜகோபால் வாயே திறக்கவில்லை. தன்னுடைய தந்தையைப் பற்றி குடியானவர்கள் தன் எதிரிலேயே இவ்வளவு கோபமாகப் பேசியது பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்று தெரிந்து கொள்ள எனக்கு ஆவல். ஆனாலும் நான் உடனடியாகக் கேட்டுவிடவில்லை. தவிரவும் கடந்த ஒரு வாரமாக அவன் குடும்ப நிலை பற்றிய விஷயமாக ஒன்றுமே பேசவில்லை. குடும்பத்தில் எத்தனையோ நடந்திருக்க வேண்டும்!

சீமைக்கார மாப்பிள்ளை வந்திருக்கிறார். சின்ன மாப்பிள்ளையும்தான். ஏதோ சினிமா ஸ்டுடியோ கட்டுவதாகத் திட்டமாம். இவனோ சகுந்தலாவை அழைத்து வர்திருக்கிறான். இதைப்பற்றி அவர்கள் நினைப்பு எப்படியோ. இன்னும் எத்தனையோ சர்ச்சைகள் அங்கு நடந்திருக்கும். ஆனால் ராஜகோபால் ஏனோ இதைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவனாகச் சொல்லாதிருக்கும்போது நான் கேட்கலாமா?

சற்று நேரம்வரை பள்ளிக்கூடம் நடத்தி விட்டு அவர்களை அனுப்பினேன். சகுந்தலாவும் ராஜகோபாலும் மட்டும் இருந்தார்கள். இப்பொழுதுதான் ராஜகோபால் ஏதோ மனம் விட்டுப் பேசத் துணிந்தான்.

'நாணாஜி, நான் இவர்கள் பேசியதைக் கேட்ட போது தவித்த தவிப்பின் வேகத்தை இன்னும் அடக்க முடியவில்லை. ஆனால் நான் தவித்து என்ன பயன்? உங்களைப் பற்றி இவர்கள் கேட்டதாகச் சொன்ன தூற்றல்களைவிட இன்னும் அதிகம் உண்டு. நாலைந்து தினங்களாக அங்கே வீட்டில் ஒரே ரகளை. நாம் அதைப்பற்றி இங்கே பேசுவதைவிட கொள்ளிடக் கரைக்குப் போகலாமே,' என்றதும் நான் சரி என்று எழுந்தேன். நிலவின் பசுமை ஒளி எங்கும் படர்ந்திருந்தது. குளு குளுவென்று காற்றடித்தது. குளிரும் உண்டுபண்ணியது. ஆனால் உள்ளத்தில் நிறைந்த உஷ்ண வேகம்! இந்த 'சுகத்தை' அனுபவிக்கத் தயாராயில்லை.

நாங்கள் கொள்ளிடக்கரை சேர்ந்த போது ஒரு ஈ காக்காய் இல்லை. ஆனாலும் கொய்என்று ரீங்காரம் செய்த நாணற் புற்களின் ஒலி மட்டும் சாந்தி தேவதைக்கு பக்கவாத்தியமா யிருந்தது.

ஜில்லென்றிருந்த மணலில் அமர்ந்தோம். ஆனால் எங்கள் மனதில் அந்த இன்ப மில்லையே!

மாலை வேளையில் இந்தப் பக்கம் வருவது சகஜம். ஆனால், இரவு வேளையில், அதுவும் நாங்கள் மூவர் மட்டும் தனியாக இங்கே வந்திருப்பது கண்டு எனக்கே வியப்பாயிருந்தது.

சகுந்தலா ஏதோ முக்கியமான விஷயத்தைப் பேசுபவள்போல மிகவும் மெதுவாக 'நாணாஜி, இந்த மாதிரி வேளையில் இந்த மாதிரி இடங்களில் ரகஸ்ய வேலைகளில் ஈடுபடுவது எவ்வளவு தகுதியானது!' என்று அவள் கேட்டதும் ராஜகோபால் இடைமறித்து 'ஆமாம், சகுந்தலா ரகஸ்ய வேலை, புரட்சி என்றெல்லாம் பேசி விடுவதுதான் உங்களுக்கெல்லாம் இப்போதைய வேலையாயிருக்கிறது, பஹிரங்கமாக நடக்கும் அக்கிரமங்களைக் கண்டிக்க அல்லது நடக்காமல் இருக்கச் செய்ய யாரும் ஒன்றும் செய்ய முடியவில்லை,' என்று ஆத்திரத்துடன் சொன்னதும் அவள் மவுனமாகி விட்டாள்.

'நாணாஜி, நீங்கள் இங்கு இவ்வளவு அமைதியாக வேலை செய்வதைத் தடுக்க ஒரு சில துரோகிகள் முயற்சிக்கிறார்கள் என்பது நூற்றுக்குநூறு உண்மை. ஆனால் அவர்களில ஒருவர் என்னுடைய தந்தை என்று சொல்ல வெட்கப்படவில்லை. இதில் வெட்கப்படுவதற் கொன்றுமில்லை. ஆனால் பணக்காரனுக்குள்ள குணம் தனியானது. சுய நலம்தான் பிரதானம். இதற்காக அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யத்தயாராய் விடுவார்கள். நீங்கள் இங்கு வந்து ஏதோ ரகஸ்ய சதி செய்வதாக என் தந்தை போலீசாருக்கு ரகஸ்யமாக அறிவித்திருக்கிறாராம்.

தவிரவும் என்னுடைய தங்கை புருஷர்கள் கைங்கரியமும் உங்களுக்கு எதிராய்த்தானிருக்கிறது. மூன்றா நாளிலிருந்து என் தந்தையும் சகோதரிகளும் என்னையும் என் தம்பியையும் ஒரே யடியாகத் தலை கவிழச் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். இதெல்லாம் உடன் பிறந்தவர்களுக்குள்ளேயே உள்ள வேற்றுமையைக் காட்டும் அறிகுறிகள்.

நான் சகுந்தலாவை மணக்க அனுமதி வேண்டுமென்று தந்தையைக் கேட்டேன். அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? அதிலுள்ள விபரீதமான பாகத்தை விட்டுவிட்டு சாரத்

தைச் சொல்லுகிறேன். உனக்கும் எனக்கும் இன்றல்ல. என்றோ சம்பந்தமில்லை. நீ இனி விடுதலைப்பத்திரம் வாங்கிக் கொண்டு விட்டால் போதும்,' என்று கத்தினார். என் தம்பி வந்தான். 'என் அண்ணனை மட்டும் அனுப்ப வேணும்! என்னையும் அனுப்பி விடுங்கள். அப்புறம் நீங்களும் உங்கள் பெண்களும், மாப்பிள்ளை மகாராஜாக்களும் 'சனி விட்டது' என்று இருக்கலாம்' என்றான். அவரோ ரொம்ப சரி. பருத்தி புடவையாகக் காய்த்தது. சனி விட்டால் சங்கடமேயில்லை என்று ஆத்திரத்துடன் பதில் அளித்தார்.

மனிதன் ஆத்திரங் கொண்டால் மிருகமாகி விடுகிறான். அதுவும் சுய நல உணர்வு படைத்தவனுக்கோ சொல்லவே வேண்டாம். ஏன் என்றால் சுய நல உணர்ச்சி மிருக உணர்ச்சியைக் காட்டிலும் கேவலம். இது என் தந்தையின் ஏகபோக உரிமையாக இருப்பதில் வியப்பில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். நான் விடுதலைப் பத்திரம் வாங்கிக்கொண்டு விட்டால் தங்கள் ஆடம்பரங்களுக்கு அவஸ்தையில்லை என்று என் சகோதரிகள் நினைக்கலாம். என் தம்பி இன்னும் மேஜராகவில்லை. ஆகவே நானும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை. இன்று அவர் இதயம் கெடு மதியால் விஷமாக்கப் பட்டிருக்கலாம். இதிலிருந்து அவரை நான் விடுவிக்க வேண்டும். அல்லது அவர் இதிலேயே உழன்று அழிந்துவிட வேண்டும். என்ன இருந்தாலும் நான் அவர் மகன் எனவே எனக்குள்ள உரிமையையோ, கடமையையோ விட்டுவிட முடியாது. நியாயத்துக்கு அவர் திரும்பும்படி செய்ய வேண்டியது என்னுடைய முழு முதற் கடமையாகும்! என்று அவன் கபகபவென்று ஒரே உணர்ச்சி வேகத்துடன் சொல்லி முடித்ததும் நான் ஆழ்ந்த யோசனையுடன் மவுனமாக இருந்தேன். அவனும் நிறுத்திப் பெருமூச்சு விட்ட வண்ணம் எங்கேயோ திரும்பிப் பார்த்தான். ஆனால் சகுந்தலாவுக்கு எங்களைப்போல மவுனமாயிருக்க முடியவில்லை. (தொடரும்)

கன்னியாகுமரி என்னும் கட்டுரை எழுதிய அதே ஆசிரியை இவ்விதழில் ஒரு லேடி டைபிஸ்டின் கதையைச் சொல்லுகிறார். பெண் உள்ளம் அறிய சீனுவாசனுக்கு மட்டும் அல்ல—நம்மில் அநேகருக்கு முடிவதில்லை என்பதற்கு விமலா உதாரணம் இல்லையா?

லேடி டைபிஸ்ட்

[ரங்கதேவி]

ஸ்ரீ சீனுவாசன் அவர்கள் காரியாலயத்தில் ஒரு டைபிஸ்ட் வேண்டுமென்று தினசரியில் விளம்பரம் செய்திருந்தார். 364 பேர் விண்ணப்பம் போட்டிருந்தனர். அவற்றில் 259 பெண்களிடமிருந்து வந்திருந்தன. அவற்றில் தனக்குத் தகுந்தவைகளாகத் தோன்றிய 20 பொறுக்கி எடுத்து தன்னை நேரில்வந்து காணும்படி சீட்டு அனுப்பினார்.

இருபது பேரும் பெண்கள். கோணவகிடும் உதட்டுப் பூச்சும் நகப் பூச்சும் பூசிக்கொண்டு 11 பெண்கள் புடவை கட்டிக் கொண்டு வந்தனர். எட்டு ஆங்கிலோ இந்தியப் பெண்கள் உயர்ந்த குதிகால் காலணிகள் அணிந்து 'டக்டக்' என்று நடந்து வந்தனர். அவர்களில் ஒருவராவது சீனுவாசனுக்குப் பிடிக்கவில்லை. கடைசியில் வந்தாள் விமலா. தயங்கித் தயங்கி நடந்து கொண்டு மேஜையின் முனையைக் கையால் பற்றிக்கொண்டு மருதாணியால் சிவந்திருந்த கால் கட்டை விரலைப் பார்த்துக் கொண்டு நின்றாள். சீனுவாசன் கண்களைக் கசக்கி விட்டுக் கொண்டான். இந்த 1948ம் வருஷத்தில் இந்தமாதிரி பெண் ஒருத்தி வேலைதேடி வருவாள் என்று அவன் கனவில்கூட நினைக்கவில்லை.

"நிமிஷத்திற்கு எத்தனை பதங்கள் எழுதுவாய்" என்றான் சீனுவாசன்.

"நூற்றிருபது" தலைநிமிராமல்.

"டைபிங்"

"அறுபது"

"இதை சுருக்கெழுத்தில் எழுதி அடித்துக் கொண்டுவா ?"

அன்றைய பத்திரிகையைப் பிரித்து ஐந்து நிமிஷம் அதிலிருப்பதைப் படித்தான். அவள் எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்தாள். சீனுவாசன் அவளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

பளபளப்பான கருத்த கூந்தல். அழகிய குறுகிய நெற்றி. அடர்த்தியான புருவங்கள். வெல்வெட் போன்ற கண்ணிமைகள். அவை மேலேறியபோது மிகவும் அழகானவை என நினைக்கக்கூடிய கண்கள் தோன்றி உடனே மறைந்தன. நிமிர்ந்த நாசியும் சிறிய வாயும் முகத்தை நீளமாக்கி முகவாய்க்கட்டையும் சேர்ந்து அவளை 'அழகி,' அழகி

என்று பறை சாற்றின. நான் கிழைகள் மயிர் அவள் காது களின் மேற்பாகத்தை மறைத்து 'இந்தக் காதையும் சற்றுப் பாரேன்' என்பது போலிருந் தது. மூன்று சிவப்புக் கற்கள் பதிந்த காதணி அணிந்திருந்தாள். மூக்கில் ஒரு சிறு மூக்குத்தியும் கைகளில் இரண்டு வளையல்களும் அவள் ஆபரணங்கள். வெண்மை யான மில் சேலை உடுத்தியிருந் தாள்.

ஸ்ரீனுவாசன் தன்னைக் கூர்ந்து கவனிப்பதை அவள் கடைக்கண் ணால் பார்த்துக் கொண்டாள். அந்த அறையிலேயே ஒரு மூலை யில் டைப் இயந்திரம் இருந்தது. பத்து நிமிஷங்களில் தான் எழுதி யதை அடித்துக்கொண்டுவந்து கொடுத்தாள்.

பக்கங்களைப் புரட்டிக் கொண்டே ஸ்ரீனுவாசன் கேட் டான். "உனக்குக் கல்யாணம் ஆயிருக்கிறதா?"

விமலாவுக்குத் தூக்கி வாரிப் போட்டாற்போலிருந்தது. சமா ளித்துக்கொண்டு "இல்லை" என் ருள்.

"கூடியசீக்கிரத்தில் கல்யா ணம் நடந்து விடக்கூடுமா? சொந்த விஷயங்களில் தலையிடுவ தாக நினைக்கக்கூடாது. என்னு டைய வேலை அப்படிப்பட்டது. வேலை நுணுக்கங்களை யெல்லாம் நான் சிரமப்பட்டு கற்றுக் கொடுத்ததும் நீங்கள் எவனையா வது கல்யாணம் செய்து கொண்டுபோய் விட்டால்..."

"நான் உத்திரவாதம் கூறமுடி யாது. அப்படி ஏதாவது நேர்ந்த போதிலும் திடீரென்று வேலையி லிருந்து நின்றுவிட மாட்டேன் என்று மாத்திரம் சொல்ல முடி யும்"

"சரி, நீங்கள் நாளையிலிருந்து வேலை ஒப்புக் கொள்ளலாம். உங்களை நியமிக்கும் உத்தரவு ஒன்று அடித்துக் கொண்டு வாருங்கள். கையெழுத்து போட்டுக் கொடுக்கிறேன்."

உத்தரவை வாங்கிக் கொண்டு விமலா போய் விட்டாள். ஸ்ரீனுவாசன் அவள் மறைந்த வாசற்படியையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு பெருமூச் செறிந்தான். "சிறிதளவு கூட செயற்கையழகு செய்துகொள் ளாத இந்தப் பெண் என்னை இப் படி மயக்கிவிட்டதே" என்று சொல்லிக் கொண்டு தனக்குத் தானே சிரித்துக் கொண்டான்.

ஸ்ரீனுவாசனுக்கு வயது நாற்பது. மாநிறம்தான் மெலிந்து உயர்ந்த ஆகிருதி. இருபது ஆண்டுகளுக்கு முன் ஒரு பணக்காரப் பெண்ணை இரண்டாயிர ரூபாய் வரதட் சணையுடன் மணந்தான். முப்பது ரூபாயில் குமஸ்தா உத்தியோகம் வகிப்பவனுடன் ஏழை குடித் தனம் செய்ய மறுத்துவிடவே, அவன் கல்யாணம் பண்ணியும் சந்நியாசியாக இருந்தான். வாழ்க்கையில் வெறுப்புற்று கல்கத்தா சென்று பல கம்பெனி களில் பல துறைகளில் அனுபவம் பெற்று சென்னைக்கு வந்து சொந்தமாய் ஒரு கம்பெனியை ஆரம்பித்திருக்கிறான். மாதம் ஆயிரம் ரூபாய்க்குக் குறையா மல் சம்பாதிக்கிறான்.

மறுநாள் 10மணிக்கு விமலா ஆபீசுக்கு வந்தாள். பகல் ஒரு மணிநேரம் ஓய்வு தவிர மாலை ஐந்துமணிவரையில் மூச்சு விடக் கூட சாவகாசமில்லை. சரியாக 5 மணிக்கு இயந்திரத்தை மூடி விட்டுக் கிளம்பினாள்.

"ஏற்றுமதிப் பட்டியல்கள் அடிக்கவேண்டிய வேலை யிருக்கும். ஆகையால் நாளையிலிருந்து சற்று நேரங் கழித்துப் போக ஏற்பாடு செய்துகொண்டு வாருங்கள். ஐந்து மணிக்கு மேல் நீங்கள் வேலை செய்யும் ஒவ்வொரு மணிக்கும் ஐந்து ரூபாய் விகிதம் சம்பளத்தில் சேர்த்துக் கொடுக்கப்படும்" என்ருன் சீனுவாசன்.

தலையை அசைத்துவிட்டு விமலா வெளியேறினுள்.

சீனுவாசன் ஜன்னலண்டை சென்று எட்டிப் பார்த்தான். எதிரில் விளக்கு ஸ்தம்பததின் மீது சாய்ந்துகொண்டு கிரிக்கட் உடை யணிந்து ஒரு இளைஞன் நின்றுகொண்டிருந்தான். ஆறடி உயரமும் அதற்கேற்ற பருமனுமாய் இளங் கன்னிகைகள் விரும்பத்தக்க தோற்றமுடைய அந்த இளைஞனை நோக்கி விரைந்து விமலா செல்வதைப் பார்த்துப் பெருமூச்செறிந்து கொண்டே தன் நாற்காலியில் வந்து உட்கார்ந்துகொண்டு முக வாய்க்கட்டையைத் தடவிக் கொண்டு மின்சார விசிறியை முதன் முதலாய்ப் பார்க்கும் பட்டிக் காட்டானைப் போல வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

மறுநாள் விமலா ஆபீஸை விட்டுப் புறப்பட எழு மணியாய் விட்டது. முதல் நாள் வந்த யுவன் அன்று ஆறு மணிக்கு வந்தான். ஆபீசின் முன் கிழக்கும் மேற்குமாக அலைந்துகொண்டிருந்துவிட்டு ஆறரை மணிக்கு படபடவென்று படிக்கட்டுகளில் ஏறிவந்தான். அப்பொழுது தன் வேலையை முடித்துக் கொண்டு தலைமை டைபிஸ்ட் கோமளம இறங்கிக் கொண்டிருந்தாள். அந்த யுவன் கோமளத்தினிடம் "விமலாவைப் பார்க்க முடியுமா" என்று கேட்டான்.

கோமளம் மேலே வந்து எட்டிப் பார்த்தாள். விமலா வேலையில் மூழ்ந்திருந்தாள். ஜன்னலண்டை நின்றுகொண்டு கோபாலனை (அதுதான் அந்த யுவன் பெயர்) பார்த்துக் கடுவன் பூனைபோல உறுமிக் கொண்டிருந்த சீனுவாசனைப் பார்த்துவிட்டு கோமளம் பேசாமல் திரும்பிவிட்டாள். அதற்கப்புறம் கோபாலன் அங்கு நிற்கவில்லை.

மறுநாள் சாயுங்காலம் விமலாவுக்கு தேநீரும் பலகாரமும் சிற்றுண்டி சாலையிலிருந்து வந்தது. ஆபீசில் அதிக நேரம் வேலை செய்யும் எல்லோருக்கும் சிற்றுண்டி இலவசமாக அளிக்கத்தான் ஏற்பாடு செய்திருப்பதாக சீனுவாசன் விவரித்தான்.

இவ்வாறு ஒருவாரம் நடந்தது. விமலா வேலையில் சேர்ந்த பத்தாவது நாள் சாயுங்காலம் ஐந்து மணிக்குத் தேநீர் அருந்திய வுடன் சீனுவாசன்தான் வியாபாரச் சங்கக் கூட்டத்திற்குச் செல்லவேண்டி யிருப்பதாகவும் தான் வர எட்டு மணியாகு மென்றும் சொல்லி ஒரு குவியல் பட்டியல்களை மேஜைமீது போட்டு அவற்றை அடித்து வைக்கும்படி சொல்லி விட்டுக் கீழே இறங்கினுன். அங்கு அவன் கண்ட காட்சி அவனுக்குப் பெருத்த அதிர்ச்சியை உண்டாக்கிற்று. கோபாலனும் கோமளமும் ஒருவர் மீது ஒருவர் உராய்ந்துகொண்டு ஆனந்தமாய்ப் பேசிக்கொண்டு போவதைப் பார்த்தான்.

"அட பாவமே, தெய்வமே என்று அந்தப் பெண் உழைத்துக் கொண்டிருக்க இந்தத் தடிப் பயல் இப்படி அலைகிருனே. ஐயோ, பாவம், விமலா இவனை எப்படி நேசிக்கிருளோ. இது தெரிந்தால் அவள் இருதயம் வெடித்துவிடாதோ?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

கூட்டத்திலிருந்து திரும்பும் போது மணி ஏழரையாயிருந்தது. மேலே 'டக் டக்' என்று விமலா அடித்துக் கொண்டிருப்பது கேட்டதும் சீனுவாசன் மனது பச்சாதாபத்தாலும் அன்பாலும் உருகிற்று.

"நான் மிகவும் மிருகத்தனமாக நடந்துகொண்டுவிட்டேன். ஐயோ பாவம், அவளுக்கு வயது இருபதுகூட ஆகவில்லையே. வீட்டில் என்ன கஷ்டங்கள் உள்ளனவோ இப்படி வந்து உழைக்கிருள். இன்று அவளை நானே காரில் வீடு கொண்டுபோய் விட வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே மேலே போனுன்.

அங்கே கோமளம் வேலை செய்து கொண்டிருந்தாள்.

"விமலா எங்கே?" என்ருன் ஆத்திரத்தோடு.

"அவளுடைய நண்பன் வந்து கூப்பிட்டான். நான் வேலையை முடிப்பதாக ஒப்புக் கொள்ளவே அவள் அவனுடன் பேசும் படம் பார்க்கப் போயிருக்கிருள். உங்களுக்கு வேலை முடிய வேண்டியது தானே. யார் செய்தால் என்ன?" என்று சற்று துடுக்காகப் பேசினுள் கோமளம்.

சீனுவாசன் பதில் பேசவில்லை. அவன் இருதயத்தில் ஒரு புயலடித்துக் கொண்டிருந்தது.

"இந்தப்பிசாசு கோமளம் விமலாவுக்குத் துரோகம் செய்தது போதாதென்று அவளுக்குப் பரிந்து பேசவும் வந்து விட்டாளே" என்று பொருமினுன்.

விமலாவின் மீது தனக்கு ஏன் அவ்வளவு பாசம் ஏற்படவேண்டும்? அவளைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று எத்தனை சூழ்ச்சிகளைச் செய்திருக்கிருன். அவள் மீது காதலா? சீச்சீ—அவள் வயதென்ன அவன் வயதென்ன? அவளைப் பெண்ணென்று சொல்லலாமோ? பின் ஏன் அவள் மீது அவ்வளவு அக்கரை? அதற்குமேல் அவன் மூளை வேலை செய்ய மறுத்தது அன்றிரவு பூராவும் அவன் தூங்கவேயில்லை. 'விமலாவை எச்சரிக்க வேண்டு' மென்று ஒரு கணம் நினைத்தான். மறு நிமிஷம் 'அவளுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம். ஆபீசில் உள்ள பலரோடு அவளும் ஒருவள்' இந்த சமாதானத்தை ஏற்றுக்கொள்ள அவன் இருதயம் மறுத்தது.

இந்த விஷயத்தைக் குறித்து விமலாவிடம் பேச அவனுக்குத் தைரியம் வரவில்லை. ஆனல் அவளைத்தன் அருகில் எவ்வளவு நேரம் முடியுமோ அவ்வளவு நேரம் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்ற ஆசையும் குறையவில்லை. எனவே பிரதி தினமும் விமலாவுக்கு என்ன வேலை கொடுப்பது என்பதைப் பற்றி யோசனை செய்வதிலேயே அவன் மூளையில் பாதிக்கு மேல் செலவழிக்க வேண்டியதாயிற்று காகிதம் கிடைக்காத நாளில் அவன் பல ரீம் காகிதத்தை வீணக்கியதை நினைத்திருந்தால் அவனுடைய உள்ளத்திலிருந்த வியாபாரியின் இருதயம் அதிர்ந்து போயிருக்கும்.

பல முறை தன்னைத்தானே பரிட்சித்துக் கொண்டதில் பின்னுல் விமலா இல்லாமல் உயிர் வாழ முடியாதென்ற நிலைக்கு வந்திருந்தான். அவளைத் தகுந்த ஓர் இளைஞனுக்கு விவாகம் செய்வித்து அவனைத் தன் ஆபீஸ் மானேஜராக வைத்துக் கொண்டு பிறகு அவர்களுக்கே எல்லாவற்றையும் உயில் எழுதி வைத்து விட்டுத்தான் ஹிமாலயத்திற்குப் போய் விடுவது என்றெல்லாம் திட்டம் போட்டான்.

ஒரு நாள் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. என்றையும்விட முன்னதாக அன்று அவன் ஆபீசுக்கு வந்தான். அதற்குள் எவரும் வந்திருக்க முடியாதென்று அவன் நினைத்தான். ஆனுல் உள்ளே நுழைந்ததும் திடுக்கிட்டுப் பின்வாங்கினுன். அங்கே கோபாலனும் கோமளமும் ஒருவரை ஒருவர் கட்டி முத்தமிட்டுக் கொண்டிருப்பதைப் பிரத்தியட்சமாகப் பார்த்து விட்டான். பேசாமல் இறங்கிப் போய்விட்டான்.

அன்று சாயுங்காலம் தேநீர் அருந்தும் போது மனதை திடப்படுத்திக் கொண்டு அதுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்த பேச்சை ஆரம்பித்தான்.

"விமலா, உன் சொந்த விஷயத்தில் நான் பிரவேசிப்பதற்கு நீ வருந்தக் கூடாது. உனக்குத் தகப்பனுரிருக்கிருரோ இல்லையோ, எனக்குத் தெரியாது."

விமலா "இல்லை" என்பதற்கறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

"என்னை உன் தகப்பனுர்ஸ்தானத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறேன். நீ உயிர்போல் நேசிக்கும் கோபாலன் அயோக்கியன். அவன் கோமளத்தை முத்தமிடுவதை நான் நேராகப் பார்த்தேன்—"

"அது எனக்குத் தெரியும்—அவள் கோபாலனைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிருளாம். அதாவது அவன் அழகைக் கண்டு மயங்கி இன்னெரு பெண் அவன் வலைக்குள் விழா விட்டால்—"

சீனுவாசன் முகத்தில் அசடு வழிந்தது.

"அப்படியானுல் விமலா, நீ என்ன செய்யப் போகிருய்?"

"உங்கள் ஆபீசில் டைப் அடித்துக் கொண்டிருக்கப் போகிறேன்."

அவள் முகத்தில் ஒரு விஷமப் புன்னகை தவழ்ந்தது.

"அப்படியானுல் என் மனதை நீ தெரிந்து கொண்டாயா?"

"எப்படித் தெரிந்து கொள்ளாதிருக்கமுடியும். அதோ அந்த பீரோ கண்ணுடியில் உங்கள் முகம் எனக்குத் தெரிந்து கொண்டு தானே இருக்கிறது. விரல்கள் அடித்துக் கொண்டிருந்தால் மனதுக்கும் கண்களுக்கும் வேறு வேலை இல்லையா? நீங்கள் மும்மரமாக வேலை செய்வது போல நடிக்கும் பொழுதெல்லாம், என்னையே கவனித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றறிவேன். இப்படி தாபலுக்குப் போகாத கடிதங்களையும் பட்டியல்களையும் மீண்டும் மீண்டும் அடித்துக்கொண்டிருந்தால், என் வேலைக்கு மோசம வந்துவிடுமென்று பயந்து நானே இதைக் குறித்துப் பேச வேண்டுமென்று நினைத்தேன்."

"உன் வேலைக்கென்ன?"

"இதே ரீதியில் சென்று கொண்டிருந்தால் இன்னும் சில வாரங்களில் உங்கள் பாங்கிப் பண மெல்லாம் காகிதத்திற்காகவே அழிந்து விடும். அப்புறம் என்னை யார் வேலைக் கெடுத்துக் கொள்வார்கள்."

"அப்படி யென்றால்"

விமலா பதில் பேசவில்லை. சீனுவாசன் எழுந்து வந்து அவள் தலை மயிரைக் கோதி விட்டான். பிறகு அவள் கன்னங்களைத் தடவி விட்டான்.

"என்னைக் கண்டால் உனக்கு அருவருப்பாக இல்லையே?"

"இருந்தால் இந்த முட்டாள் வேலையைச் செய்து கொண்டு இத்தனை நாட்கள் இருந்திருப்பேனா!"

அடுத்த வாரம் ஸ்ரீமான் சீனுவாசனுக்கும் ஸ்ரீமதி விமலாவுக்கும் ரிஜிஸ்திரார் ஆபீசில் விவாகம் நடந்தேறியது. சில பொறுக்கிய நண்பர்கள் மாத்திரம் வந்திருந்தனர்.

இந்தப் பெண்கள் உள்ளத்தின் ஆழத்தைக் கண்டு பிடிக்க முடியவே முடியாது.



கிழக் குழந்தை

பிரான்ஸ் தேசத்தில் மக்ளுக் என்று ஒரு பாதிரி இருந்தார். அவர் ஒரு நாள் தெருவழியே போகும் போது ஒரு கிழவன் அழுது கொண்டிருந்தான்,

'உனக்கு என்ன வயசு?' என்று கேட்டார் பாதிரியார்.

'81' என்றான் கிழவன்.

'இவ்வளவு வயசான நீ இப்படி அழுகிறாயே! ஏன்?'

'என் அப்பா என்னை அடித்து விட்டார்'

'அடேடே! அவர் வயசு என்ன?

'113' என்றான் கிழவன்.

'உன்னை அவர் ஏன் அடித்தார்?'

'எங்கள் தாத்தாவுக்கு நான் என் தொப்பியைத் தூக்கி மரியாதை செய்யவில்லை என்று.'

'உனக்குத் தாத்தாவா? அவருக்கு என்ன வயசு'?

'143!'

சகோதரிகளின் சந்தேகங்கள்

ஸ்ரீமதி அன்னபூரணி

சிறு விஷயங்களில் மனஸ்தாபம்.
ஸ்ரீமதி கமலாகிருஷ்ணன்—பம்பாய்

"மூன்றுமாதமாக நான் ஸ்நானம் செய்யாம லிருக்கிறேன். (கர்ப்பம்) ஒரு குழந்தை நமக்குப் பிறக்கப் போகிறதென்று அதிக குதூகலத்துடன் தானிருக்கிறேன். ஆனால் எனக்கு எரிச்சல் அதிகமாயிருக்கிறது. அடிக்கடி கோபம் வந்துவிடுகிறது. என் கணவன்மீது காரணமில்லாமல் கோபித்துக் கொள்கிறேன். அவர் இன்னும் யாருடனாவது சற்று சந்தோஷமாகப் பேசினால் எனக்கு அசாத்திய எரிச்சலாக இருக்கிறது. என் கணவனிடம் மிகவும் தவறாக நடந்து கொண்டு விட்டதாகத் தனியே யிருக்கும் போது பச்சாதாபப்படுகிறேன்."

பதில்: கர்ப்பத்தின் போது முதல் சில மாதங்களில் உடல் கூற்றில் பல பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. உங்கள் சரீரத்திற்குள் மற்றொரு ஜீவன் வளர ஆரம்பித்திருக்கிறது. அந்த ஜீவன் உங்கள் ஆகார சத்தைப் பகிர்ந்து கொள்வதுடன் வயிற்றிலிருக்கும் பித்தாசயம் ஆகாரப்பை போன்ற உறுப்புகளையும் அழுத்துகிறது. அதனால்தான் 'மசக்கை'க் குறிகள் ஏற்படுகின்றன. ஆகாரக் குறைவினால் சோர்வும் நரம்புகள் மீது அழுத்துவதால் எரிச்சலும் உண்டாகிறது.

போதுமான ஓய்வும் சரியான ஆகாரமும் மிக முக்கியமான விஷயங்கள். ஓய்வினால் நரம்புகள் புத்துயிர் பெறும். நல்ல ஆகாரத்தால் இரத்தம் சுத்தமாயிருப்பதோடு அநாவசிய எரிச்சலும் தவிர்க்கப்படும்.

கொஞ்சம் அதிகப் படியான கால்ஸியம். உடனடியான குணத்தைக் கொடுக்கும். கால்ஸியம் குளூகோனேட்மாத்திரைகளை சாப்பாட்டுக்குப் பிறகு ஒன்று சாப்பிட்டு வரலாம். அல்லது பிரவாள பஸ்பம் நெய்யில் கலந்து சாப்பிட்டு வரலாம். தினசரி இரண்டு முறை வெற்றிலை போட்டுக்கொள்வது நலம்.

நிறையப் பழங்கள் சாப்பிடுவதோடு தினசரி ஆகாரத் திட்டத்தில் பசலைக்கீரை போன்ற கீரைகளைச் சேர்த்து வந்தால் மலச்சிக்கல் அணுகாது.

மனதைத் தெளிவாகவும் கவலைகள் இல்லாமலும் வைத்துக் கொள்ளுங்கள். தினசரி ஒரு மணி நேரம் ஏதாவது நாம ஜப பஜனை (ராம நாமம் போதும்) செய்யும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள். அதனால் நல்ல பலனை விரைவில் காண்பீர்கள்.

தினசரி சிறிது தூரம் நல்ல காற்றில் உலாவிவருவது உசிதம்.

"சொறசொறப்பான கைகள்."
"மீனா" மதுரை.

"வீட்டு வேலையும் தோட்ட வேலையும் சேர்ந்து என் கைகளை மிகவும் முரடாகச் செய்துவிட்

டன். எனக்கு விவாகமாகி 3 மாதங்களாகின்றன. இங்கிலாந்தில் மூன்றாண்டுகள் படித்துவிட்டு வந்திருக்கும் என் கணவன் என் கைகளைத் தடவிப் பார்த்துக்கொண்டிருந்த பொழுது எனக்கு அவமானமாக இருந்தது. கைகளை மிருதுவாக்க என்ன செய்யலாம்?

பதில்: அரை மூடி எலுமிச்சம் பழத்தைக் கைகளில் தேய்த்து சுத்தம் செய்துகொள்ளவும். நகங்களுக்கும் உள்ளங்கைக்கும், மருதாணி இட்டுக்கொள்ளவும். இரவில் படுக்குமுன் சிறிது தூங் வாதித்தைலத்தையாவது தேங்காயெண்ணெயையாவது கைகளில் தேய்த்துக் கொள்ளவும்.

மன்னியின் கொடுமை

'ம,' சென்னை.

''எனக்கு வயது 14. என் பெற்றோர்கள் இறந்து விட்டனர். என் தமையன் ஆதரவில் இருந்து வருகிறேன். காலையில் எல்லோருக்கும் முன்னதாக எழுந்து சமையலறையைச் சுத்தம் செய்து பாத்திரங்களைத் துலக்கி காப்பி போடவேண்டும். வேலைக்காரி ஒரு ரூபாய் கூடச் சம்பளம் கேட்டதற்காக அவளை நிறுத்தி விட்டார்கள். ஏழு மணிக்கு மன்னி இறங்கிவந்து பல் தேய்த்து, காப்பி குடித்துவிட்டு அண்ணாவுக்குக் காப்பி எடுத்துக் கொண்டு போவாள். ஒன்பது மணிக்குள் நான் சமைத்துவிட்டு குழந்தைகளைக் குளிப்பாட்டிவிட்டு பள்ளிக்கூடம் போக வேண்டும். சாயுங்காலம் ஒரு படி அரிசியும் அரைப்படி உளுந்தும் அரைத்து வைக்கவேண்டும். பிறகு டிபன் செய்து டீ தயார் செய்யவேண்டும். ஒரு சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமையிலும் கூட ஒழிவுகிடையாது. மன்னியின் சகோதரிகள் வந்துவிட்டால் இன்னும் வேலை அதிகம். இவ்வளவும் செய்ததற்காக ஒரு நல்ல வார்த்தை கிடையாது. நான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டே யிருக்கிறார்கள். வேலை செய்வதற்குக்கூட நான் தயங்கவில்லை. எப்பொழுது என்னைக் கண்டாலும் ''சிடு, சிடு'' என்று இருப்பதுதான் சகிக்கவேயில்லை. இந்த வயதிலேயே எனக்கு மிகவும் வெறுப்புண்டாகிவிட்டது. நாங்கள் இருக்கும் வீட்டில் கிணறு இல்லை. ஒருநாள் கிருஸனுயிலை ஊற்றிக்கொண்டு துணிகளைப் பற்றவைத்துக்கொண்டு விடலாமென்று எண்ணினேன். ஒரு வேளை செத்துப்போகாமல் அங்கஹீனமாய்விட்டால் என்ன செய்வது?

பதில்: உன் சோகக் கதை என் மனதை வாட்டுகிறது. நீ பிரதிதினமும் உனக்குத் தெரிந்த படி கிருஷ்ணனை பஜனை செய்து கொண்டுவா. அவர் கட்டாயம் வழி காட்டுவார். உயிரைப் போக்கிக்கொள்ள நினைப்பது கூடத் தவறு. மனித ஜன்மம் கிடைப்பது மிக மிக அரிது. அதை வீணாக்கி விடக்கூடாது. சென்னையில் சில பெண்கள் விடுதிகள் உண்டு. அவற்றில் உன்னைச் சேர்த்துவிடும்படி உன் தமையனை வேண்டிக்கொண்டு பார்க்கலாம். அவர் யோசனைப்படி விண்ணப்பம் போட்டுப் பார். மன்னியைக் குறித்து அண்ணாவிடம் குறை கூறுவதால் ஒரு நன்மையும் ஏற்படாது. பொறுமையாக இருந்தால் கட்டாயம் கண்ணன் அருள் புரிவான்.

அன்பே தெய்வம் என்று அறிவித்த ஞானிகளைத் தற்காலத்தில் வகை தெரியாதவர்கள் என்று சிலர் தூற்றுகிறார்கள். அவர்கள் இக் கட்டுரையை ஊன்றிப் படிக்கட்டும்.

அன்பின் வண்ணம்

197649

திருப்புகழ் மணி

அன்பும் சிவமும்
இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமென்று
யாரும் அறிகிலார்
அன்பே சிவமென்று
யாவரும் அறிந்தபின்
அன்பே சிவமாய்
அமர்ந்திருந்தாரே.

திருமூலர் திருமந்திரத்தில், அன்பும் சிவமும், ஒரே வண்ணம் என்று கூறினார். சிவத்தின் வண்ணத்தை, அப்பர் சுவாமிகள் ஒருவாறு சித்திரிக்கின்றார்.

விரும்பும் வண்ணமும்
வேதத்தின் வண்ணமும்
கரும்பியின் இன் மொழி
காரிகை வண்ணமும்
விரும்புவார் தம் வினை
தீர்த்திடும் வண்ணமும்
அரும்பும் வண்ணமும்
ஆவர் ஐயாணரே.

அன்பும் சிவமும் இரண்டான ஒன்றாயிருந்ததால், சிவத்தின் வண்ணத்தாலே அன்பின் வண்ணத்தை நாம் நன்கு தீர்மானிக்கலாம். விரும்பும் வண்ணம் அன்பின் முதன்மையான பண்பாகும். அதாவது, உலகத்தையெல்லாம், இழுக்கும் குணம். உலகம் ஒன்றென்றும், ஜீவராசிகளெல்லாம ஒன்றென்றும் ஆகவே ஒவ்வொரு ஜீவனும் நம்முடைய ஜீவனென்றும், எண்ணங்களால் தூண்டப்படுவது விருப்பம். உண்மையான அன்பு உடையவர்கள் உலகத்தை வெறுக்க மாட்டார்கள். உலகத்தில் வெறுக்கத் தக்கவை தீய செயல்கள் என்றும் உணர்ந்து, தீமையை வெறுப்பார்களே யன்றி ஜீவன்களை வெறுக்க மாட்டார்கள். ஒரு நண்பன் அடுத்த வீட்டிற்கு நெருப்பிடுவதாக விருந்தால் அந்த செயலிலிருந்து அவனை விடுவித்து, அவனிடத்தில் இருக்கும் அன்பால், அவனை மீட்கப் பார்ப்பார்கள், உண்மை சிநேகிதர்கள். இச் செயலில், நண்பனிடத்தில் இருக்கும் அன்பும் விருப்பமும், தீய செயலில் இருக்கும் வெறுப்பும் வெளியாகும். உலகெலாம் ஒன்றாகப் பாவிக்கும் பெரியோர்கள் தீய செயல்களை வெறுத்து ஜீவர்களிடத்தில் அளவற்ற அன்பாயும் விருப்பமாயும் இருப்பார்கள். சிவ குணங்களெல்லாம் பெரியோருடைய குணங்களாகலின், அன்பின் முதன்மையான வண்ணம். ஜீவராசிகளிடத்தில் ஏற்படும் ஒரு விருப்பம்.

ஜீவராசிகளிடத்தில் இருக்கும் விருப்பந்தான், அஞ்ஞானத்தால், உணர்ச்சிக் குறைவினாலும், நான், எனது, என்ற சுய நலம் கருதும் இழுக்காகும். நான் யார் என்று பரிசோதித்து, உலகெலாம் நிறைந்த ஜீவராசிகள் தன் அகத்தில், இருப்பதாக கண்ட ஞானிகளின் சுய நலம், தன்னலம் உலகத்தையே முழுவதும் அளாவின

பக்தியும் ஞானமும்; ஆத்மாவின் இரண்டு இறக்கைகள் - பாக்கியானது ஞானத்தையூட்டிவிடும். ஞானமும், பக்தியும் ஒன்ருய்த் திகழ்கின்ற ஜீவன் முக்தனுய் விளங்குவான். ஆதலால்தான் உலகத்தைத் தன்னுள்ளும், உலகத்தில் தன்னையும், பார்க்கின்ற மகாத்மாவுக்கு வெறுப்பேது, துக்கமேது, மோகமேது, என்று உபநிஷத்துகள் கதறுகின்றன. ஆகவே, விரும்பும் வண்ணம், அன்பின் குணம் இந்த விருப்பம். காரண காரியங்களால் ஏற்படுவதல்ல. இடம், பொருள், ஏவல் இவைகளுக்குக் கட்டுப்பட்டதல்ல. அது ஆத்மாவின் குணம். நன்று செய்தாலும் தீது செய்தாலும், ஜீவனை ஜீவனுக்க மாட்டார்கள். ஆகவே எவர் எவ்வளவு கொடிய பாவம் செய்பினும், பாவம் செய்கின்றவனுக்கு, ஆண்டவன் கருணை எக் காலமும் தடைப்பட்டு நிற்காது. அதாவது ஒரு காலமும் தடைப்பட்டுநிற்காது.பசு பாபச் செயலைத் தடுத்து, எதிர்க்கும் போது, பாபியை விரோதிப்பது போல் தோன்றிடினும், நன் குணர்ந்த பெரியோர், தீய காரியத்தின்மேல் வெறுப்பாகத்தான் அதைக் கருதுவார்கள். பாபம் செய்யும் ஜீவனை ஆண்டவன் தன் அன்பினல் அணைத்து நல் வழியில் திருத்தி தன் அன்பால் ஆண்டுகொள்வான். இது சிவத்தின் வண்ணம். அது விரும்பும் வண்ணம்; அது முதன்மையான வண்ணம்.

இதற்கு உதாரணமாக குழந்தையினிடம், தாய்க்கு இருக்கும் அன்பைச் சொல்லலாம். மேன் மக்களாகிய தாய்மார்கள், குழந்தையின் ஓலைக் கேட்ட உடனே உள்ளமுவந்து அம்ருதமாகிய பால் சுரந்து, அன்புருவாகவே மாறி விடுவார்கள். இத் தாய்மார்களின் அன்பு உலகத்திற்கே உரியதென்று கருதிவிட்டால், அவர்கள் ஜெகன் மாதாவாக ஆகிவிடுவார்கள் அல்லவா? காரியங்கள் ஆகிய எல்லாம் ஒதுக்கி அன்பின் தன் மயத்திஞல் பொங்கும் ஆசியும் சேவையும் அன்ரே விரும்பும் வண்ணம். முருகனை எவ்வளவும் அணைந்து அமர்ந்திருந்தும், பராசக்தியின் விரும்பும் வண்ணம் அம் முருகனிடத்தில் குறையவில்லையாம். குழந்தை, பக்தன் இவர்களன்பையும் தாயுமானுர் ஒருவாறு காட்டுகின்ருர்.

ஊசி காந்தத்தினைக்
கண்டணுகல் போல
ஓரளவும் உன்னி [ர்கள்
உன்னி நண்ணுவார் அன்

என்ருர்.

ஊசியின் வண்ணமும் காந்தத்தின் வண்ணமும் விரும்பும் வண்ணமாகும். ஊசி ஜீவனுகவும், காந்தம் உலகெலாம் நிறைந்த பரம் பொருளாகவும் ஜீவராசிகளின், உயிர்களின் நிறைந்த உயிராகவும் கருதினல், விரும்பும் வண்ணத்தின் உண்மையான பண்பு வெளிப்படும்.

மறு இதழில், வேதம் அன்பின் வண்ணம் எவ்விதம் வேதத்தின் வண்ணம் ஆகும் என்று விசாரிப்போம்.

(தொடரும்)

உடலோம்புதல்

நொச்சி

டாக்டர் நாமகிரி

"புழைக்கடைக் கீரை பத்தியத்துக்குதவுமா?" என்று வீட்டில் பெரியவர்கள் மேல் நாட்டு இறக்குமதிப் பொருள்கள் மீது நமக்குள்ள மோகத்தைக் குறித்துச் சொல்வதை எல்லோரும் கேட்டிருப்பார்கள்.

இந்தக் கட்டுரையில் எல்லாப் புழைக்கடைகளிலும் எளிதாகப் பயிராகும் நொச்சி இலையின் உபயோகங்களை வாசகர்களுக்குச் சொன்னால் பயனடைவார்கள் என்று எழுதுகிறேன்.

மலேரியா ஜுரத்திற்கு மிளகுடன் நொச்சி இலையைச் சேர்த்துக் கஷாயம் செய்து கொடுக்கலாம். அதே கஷாயத்தை வயிறுப்பிசம், வயிற்றுவலி, முடக்கு வாதம், நாக்குப்பூச்சி இவற்றை நீக்க கொடுக்கலாம். தலைப்பளுவை நீக்க இலைகளை நசுக்கித் தலையில் வைத்துக் கட்டுவார்கள்.

பிரசவித்த பின் ஸ்நானம் செய்விக்கும்போது நொச்சி இலையை போட்டுக் காய்ச்சிய ஜலத்தை விடுவார்கள். இதனால் சீதளம் சேராமல் தடுக்கலாம்.

முடக்கு வாதத்தினால் வீங்கியிருக்கும் பூட்டுகளுக்கு மகாநாராயணத் தைலம் அல்லது பிண்ட தைலத்தை தடவி நொச்சி இலையை வேகவைத்து ஒத்தடம் கொடுக்க நோயகலும். நீர்க்குண்டித் தைலம் (நொச்சி இலைக் கஷாயத்திலிருந்து வடித்தது) வலிகளை குணப்படுத்துவதற்கு திவ்யௌஷதம். நீர்க்குண்டித் தைலத்தைத் தடவி சூடான நொச்சி இலைக் கஷாயத்தை மேலே விட முடக்கு வாதம் விரைவில் நீங்கும்.

நொச்சி இலைக்கு கிருமிகளைக் கொல்லும் சக்தியுண்டு. கருநொச்சியை வேலிகளாய் அமைப்பதால் கொசு உபத்திரவம் குறையும்.

ஆஸ்ஸாமியர் நொச்சி இலைக் கஷாயத்தைக் கொடிய விஷ ஜுரங்களை அகற்றக் கொடுக்கிறார்கள்.

மலேரியா ஜுரத்திற்கு நொச்சி இலைக் கஷாயத்தைப்பின் வருமாறு தயாரிக்கலாம்.

நொச்சியிலை	10	ரூபாயிடை
மிளகுபொடி	1	,,
வெல்லம்	10	,,
தண்ணீர்	40	,,

நாலிலொருபங்காகக் காய்ச்சி வடிக்கவும்.

தினசரி இரண்டு அல்லது மூன்று முறை ஒன்று அல்லது

பார்க்கப்போனால் வெறும் நொச்சிச் செடிதான். ஆனால் இப்படி அலக்ஷியமாகப் பேசும் அந்த நொச்சி எவ்வளவு பிரமாதமான ஔஷதமாக விளங்குகிறது! டாக்டர் நாமகிரி இதைவிடச் சிறப்பாக நொச்சியைப்பற்றி எழுத முடியாது.

இரண்டு ஒளன்ஸ் கஷாயம் கொடுக்கவும்.

கஷாயம் கொடுப்பதற்கு முன் மலச்சிக்க லிருந்தால் அதை அகற்றிவிட வேண்டும். அல்லது எனிமா கொடுக்கலாம். இந்தக் கஷாயத்தை அதிகமாகக் கொடுத்து விடுவதால் ஒருவித கெடுதலும் நேராது.

மிகக் கடுமையான குளிருட னும் மூளையைத் தாக்கிக் கொண் டும் வரும் விஷ ஜுரத்திற்கு இந்தக் கஷாயம் கைகண்ட மருந்து. முதல் மூன்று, நான்கு நாட்களுக்கு தினசரி மூன்று அல்லது நான்கு முறை கஷாயம் கொடுக்கலாம். பிறகு! தினசரி இரண்டு முறை கொடுத்து வந் தால் போதும். நான்கு நாட்களில் கட்டாயம் குணம் ஏற்படும்.

ஒருநாள் விட்டு வரும் ஜுரத் தில் இரண்டாவது தடவை வரும் ஜுரம் முதற் தடவையைவிட குறைவாக இருக்கும். மூன்று முறை வரவே வராது.

பார்லி அரிசி வேகவைத்த நீர், பழரசம், மோர் இவை உகந்த ஆகாரம். லங்கணம் போடுவது மிக்மிக உசிதம். கொதித்தாறிய வெந்நீரை தாகமெடுக்கும் போதெல்லாம் கொடுத்து வர லாம்.

நொச்சியைப் பயிர் செய்யும் முறை:—

மழை காலத்தில் கிளைகளை ஒடித்து நட்டுவிட்டால் பிழைத் துக்கொள்ளும். பிறகு கவனிக்க வேண்டாம். வேனிற் காலத்தில் ஜலம் விடவேண்டிய அவசிய மில்லை. ஆடுமாடுகள் நொச்சியை தொடுவதில்லை. ஆகையால் நொச்சி நல்ல வேலியாகவும் அமையும்.



பாரதியாரும் பெண்மையும்

“சசிரேகா”

நம் நாட்டில் பெண்மையின் நிலைமையைப் பற்றித் தவறான அபிப்பிராயங்கள் பல நிலவி வருகின்றன. பெண்களுக்கு நாம் நம் சமூகத்தில் சரியான இடத்தைக் கொடுக்கவில்லையென்றும், அவர்களுக்குச் சமத்துவமும் நியாயமான உரிமைகளும் வழங்கப்படவில்லையென்றும் கூறப்பட்டு வருகிறது. இப்பொழுது மட்டுமல்ல, பண்டைக் காலந்தொட்டே இப்படித்தான் என்று ஆராய்ச்சியற்றவர்கள் கூறுகிறார்கள். இக்கூற்று தவறு என்பதைப் பலர் பல சமயங்களில் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

அறிவுள்ளவர்களும் கல்வியுள்ளவர்களும் ஒழுக்கமுள்ளவர்களும், ஆண் பெண் என்ற வித்தியாசம் இன்றி எப்பொழுதும் நம் நாட்டில் மதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். வேத காலத்தில் பல பெண்மணிகள் ஞானிகளாகவும் ஆசார சீலர்களாகவும் விளங்கியிருக்கிறார்கள். முக்கியமாக கார்க்கி என்னும் மாது சிரோன்மணியையும் ரிஷிபத்னிகளையும் உதாரணங்களாகக் கூறலாம். அவர்கள் இயற்றிய வேத கீதங்களும் மந்திர வாக்கியங்களும் இன்னும் இருக்கின்றன. தமிழ்நாட்டில் சங்க காலத்தில் எண்ணிறந்த தமிழ்ப்புலவர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாடல்களும் நமக்கு இன்று கிடைத்துள்ளன. காக்கை பாடினியார், நச்செள்ளையார், பேய்மகள், இளவெயினி, வெண்ணிக்குலத்தியார், ஔவையார் முதலியோர் சிறந்த உதாரணங்கள். ஔவையார் என்னும் சொல் இன்றளவும் அறிவுக்கும் மேதைக்கும் பிரதி சொல்லாக இருந்து வருகிறது. நம் சாஸ்திரங்கள் படிக்கும் நாட்டுப் பழக்க வழக்கங்கள் படிக்கும் பெண்களுக்கு ஒரு உன்னதஸ்தானம் உண்டு. மணமான பெண்களைச் சாஸ்திரப்படி சஹதர்மபத்னிகள் என்று அழைக்கிறோம். அதாவது அவர்கள் இல்லறம் நடத்துவதில் கணவனோடு சமமான ஸ்தானமும் பங்கும் பெற்றவர்கள் என்பது அதன் அர்த்தம். மனைவியின்றி புருஷன் ஒரு விதமான சாஸ்திரீகச் சடங்கும் செய்ய முடியாது. திருவள்ளுவரும் இல்லறவியலில் இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரங்களில் நம் நாட்டில் பெண்களுக்குரிய உயரிய இடம், அரிய பொறுப்பு, உன்னத இயல்புகள் முதலியவை பற்றிக்கூறியிருக்கிறார். நம் தேசப் பழக்க பழக்கங்கள் படி, வீட்டுக்கு வந்த நாட்டுப் பெண்ணை லக்ஷ்மியாகக் கருதுவதும் அவளுக்கு மனம் நோகா

மல் நடந்துகொள்ள வேண்டு மென்பதும் உண்டு. இவ்வாறு பல விதங்களில் நாம் பெண்மைக்கு உயர்ந்த ஸ்தானத்தையும் உரிமைகளையும் வழங்கி வந்திருக்கிறோம்.

புதுமைக்கவி பாரதியார் பாடல்களில் மேற்கூறிய பழைய கருத்துக்களுடன் பல புதுக் கருத்துகளும் புரட்சிகரமான கொள்கைகளும் இருப்பதைக் காணலாம். அவர் கருத்துக்கள் பழமையுடன் புதுமை கலந்து மிளிரும் ஒரு அழகிய கதம்ப மாலைக்கு ஒப்பிடத்தகும். முரசுப் பாட்டில் ஊருக்கு நல்லது சொல்வேன் என்று அவர், பெண்கள் தற்காலத்தில் அடுப்பங்கரையே சுவர்க்கம் என்று எண்ணும்படி அடிமையாக்கப்பட்டுக் கல்வியும் அறிவும் மறுக்கப்பட்டு இருக்கும் நிலைக்கு மனங்கொதித்து,

'பெண்ணுக்கு ஞானத்தை வைத்
தான்—புவி பேணி வளர்த்திடு மீசன்
மண்ணுக்குள்ளே சிலமூடர்—நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்;
'கண்களிரண்டினி லொன்றை-
குத்தி காட்சி கெடுத்திடலாமோ?
பெண்களறிவை வளர்த்தால்-வையம்
பேதமை யற்றிடுங்காணீர்'
என்று கூறுகிறார்.

நம்மவரிற் சிலர் அறியாமையினாலும் பொறாமையினாலும் பெண்களுககுக் கல்விதர மறுத்து அவர்கள் அறிவைக் கெடுத்து வைத்திருப்பதற்கு மனம் பொறாது அவர் மேற்கண்டவாறு சீறி நம் கடமையை வற்புறுத்துகிறார். ஆண் பெண் இருவரும் சமூகத்தின் இரண்டு கண்கள் என்றும், அவற்றில் ஒரு கண்ணைக் குத்திவிட்டால் காட்சி கெட்டு விடும் என்றும் உருவகித்துக் கூறியிருக்கும் உண்மை போற்றத் தக்கது. பெண்களால் செய்ய முடியாத காரியம் ஒன்றுமில்லையென்றும் அவர்கள் ஆண்களுக்கு எவ்விதத்திலும் இளைத்தவர்கள் அல்லவென்றும் பெண்கள் வாயிலாகவே பெண்கள் கும்மிப்பாட்டில் அவர் அறிவுறுத்துகிறார்.

'பட்டங்கள் ஆள்வதும்
சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள்
நடத்த வந்தோம்
எட்டு மறிவினில்
ஆணுக்ிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று
கும்மியடி'

உயர்ந்த கருத்தை அக் கும்மிப் பாட்டில் நாம் காண்கிறோம். மேலும், 'சாதம் படைக்கவும் செய்திடுவோம், தெய்வச்சாதி படைக்கவும் செய்திடுவோம்' என்று பெண்களின் திறமைக்குக் கீழ் எல்லையும் மேல் எல்லையும் அவர் குறிப்பிடுகிறார். நாம் இழிவாக நினைக்கும் சமையல் தொழில் மட்டுமல்ல, தெய்வ சாதியையே தோற்றுவிக்கும் மிக அசாதாரணமான தொழிலை, (ஆண் மக்களால் இயலாத ஒன்றை) அவர்கள் செய்யக் கூடும் என்று பறைசாற்றுகிறார். மகாத்மா காந்தி, புத்தர், இயேசு, சங்கரர்போன்ற தெய்வச் சாதி மக்களைத் தோற்றுவித்தது பெண்களே யெனின் மேற் கூறியதில் உயர்வு நவிற்சி சிறிதேனும் உண்டோ?

பெண்ணுக்குரிய இடம், இயல்புகள் முதலிய வற்றைக் கூறும் பாரதியாருடைய ஆவேச வாக்கு நம்மை அதிரச் செய்கிறது.

ஆணும் பெண்ணும்
நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி
இவ்வையகம் தழைக்குமாம்

பூணு நல்லறத்
தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது
தாய் சிவ சக்தியாம்'

இக் கருத்து ஆண்களோடு பெண்களுக்குரிய சரி சமமான இடத்தையும், அதனால் உலகத்திற்கு உண்டாகும் பயனையும், பெண்களுக்குரிய உயர் மதிப்பையும் காட்டுகிறது,

'நாணும் அச்சமும்
நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம்
வீர சுதந்திரம்
பேணு நற்குடிப்
பெண்ணின் குணங்களாம்'

முற்காலத்தில் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பவை பெண்களுக்குரிய சிறப்பான குணங்கள் என்பதற்கும் தற்காலத்தில் பாரதியார் கூறும் மேற்கூறிய கருத்துக்கும் எவ்வளவு வித்தியாசம்! இது காலத்திற்கேற்ற ஒரு புரட்சிகரமான கொள்கை. மேலும்,

'நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும்
அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச்
செருக்கு மிருப்பதால்,
செம்மை மாதர்
திறம்புவதில்லை யெனலாம்'

என்ற நூதனக் கருத்தும் அத்தகைய ஒரு புரட்சிகரமான கொள்கையாகும். அக்காலத்துப் பெண்களுக்கு மேற்கண்ட இயல்புகளை யாராவது கற்பித்திருந்தால் அவர்கள் உடனே தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டிருப்பார்கள்.

பெண்களுக்குக் கற்புதான் சிறந்த பொக்கிஷம், அவர்கள் தம் கற்பைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்று கூறி அதே சமயத்தில் ஆண்களுக்குக் கற்பொழுக்கம் தேவை யில்லை யென்று கூறும் கசடர்களைப் பார்த்து உணர்ச்சி தோன்றப் பாரதியார் பின்வருமாறு கூறுகிறார்;

கற்பு நிலையென்று
சொல்ல வந்தார்
இரு கக்ஷிக்கும் அஃது
பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக்
கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி
மிதித்திடுவோம்'

என்றும்,

'ஆண் எல்லாம் கற்பை
விட்டுத்தவறு செய்தால்,
அப்பொது பெண்மையும்
கற்பழிந் திடாதோ?
நாணற்ற வார்த்தையன்றோ?
வீட்டைச் சுட்டால்
நலமான கூரையும் தான்
எரிந்திடாதோ?
பேணுமொரு காதலினை
வேண்டி யன்றோ
பெண்மக்கள் கற்பு
நிலை பிறழுகின்றார்'

என்றும்,

சோரரைப் போலாண்
மக்கள் புவியின் மீது
சுவை மிக்க பெண்மை
நல முண்ணுகின்றார்
காரணந்தான் யாதெனிலோ
ஆண்க ளெல்லாம்
களவின்பம் விரும்புகின்றார்
கற்பே மேலென்று
ஈரமின்றி யெப்போது
முபதேசங்கள் எடுத்துப்
பெண்களிடம் இயம்புவாரே'

என்றும் பகுத்தறிவோடு உலகியல் நிறைந்த வாக்கியங்களை எடுத்துக் கூறுகிறார். பெண்கள் கற்பழிதலுக்கு ஆண்களே காரணம் என்ற உண்மையை நமக்கு அறிவுறுத்துகிறார்.

இப்படிப் பல விதத்திலும் பெண்களுடைய தற்போதைய நிலைமைக்கு ஆண்களே பொறுப் பாளிகள் என்பதை எடுத்துக் காட்டி ஆண்கள் மாட்டுப் பெண் கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைப் பாரதியார் மேலும் கூறுகிறார்:

'ஆவதும் பெண்ணால்
அழிவதும் பெண்ணால்'

'என்ற அரைகுறை உண்மை யினை உதறித்தள்ளி, 'துன்பந்தீர் வது பெண்மையினாலடா' என்று உணர்த்தி,

'பெண்ணறத்தினை யாண்
மக்கள் வீரந்தான்
பேணுமாயிற் பிறகொரு
தாழ் வில்லை
கண்ணைக் காக்கு
மிரண்டிமை போலவே
காதலின் பத்தைக்
காத்திடு வோமடா'

என்று காதலின்பத்தைத் தரும் பெண்மையினைக் காக்கவேண் டிய நம் பொறுப்பைச் சுட்டிக் காட்டுகிறார்.

ஆகையால்,

'நூற்றிரண்டு
மலைகளைச் சாடுவோம்,
நுண்ணிடைப்
பெண்ணொருத்தி பணியிலே;
காற்றிலேறி
யவ்விண்ணையும் சாடுவோம்,
காதற்பெண்கள்
கடைக்கண் பணியிலே;

என்றும்,

'அன்ன மூட்டிய
தெய்வ மணிக்கையின்
ஆணை காட்டில்
அனலை விழுங்குவோம்,
கன்னத்தே முத்தங்
கொண்டு களிப்பினும்,
கையைத் தள்ளும்
பொற்கைகளைப் பாடுவோம்.'

என்றும் நம் கடமையைக் குறிப் பிடுகிறார். 'தொட்டிலை யாட்டும் கை உலகத்தை யாளும் கை' யாதலால், அத்தகைய சிறப்பு வாய்ந்த பெண்களைக் கௌர விக்க வேண்டியது நம் ஒவ் வொருவர் கடமையும் ஆகும். பாரதியார் ஆணையை நாம் மேற் கொள்வோமாக.

✻



புருஷனும் புடவையும்

கே. மீனுக்ஷி

மாசி மறைந்தது. பங்குனி பிறந்தது. அன்று எல்லாப் பெண்களும் மங்கல நாண் கட்டிக் கொண்டு இஷ்ட தெய்வத்தை வேண்டிக் கொள்வார்கள். எல்லோர் வீட்டிலும் தின்பண்டங்கள் செய்து சாவித்திரியம்மனை வணங்கித் தங்களுக்கு நல்வாழ்வைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்வார்கள்.

அன்று 'சுதினம்'. சந்தோஷ முகத்துடன் சொந்தமானவர்களை வரவேற்று அவர்களை உபசரித்து உண்டு களிப்பார்கள். இந்தத் தினத்தன்று பெண்கள் அழகழகான புடவைகளும், நகைகளும் போட்டுக் கொண்டு பக்கத்து வீட்டுக்காரர்களிடம் காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

* * *

நளினியும், மாலதியும் கூட அன்று நோன்பு நூற்ருர்கள். அவர்களிருவரும் கல்லிடை நல்லூர் கோபால கிருஷ்ண அய்யரின் பெண்கள். கோபால கிருஷ்ணய்யர் பம்பாயில் ஒரு ஆபீஸில் 'ஸ்டெனே'வாக வேலை செய்துகொண்டிருந்தார்.

அவருடைய மூத்த பெண் நளினி. இரண்டாவது பெண் தான் மாலதி. இருவரும் அவருடைய இரு கண்களைப் போன்றவர்கள். இருவரையும் மிகவும் செல்லமாக வளர்த்து தன்னுடைய சக்திக்கு மீறி அவர்களுக்கு எல்லாம் செய்வார்.

நளினி நாலாவது பாரம் வரை படித்து நிறுத்திவிட்டு 'கிருஷ்ண கான வித்யா நிலைய'த்தில் பாட்டுப் படித்துக்கொண்டிருந்தாள். அவள் மிகவும் அழகாகப் பாடுவாள். லளிதமான வாக்கும், இனிமையான குரலும் அவர்களுடைய அற்புதசங்கீதஅறிவுக்கு உதவியாக அமைந்து அவளை சிறந்த பாடகியாகச் செய்திருந்தன.

ஆனால் நளினி அழகானவள் என்று சொல்லக் கூடியவளில்லை. கறுப்பு நிறம், அவளுடைய அந்த எடுப்பான் மூக்கையும், துறு துறு என்ற கண்களையும், கதுப்பு மாம்பழம் போன்ற கன்னங்களையும், நீண்ட கருமேக நிறக் கூந்தலையும் ஒருவர் கண்ணிலும் படாமல் செய்தன.

அவள் கறுப்புத்தான். ஆனாலும் லக்ஷண முடையவள்.

மாலதியோ நல்ல அழகி. சிவப்பு நிறம். அவளுடைய மாறு கண்ணைக்கூட ஒரு பொருட்டாக மறைத்து நின்றது. மாலதி பாட்டில் தன்னுடைய அக்காளைப் போன்று கெட்டிக்காரியில்லை. ஆனல் படிப்பில் வெகு சுட்டி. அவள் பம்பாய்த் தமிழ்ப் பாடசாலையில் 'ப்ரீ மெட்றிக்' படித்துக்கொண்டிருந்தாள்.

அவள் சிறிது ஆசை அதிகம் உள்ளவள். தன்னுடைய தகப்பனர் செல்லம் தருகிருர் என்ற நினைப்பிலே அழுது, சாதித்து அநேக காரியததை முடித்துக் கொள்வாள். ஆனல் நளினி வீட்டின் பொறுபபையும், தகப்பனரின் நிலையையும், அறிந்த பெண்ணக வளர்ந்திருந்தாள்.

நளினிக்கு வயது 17 ஆகியிருந்தது. அவள் தன்னுடைய வயதிற் கேற்றபடி வளர்ந்து அழகாக விள்ங்கினள். அவளுடைய அழகிய அவயவங்கள்ஒவ்வொன்றும் பருவகால தேவதையால் வரையப்பட்டு தக தக வென மின்னின. ஆனல் அதே தேவதை அவைகளுக்கு காக்கைச் சிறகின் வர்ணத்தைத் தீட்டி விட்டாள்.

அதனல்தானே என்னமோ நளினியைப் பார்க்க வந்தவர்கள் எல்லாம் திரும்பியே பாராமல் இருந்தார்கள். பாவம்! நளினி இதுவரை கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக கணக்கற்ற வாலிப ஜோடிக் கண்களுக்குக் காட்சி யளித்துவிட்டாள். ஆனல் அக் கணக்கற்ற கரிய விழிகளில் ஒன்ருவது அவளுடைய கரிய நிறத்தை விரும்பவில்லை.

கல்யாண காலம் வந்துவிட்டது. இனி காட்சியளிக்கும் படலம் ஆரம்பித்து விடும். இனி கஷ்டம்தான். பாவம், அப்பாவும் இடிந்து விட்டார். மூன்று வருஷங்களில் மூன்னூறு வரன்களுக்கு மேல் அவருடைய விவாஹ வலையில் சிக்கிவிட்டார்கள். ஆனல் ஒன்ருவது தங்கவில்லை. எல்லாம் அழகு, கறுப்பு, பணம் என்ற ஓட்டைகள் வழியாய் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டன.

என்ன செய்வார் கோபாலகிருஷ்ணய்யர்? எங்கிருந்தெல்லாமோ மாப்பிள்ளைகளைக் கொண்டு வந்தார். ஆனல் ஒருவராவது மாப்பிள்ளையாக ஆக முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அவளுடைய பாட்டை ரஸித்தார்கள். அவளுடைய வீட்டு வேலைகளையும், அடக்கமான போக்கையும் அக்கரையான பொறுப்பையையும் கவனித்தார்கள். ஆனல் இவைகளெல்லாம் அவளுக்கு ஒருவனைக் கொடுக்க முடியவில்லை.

நிறமும், பணம் முன்னின்றது. நிறத்தை விரும்பினர், நிறபேதம் ஒழியப் பாடுபடும் இந்திய வாலிபர்கள் பணப்பேய் அழிய வேண்டும் என்று சொல்லும் பெரியவர்கள் தங்களுடைய பிள்ளைக்கு எதிர் ஜாமீனை விரும்பினர்கள்.

எத்தனையோதரம் ஜாதகத்தைப் பார்த்து அலுத்துப்போய் விட்டார், அவளுடைய தகப்பனர். அவருடைய அத்தனை கால ஊழிய சேமிப்பாய் வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாயில் நளினியின் கல்யாணத்தைப் பண்ண விருப்பினர். ஆனல்......

காலச் சரித்திரத்தில் யுத்தம் முடிந்தபின் நாட்டை வசப்படுத்தும் சில கொடிய பிசாசுகள் எங்கும் தலை விரித்தாட ஆரம்பித்தன. பொன்விளையும் பாரதச் சமவெளிகளெல்லாம் பொட்டல் காடாகிப் பஞ்சத்தை ஈந்தது. தானியமணிகள் கிடைப்பது அரிதாகிவிட்டது. அரிசியைக் கண்ணல் பார்க்க முடியாதபடி வந்துவிட்டது. ரேஷனே ஒரு நாள் ஒரு வேளைக்குப் போதுமாறுதான் கொடுத்தார்கள். குழந்தைகளையும், குட்டிகளையும்

வைத்துக் குடும்பம் நடத்தும் சாதாரண மனிதர்களுடைய வாழ்க்கையிலே அந்தக்காலம் மிகவும் கஷ்டமாயின. அரிசிக் கஷ்டம் ஏற்பட, அரிசி வேட்டைக்குப் புறப்பட்டார்கள். மாதுங்கா முழுவதும் ஒரு மணி அரிசி கிடைப்பது துர்லபமாயிற்று.

கறுப்பு மார்க்கட்டில் ஒரு பைலி அரிசி ரூ 5-க்கு விற்கப்பட்டது. பைலி 12 அணு அரிசி ஐந்து ரூபாய். என்ன கொடுமை! ஆனுல்......

வயிற்றுப் பசியை இது நிறுத்த முடியுமா? குழந்தைகளுடைய குஞ்சு வயிறுகளைக் காயப்போட எந்த பெற்ருேர்களுக்குத் தான் மனது வரும். எப்படியாவது கஷ்டப்பட்டு எங்கிருந்தாவது 'ப்ளாக் மார்க்கெட்டில் ரைஸ்' வாங்கிக்கொண் டிருந்தார்கள். அவர்களுடைய பொக்கிஷமும் குறைந்து கொண்டுதான் வந்தது.

இந்த விதிக்கு கோபாலகிருஷ்ணய்யர் மாத்திரம் அன்ன விலக்கா? அவரும் 'ப்ளாக் மார்க்கட்டி'ல் சாமான்கள் வாங்க ஆரம்பித்தார். அன்ருடச் சமையலுக்கு அரிசி, அரைக்குத் துணி முதலியவைகள், அவருடைய பாங்கிப் பணத்தைக் கரைத்துக் கொண்டே வந்தது.

நளினியைக் கைப்பிடிக்க வரும் வாலிபன் கையில் கொடுக்க சேமித்து வைத்திருந்த பணம், கள்ள வியாபாரி கையில் போய்ச் சேர்ந்தது. இர்தமாதிரி யார் எதிர்பார்த்தார்கள்?

இந்தக் கொடுமையான காலப் போக்கில் நளினிக்கு எவ்வாறு மணம் நடக்கும்? அவளுக்காக வரன் தேடும் படலம் நின்று விட்டது. அவள் தன்னுடைய விதியின் விநோதப் போக்கை நினைத்து சிரித்துக் கொண்டே வாடிக்கொண் டிருந்தாள்.

மதுரம் சொட்டும் தேனை ஒருவரும் நாடிப் பருகவில்லையெனில், தேன் குடத்தினுள்ளே இருந்து சளித்துவிடுகிறது. அழகிய மலரில் ஊறிய தேனை, தேனீ அருந்தாவிடில் மலருடன் தேனும் அழிந்து விடுகிறது.

இதே நிலைமைதான் நளினிக்கும். அவளுடைய லக்ஷணத்தையும், பாட்டையும் ஒருவரும் விரும்பாமல் அவள் கால மாறுபாட்டில் கருகிக்கொண் டிருந்தாள்.

பாடுவதில்தான் சிறிது மனச் சாந்தி அடையலாம் என்று மாலையில் சிறிது நேரம் பாடுவாள். அம்பாள் சந்நிதியில் அகல் விளக்கேற்றி அவளையே அபயமடைந்தாள்.

அன்று அவள் நோன்பு நோற்ருள். எத்தனையோ தடவை நோன்பு நோற்ருள். ஒவ்வொரு முறையிலும் அடுத்த நோன்புக்குள் தனக்கு கணவனைத் தரும்படி அம்பாளை வேண்டிக் கொள்வாள். ஆனுல் அம்பாள் அவளுக்கு இரங்கினபாடில்லை.

அந்த வருஷ நோன்பும் அவள் நோற்று அடுத்த நோன்பைக் கணவனுடன் இருந்து நோற்க அநுக்ரஹிக்குமாறு அம்பாளைத் தோத்தரித்துப் பாடினுள்.

"அபயம் அபயமம்மா—
ஆண்டுகொண் டருள்வாய்"

என்ற பாட்டைப் பாடி சாவித்திரி அம்மனை அஞ்சலி செய்தாள்.

அந்த வருஷமும் நோன்புடன் சென்று மறைந்தது. சர்வசித்து வருஷம் சடுதியில் ஓடி வந்தது.

சர்வசித்து வருஷத்திலாவது சர்வமும் தனக்கு சித்தாக அமையும் என நினைத்துக்கொண்டே,

சித்திரை முதல் தை முடிய எண்ணி, மாசி பிறந்ததும் மனம் நொந்து போனுள்.

* * *

சர்வசித்து வருஷக் கடைசிக் காட்சியின் முதல் அங்கம், மாசி முடிவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தது.

நோன்பிற்கு இன்னும் இரண்டே தினங்கள்தான் இருந் தன.

எல்லார் வீட்டிலும் அரிசி வறுக்கும் மணமும், புத்தாடை யின் கம்மென்ற மணமும் வீசி யது.

ஆனுல் இத்தரமும் கோபால கிருஷ்ணயர் வீட்டில் சந்தோ ஷம் பரிபூர்ணமாக இல்லே. மால திக்கோ வயது பதினென்கு நிறைந்தது. பவளமல்லிகை போன்று பரிணமித்திருந்தாள்.

சிறிதும் கவலேயின்றி வளர்ந் திருந்தாள் அவள். இந்த வருஷம் பணம் கட்டிப் பரிக்ஷைக்குப் போக வேண்டியிருந்தது. தன் னுடைய படிப்பைக் கவனித்துக் கொண்டே அவள் ஊர் சுற்றி வந்தாள். வீட்டுவேலே யொன் றும் செய்யமாட்டாள். அவள் போக்கு தனிப்பட்டது.

சென்ற இரண்டு வருஷங் களுக்குமுன் தான் இருந்த செழிப்பையும் சிறப்பையும் தற் பொழுது இருக்கும் ஏழ்மையும் நினேத்து மனம் நொந்தாள். அவ ளுக்கு அதற்கெல்லாம் காரணம் தெரியாமலில்லே. இருந்தாலும் அவள் நளினியை வெறுக்க ஆரம்பித்தாள்.

நளினிக்குக் கல்யாணமாகி புக்ககம் சென்றிருந்தால் இன் னும் சிறப்பாக இருக்கலாமல் லவா? இதற்குத் தடை நளினியல் லவா? என்றெல்லாம் மாலதியின் பொல்லாத மனம் நினேத்தது.

அவளுடைய சிநேகிதிகளெல் லாம் நோன்பிற்குத் தங்களுக்கு பரிசாகக் கிடைத்த பட்டாடை களே அவளிடம் காட்டி அவ ளுக்கு அவள் தகப்பனுர் என்ன வாங்கிக் கொடுத்திருக்கிருர் என்று கேட்டு அவளுடைய மனப்புண்ணேக் கிளறி விட்டார் கள். மாலதிக்கு ஆத்திரமும் கோபமும் உண்டாயின.

நோன்பு நாள். சனிக்கிழமை கோபாலகிருஷ்ணய்யர் 2 மணிக்கு ஆபீஸைவிட்டு வந்து விட்டார். வீட்டிற்குள் வரும் பொழுதே ஏதோ உள்ளே சத் தம் பலமாகக் கேட்பதை நினேத்து சண்டை ஏதோ நடக் கிறது என்றறிந்து கொண்டே 'காலிங் பெல்' லடித்தார்.

"இந்த அப்பாதான் வந்திருப் பார். வேறே யார் வரப்போரு, நம்பாத்துக்கு" என்று மனக் கசப்புடன் கத்திக் கொண்டே மாலதி கதவைத்திறந்தாள்.

கதவைத் திறந்தவுடன் அவ ளுடைய தகப்பனுர்தான் ஆபீஸி லிருந்து திரும்பும் கோலத்தில் காட்சியளித்தார். ஒரு கையில் மண்ணெண்ணெய் டின்னும், மற்றொரு கையில் பையும் வைத் துக்கொண்டு உள்ளே நுழைந் தார்.

பைக்குள்ளிருந்து முருங்கைக் காய் எட்டிப்பார்த்தது. உடனே மாலதி அதைப் பார்த்துவிட்டு "வாங்கிண்டு வந்துட்டேளா! இந்த முருங்கைக்காயை, கசந்து வழியப் போறது. அம்மாதான் எத்தனே தரம் நீங்க வாங்கவேண் டாம் என்று சொல்லியிருக் கிருள்" என்று கசப்புடன் சொல்லி முடித்தாள்.

"நான் வாங்கிண்டு வந்தாலே கசந்துதான் வழியும். என்தான் இப்படி எல்லாரும் என்னே

வெறுக்கின்றேளோ? என்னை யாராவது மனுஷன்னு மதிக்கிறௗா? இந்த மாலதிக்குக் கூட இப்ப அப்பா என்ற அபிமானம் போயிடுத்து.''

"என் போகாதாம்? எனக்கு இன்னிக்குக் கட்டிக்கப் புதுப் புடவை வேணும்"

"அது என்னடி புதுப் புடவையாமே? புதுப்புடவை, என்ன அது."

"அவளுக்கு இன்னிக்குக் கட்டிக்க புதுப புடவை வேணுமாம். அவளுடைய சிநேகிதாளெல்லாம் புதுசா புடவை கட்டிண்டிருக்காளாம்." இது மாலதியின் தாயாருடைய சொல்.

"ஆமாம், எனக்கு நல்ல புடவையா ஒண்ணுமே கிடையாது. ஏதாவது விசேஷ நாள் வந்துன்னு கட்டிக்கறதுக்கு இந்த அசட்டுப் பிசட்டுன்னு சாயம் போனதில் ஒண்ணும், போகாததில் ஒண்ணும இருக்கிறது. இதையெல்லாம் கட்டிண்டு எப்படி என் 'ப்ரெண்ட்ஸ்' முன்னுலே போவேனே தெரியவில்லை! இந்த வருஷத்துலே எனக்கு ஒரு புடவையாவது வாங்கித் தந்திருக்கேளா என்று எண்ணினு, ஒன்று கூட கிடையாது. நளினிக்கு மாத்திரம் ஒரு மாசத்துக்கு முந்தி கூட ஒரு 'ப்ரின்டட் ஸாரி' வாங்கினது. எனக்கு மாத்திரம் ஒண்ணும் கிடையாது. இந்தவீட்டிலே நான் மாத்திரம் என்ன பாவம் பண்ணினேனே" என்று மூச்சு கூடவிடாமல் அழுதுண்டே கத்தினுள் மாலதி.

அவளுடைய கண்ணெங்கிருந்தோ கண்ணீரை யெல்லாம் கொட்டியது. பாவம்! அவளுடைய நீலிக் கண்ணீர் அவளுடைய உடம்பு முழுவதையும் நனைத்தது.

"ஏண்டி இப்படிக் கத்தரே. உனக்கு என்னடி புடவை தானேவேணும், வாங்கித்தரேன். எழுந்திரு. எனக்குக் காப்பி கொண்டுவா. மூஞ்சியை அலம்பிக்கோ" என்று அலுத்துக் கொண்டே சொன்னுர் கோபால கிருஷ்ணய்யர்.

பாவம் இளகின மனது!

"நளினி! நேற்று உன்னண்டை கொடுத்தேனே அந்தப் பதினைந்து ரூபாயைக் கொடம்மா. ஏதாவது பத்துப் பதினைஞ்சு ரூபாய்க்குள் ஒரு புடவை இருந்தா வாங்கிக் கொடுக்கிறேன்" என்று சொல்லவே நளினி ரூபாயை எடுத்துக் கொடுத்தாள்.

'ஆபீஸ்' வேஷத்தைக் கலைத்துவிட்டு வேஷ்டி கட்டிக்கொண்டு மாலதியுடன் 'மார்க்கட்டுக்'குச் சென்றுர்.

கடைக்குப் போகும் பொழுது தன்னுடைய ஏழ்மையையும் தன்னுடைய வாங்கிக் கொடுக்கமுடியாத நிலைமையையும் சொல்லி அவளுக்கு இதோபதேசம் செய்துகொண்டே போய் 'மார்க்கட்டி'ல் வெண்ணெய், பூ முதலியவைகளை வாங்கிக் கொண்டு "மஹாலக்ஷ்மி ஸ்டோர்ஸு"க்குப் புடவை வாங்கச் சென்றுர்.

அங்கு அவர் நினைத்தபடி புடவை கிடைக்கவில்லை. பாவம் மாலதிக்கு வருத்தம் வந்தது. அடுத்தபடி மற்றொரு கடைக்குச் சென்றுர்கள். அங்கும் இருபதுக்குக் குறைந்த புடவை இல்லை.

என்ன செய்வார் கோபால கிருஷ்ணய்யர்? கையிலிருப்பு பதினைந்து ரூபாய்க்கு இரண்டு குறைவு. புடவையின் விலையோ இருபதுக்கு அதிகம்.

புடவை வாங்காமல் வீட்டுக்குத் திரும்பினர். மாலதிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. வீட்டுக்கு வருகிற வரை அடக்கி வைத்திருந்த கோபம் வீட்டு வாசலைத் தாண்டியதும் அழுகையும், ஆங்காரமுமாக வந்து;

"இந்த வீட்டில் எப்பவும் இந்த லக்ஷணம்தான். ஒரு புடவையாவது கிடையாது. வாங்கித்தரேன்னு சொல்லிக் கடைக்கு இழுத்துண்டுபோய் வாங்கிக் கொடுக்காமே ஏமாத்திப்பிடறது ரொம்ப யோக்கியம். எனக்குன்னு ஒண்ணுமே இல்லாமப் போய்விடும். நான் செத்துத்தான் போகணும். என்னைக் கண்டாலே எரிச்சல்தான்."

"சீ அசடு, என்னடி வார்த்தை பேசற, நோன்பும் நல்லநாளுமா?"

"நோன்பாவது! எனக்கு என்னவாம்? நோன்பாம் நோன்பு. நான் ஒண்ணும் நோன்பு நோற்க முடியாது."

"நோற்காட்டேபோயேண்டி. என்னடி முணுக்கரத்துக்கு முந்தி கோபமும், ஆங்காரமும், அழுகையும். என்னத்தை வாங்கிக் கொடுக்கின்றேமோ அதை வைச்சுண்டு திருப்திப் படணும். ஒண்ணும் வாங்கித்தர முடியாது," என்று அவள் தாயார் அந்தச் சண்டைக்கு முத்தாய்ப்பு வைத்துவிட்டுத் தன் வேலையைப் பார்க்கச் சென்றாள்.

மாலதி அழுதுகொண்டே ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு, மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டு விம்மிக் கொண்டிருந்தாள்.

இதைப் பார்க்கக் கோபால கிருஷ்ணய்யருக்குப் பிடிக்கவில்லை. வெளியே போகப் புறப்பட்டார்.

அப்பொழுது அவருடைய சஹதர்மணி "என்ன வெளியிலே போறேள் ஏழு மணிக்குள்ளே திரும்பி வந்துடுங்கோ, கொழுக்கட்டை வாங்கிக்கணும்" என்று சொன்னாள்.

"மாலதி கோபப்பட்டுண்டா எனக்கு என்னவாம். அதுக்காக நான் கொழுக்கட்டை சாப்பிடாமல் இருந்துடுவேனா என்ன. வேணுமானால் சாத்துக்குத்தான் போகப்போகிறேன். அவனையும் கூட்டிண்டு வர்ரேன்" என்று சொல்லிக் கொண்டே வெளியே போய்விட்டார்.

மணி 6 அடிக்க சில நிமிஷங்கள்தான் இருந்தன.

"மாலதி எழுந்திருந்து மூஞ்சி துடச்சுண்டு அந்த பெரியம்மா வாங்கிக் கொடுத்தாளே போன வருஷம் அதைக் கட்டிண்டுவா" என்று அதட்டிச் சொன்னாள் அவள் தாயார்.

"ஒண்ணும் முடியாது போ! நான் ஒண்ணும் நோற்கவும் முடியாது காக்கவும் முடியாது. உன் வேலையைப் பார்த்துண்டு போயேன்," என்று சொல்லிக் கூடக் கொஞ்சம் விம்மி விம்மி அழுதாள்.

"சீ கழுதை! நான் சொல்றேன், என்னடி கேட்காம உட்கார்ந்திருக்கே எழுந்திருந்து வரயா இல்லாட்டா முதுகு ஏதாவது கேக்கறதா" என்று கையை ஓங்கிண்டு கோபமாகச் சொன்னாள்.

அப்பொழுது 'தபதப' என்று யாரோ கதவைத்தட்டின சப்தம் கேட்டது.

"கோன்ஹை" என்று கோபமாகவே கேட்டுக் கொண்டே 'படார்' ரென்று கதவைத் திறந்தாள் பார்வதியம்மாள்.

அங்கு ஒரு கையில் கோட்டும் மற்றொரு கையில் தோற்பையுமாக பார்வதி அம்மாவின் அண்ணா பிள்ளை பாஸ்கரன் காட்சியளித்தான்.

"ஏண்டா பாஸ்கரா. என்னடா திடுதிப்பென்று வந்திருக்கிறாயே! ஒவ்வொரு சனிக்கிழமையும் வருகின்ற கப்பலில் நீ வருவாய், வருவாய் என்று நினைத்து எதிர் பார்த்தோம்! ஒண்ணாலேயும் வராதபடி 'லெட்டரும்' எழுதாம இப்படி வந்து நிற்கிறயே! வாடாப்பா வா, அந்த ஊரெல்லாம் எப்படி இருக்கு."

"ஊரா என்ன அது, கொலைக் காடுதான். கராச்சியாம் கராச்சி"

"ஏண்டா சாமான் எல்லாத்தையும் கெட்டிக்காரத்தனமா முந்தியே அனுப்பிச்சுட்டாயேடா. 'ரேடியோ' எல்லாம் கூட அப்பா, அம்மாகூட அனுப்பிச்சுட்டயாம். நீ கெட்டிக்காரண்டா. கராச்சியிலிருந்து ஏண்டா இவ்வளவு நாளாச்சு வரத்துக்கு" என்றாள்.

"என்ன பண்றது அத்தை. எனக்குக் கராச்சியை விட்டு வறதுக்கு பிடிக்கவேயில்லை. செத்துப்போனால்கூட தூக்கிப் போட நாலு ஆளில்லை என்ற நிலைமை வந்துடுத்து. அதுதான் நானும் வந்துட்டேன்" என்றான் பாஸ்கரன்.

"நல்ல நாளுமா அதுவுமா ஏண்டா இப்படி வார்த்தை சொல்றாய். வாடா, நோன்பும் அதுவுமா வந்தாயே ரொம்ப சந்தோஷம்" என்று அன்போடு பாஸ்கரனை வரவேற்றாள் பார்வதியம்மாள்.

"ஏன் அத்தை இவள்தான் இல்லையோ நளினி? ஏன் இப்படி மூஞ்சி அழுதாப்போல வீங்கியிருக்கு?" என்றான் மாலதியைப் பார்த்துக்கொண்டே.

"ஏண்டா அவள் நளினியில்லைடா, மாலதி அதோ இருக்கான் பார். அவள்தாண்டா நளினி. நாலு வருஷத்துக்குள்ளே வளராம அன்னிக்குப் பார்த்த மாதிரியே இருப்பாளா என்ன" என்று இருவரையும் அறிமுகம் பண்ணி வைத்தாள். பின் மாலதி புடவைக்குக் கோபப்பட்டுண்டு அழறதையும், நோன்பு நோற்க முடியாது என்று பிடிக்கின்ற அடத்தையும் சொன்னாள்.

உடனே பாஸ்கரன், "மாலதி புடவைக்காகவா இவ்வளவு கோபமும் அடமும். இந்த பாரு நான் இரண்டு புடவை கொண்டு வந்திருக்கிறேன். நீ ஒண்ணும் நளினி ஒண்ணும் உடுத்திக் கொண்டு சுவாமியைக் கும்பிட்டு எனக்கு கொழுக்கட்டை கொடுங்கோ" என்றான்.

மணி எழடித்தது. நோன்பு நோற்றார்கள். கொழுக்கட்டையைக் கையிலே எடுத்துக் கொண்டு மாலதி தன்னுடைய அம்மாஞ்சிக்குக் கொடுக்கப் போகும பொழுது வாசலில் யாரோ 'பெல்'லடிக்க, மாலதி கதவைத் திறக்கப் போனாள்.

கோபால கிருஷ்ணய்யரும், வேணுவும் உள்ளே நுழைந்தார்கள். அப்பொழுது நளினி பாஸ்கரனுக்குக் கொழுக்கட்டையை கொடுத்துக்கொண்டிருந்தாள்.

"என்ன மாப்பிள்ளை! சங்கோசப் படாம நிறைய வாங்கிச் சாப்பிடு. நளினி கவனிச்சுக்கோ" என்று கிண்டலாகச் சொன்னார் கோபால கிருஷ்ணய்யர்.

மாலதி கையில் தட்டுடன் நளினியையும், பாஸ்கரனையும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்.



தாத்தாவின் கடிதம்

சௌபாக்கியவதி குருவம்மாவுக்கு அநேக ஆசீர்வாதம். சிறு குழந்தைகளாகிய நீங்கள் என்னென்ன கேள்விகளை உள்ளத்திலே மூடி விடுகிறீர்கள். 'நல்ல மனுஷாள்' என்று சொன்னாயா? கேட்டாயா? அவர்கள் யார் சொல் பார்க்கலாம். உனக்கு சொல்ல முடியாது. ஆனால் உனக்கு தெரியும். தாத்தா நல்ல மனுஷன் இல்லையா சொல். நல்ல மனுஷன் எப்படி இருப்பான். நீ உணர்ந்ததை நான் எழுதுகிறேன். சரியாய் இருக்கிறதா என்று எழுது.

நல்ல மனுஷனுக்கு நயமான பார்வையுண்டு. அதாவது பார்வையிலே அன்பு இருக்கும். உன்னை சந்தோஷப் படுத்துவதில் தனக்கு திருப்தி போல் தோன்றுவான். தாத்தா அப்படி இருக்கிறாரா? எவர் எவர்கள் கஷ்டப் படுகிறார்களோ அவர்களுக்கு உதவி புரிவதில் ஊக்கமாய் இருப்பான். எக்காலத்திலும் உதவுவான் நல்லவன். நன்று செய்தாலும் கெடுதல் செய்தாலும் அவன் நன்றே செய்வான் நல்லவன். ரொம்ப நல்லவன் இதை ஒரு புன்சிரிப்போடு செய்வான். கடனாக நினைத்துச் செய்யாது விளையாடுவது போல் செய்து விடுவான்.

புன்சிரிப்புடன் காணும் குழந்தைகளைக் கடிய மாட்டான். புன்சிரிப்பு இல்லாத குழந்தைகளை சிரிக்கச் செய்வான். பிறருக்கு ஆனந்தமாய் இருக்கும் செயல்களிலே கண்ணோட்டமாய் இருந்து செய்து வருவான்.

கடுஞ்சொல் சொல்ல மாட்டான். கடுஞ்சொல் யாராவது சொன்னால் தலையையாட்டிவிட்டு சிரித்து விடுவான். இன்பச் சொல்லே சொல்லுவான். எத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்தாலும் இன்பமாகவே இருக்கும். பேச்சு இன்ப குணத்தின் பிரவாகப்போல் இருக்கும். தாத்தா பேச்சு உனக்கு அலுத்து விட்டால் தாத்தா பொல்லாதவர். ஆமாந்தானே! பிறர் உரிமைகளைக் காப்பாற்றியே நடந்து கொள்வான். யார் யாருடைய சொத்து யார் யாரைச் சேர வேண்டுமோ அதற்கிணங்கியே, ஒழுகுவான். தன் ஆசையை வெளிவிட மாட்டான். உன்னாசையை தெரிய வேண்டுவான். நல்லாசையை ஊட்டுவான். பொல்லாசையை மறக்கடிப்பான். செப்படி வித்தைக்காரன் இந்த நல்ல மனுஷன்.

எழைகளைக் கண்டால் இரங்குவான். அவர்களுக்குத் தன் பொருளிலிருந்து கொடுப்பான்.

கஷ்டப்படும் ஜனங்களோடு தானும் பரிதவிப்பான். அவர்களுக்குக் கொடுத்து சந்தோஷிப்பான். உனக்கு தாத்தா பெப்பர்மெட்டு கொடுக்கிறது போலே தான்.

ஒரு ஜெந்துவையும் கொல்ல மாட்டான். எல்லா ஜெந்துக்களும் நல்லவரிடத்தில் நல்லதாய் தான் இருக்கும். வழியறியாது வந்திட ஜெந்துக்களுக்கு வழி காட்டி விடுவான். இவன் நல்லவன் தானே சொல். பிறர் பொருள்களுக்கு ஆசைப்பட மாட்டான். ஆனால் பிறருக்கு தன் பொருளைக் கொடுக்கத் தயாராய் இருப்பான். குழந்தைகள் சிரிப்பை பார்க்க என்ன வேண்டுமானாலும் கொடுத்து விடுவான். இந்த நல்லவனுக்கு யாரும் பிறர் என்ற எண்ணமில்லை. எல்லோரும் நம்மவர்தான். இப்படியே கருதி வசவு வாங்கிக் கொண்டு ஊரைப் புரளி பண்ணுவான். எங்கேயும் எல்லோர்க்கும சமத்தாகவும் ஒன்றாகவும் இன்பமாகவும் இருப்பான்.

அவனுக்கு அகங்காரம் இருக்காது, நீ கழுதை என்றால், இல்லை நான் கோவேறு கழுதை என்பான். அதாவது, அரசன் எறும் கழுதை என்பான். ஆனால் நீ சொல்லு குருவம்மா. கழுதை பிறந்தபடி பொறுமையாய் மூட்டை தூக்கி வேலை செய்து மடிந்துவிடுகிறது. சில மனுஷர்கள் பொறுமையில்லாமல் ராக்ஷசன் மாதிரி தீங்குகள் செய்து செத்தும் பிசாசாய் மற்றவர்களைத் துன்புறுத்துகிறார்கள் அல்லவா! இதெல்லாம் பார்த்தால் கழுதையும் ஒரு நல்ல பிறப்பல்லவா? நீ சொல்லு! நன்றாய்ப் பாடுவான். குழந்தைகளைக் கண்டால் ரொம்ப சந்தோஷமாம், ஆண்டவன் என்று சொன்னால் முகம் மலர்ந்துவிடும் அவனுக்கு. திருப்புகழும் பாடிடுவான். குழந்தைகள் எல்லாம் எவனைச் சுற்றிக்கொண்டு விளையாடி பாடிக்கொண்டு இருக்கிறார்களோ அவன் ரொம்ப நல்லவன் இல்லையா? இதெல்லாம் எங்கே அம்மா பார்க்கலாம் சொல்லு. நீ தான் சொல்லணும். எனக்குத் தெரியும் நீ சொல்லப் போவது யார் என்று. கண்ணன் அல்லவா? இல்லையானால் பதில் எழுது.

தாத்தா.

இனிக்கும் சொற்கள்

எம். சியாமளா

○

இனிமையாகப் பேசுவதும் பழகுவதும் பெண்களுக்கு இன்றியமையாத விஷயம் என்பது உண்மை. ஆனால் இனிக்கும் சொற்கள் இயற்கையாக வர வேண்டுமேயன்றி பலவந்தமாக வரக் கூடாது. இக் கட்டுரையாளர் கூறுவதையும் படித்துப் பாருங்கள்!

ஒரு ஆங்கிலக் கவி சாலையோரம் உலாவிக்கொண்டிருந்தாராம். அப்பொழுது அவர் ஓர் அழகிய மாது பஸ் நிற்குமிடத்தில் நின்று கொண்டிருப்பதைக் கண்டாராம். அவள் நல்ல அழகி. அவளை அவருக்குத் தெரியாது. நடுத்தர வயதிருக்கும். ஒரு கணம் தாமதித்தார். பிறகு, அவளிடம் நேராகச் சென்று, "மன்னிக்கவேண்டும், அம்மா! நான் வயது முதிர்ந்தவன். ஆகையால் என்னைத் தவறாக எண்ணிவிடமாட்டீர்கள் என்றெண்ணுகிறேன். நான் பார்த்த பெண்மணிகளுள் மிக மிக அழகு வாய்ந்தவருள் நீங்கள் ஒருவர்" என்றாராம்.

நம் நாட்டில் ஒருவர் ஒரு பெண்ணிடம் அப்படிப் பேசினால் அவமரியாதையாக நடந்து கொண்டதாகக் கருதப்படுவார்.

"இந்தக் கிழத்தைப் பாத்தியாடி. நான் எப்படி இருந்தாலென்ன? இதுக்கு என்ன வந்துதாம்!" என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு கிழவரை இகழ்வார்கள்.

ஆனால் அந்த மடந்தை கிழவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதென்றோ அவர் ஒரு அதிகப் பிரசங்கி யென்றோ கருதவில்லை. அதற்குப் பதில் அவள் முகம் சிவந்து அவள் இன்னும் அழகியாகத் தோன்றினாள். கவியும் தன் ஜீவியத்தில் தான் அவ்வளவு புத்திசாலித்தனமான வார்த்தைகளைச் சொல்லியதில்லை என்று எண்ணினார்.

உலகில் எல்லோரும் ஓரளவு புகழ்ச்சிக்கு அடிமையா யிருக்கிறார்கள். நம்மில் அநேகருக்கு தங்களிடம் ஏதோ ஒரு ஆகர்ஷண சக்தி யிருக்கிறது என்று தெரியாது. நம்முடைய சக்தியை நமக் குணர்விப்பதற்கும் நம்மை இன்னும் அதிக முயற்சியை எடுத்துக்கொள்ளத் தூண்டவும் இந்தப் புகழ்ச்சி என்னும் வைடமின் சத்து மிக மிக அவசியம்.

பொன்னம்மா பாத்திரங்களைத் துலக்கி வைத்திருக்கிறாள். "பொன்னம்மாவைப் பார்த்தாயோ? அவள் பெயருக்கேற்றாப் போல அவள் தொட்ட பாத்திரமெல்லாம் தங்கமாட்டம் மின்னுகிறது." என்று சொல்லிவிட்டால் நீங்கள் அவளுக்கு 50 ரூபாய் சேலை எடுத்துக் கொடுத்தாற்கூட அவ்வளவு சந்தோஷமுண்டாகாது. அந்தப் புகழ்ச்சிக்குத் தன்னைத் தகுதி யுள்ளவளாக்கிக் கொள்வதற்கு அவள் கட்டாயம் முயற்சி செய்வாள்.

ஆனால் அருகதை இல்லாத புகழ்ச்சி அருவருப்பைத்தான் கொடுக்கும். தன்னை கையாண்டி யடிக்கிறார்கள் என்ற உணர்ச்

சியை உண்டாக்கி இன்னும் சிறிது சண்டித்தனத்தை ஊட்டி விடும்.

"உங்களைப் பார்த்தால் மன்மதனைப் போலிருக்கிறது" என்று என் தாயார் அப்பாவிடம் சொன்னால் அவர் உடனே அம்மா பொய் சொல்லுகிருள் என்று அறிந்துகொண்டு விடுவார். அவர் புதிய உடுப்பை அணிந்துகொண்டு கண்ணாடியில் தன்னை வியந்துகொண்டிருக்கும் சமயம் "ஏது கல்யாண மாப்பிள்ளை போல இருக்கிறீர்களே. நீங்கள் என்னைப் பார்க்க வந்த பொழுது இப்படி இருந்திருந்தால் எங்கம்மாவிடம் நீங்கள் வேண்டாமென்று அழுதேயிருக்கமாட்டேன்" என்றால் மனைவி சொல்வது உண்மையென்று அவருக்குத் தெரியும்.

"போடிபோ, தலை யெல்லாம் நரைச்சுக் கிழமாகிறபோது உனக்கு ஷோக்கு வந்துட்டு தாக்கம்" என்று சிரித்துக் கொண்டே வந்து அம்மாவை அணைத்துக் கொள்வார்.

உள்ளன்பு புறக் கண்களுக்குத் தோன்றாத ஓரழகை அகக்கண்களுக்குத் தோற்றுவிக்கிறது என்பது அவருக்குத் தெரியும். அம்மா கல்யாணத்தின் போது அந்த அன்பு இருக்கவில்லை. அதனால் அழுதாள்.

எங்கள் மன்னி நளபாகமாய் சமைப்பாள். அம்மாவாகட்டும், அண்ணாவாகட்டும் ஏதாவது ஒரு நாள் "சமையல் பேஷாயிருக்கிறதே" என்று சொல்லியிருக்க வேண்டுமே. கிடையாது. ஒரு நாள் அம்மா ஊருக்குப் போயிருந்த பொழுது பசுமாட்டிற்காக அரைத்து வைத்திருந்த பருத்திக் கொட்டையை அண்ணாவுக்குப் பரிமாறினாள். அண்ணா, "என்ன, இது பருத்திக் கொட்டையாட்டமிருக்கே?" என்ற பொழுது, "ஏது, உங்கண்ணாவுக்கு ருசிச்சு சாப்பிடக்கூடத் தெரியும் போலிருக்கே" என்று மன்னி சொன்ன பொழுது அண்ணாவுக்குக் கோபம் வந்தது. ஆனால் எனக்கென்னவோ மன்னி செய்தது 'ரொம்ப சரி' என்றே தோன்றிற்று.

ஒரு கடையில், "எங்கள் சிப்பந்திகள் எல்லாம் மரியாதையாகவும் நாணயமாகவும் நடந்து கொள்வார்கள்" என்று விளம்பரம் அட்டையில் ஒட்டி தொங்கவிடப்பட்டிருந்தது. இதை விளம்பரப் படுத்துவானேன் என்று முதலில் நினைத்தேன். பிறகு அந்த விளம்பரம் கடைக்கு வருகிறவர்களுக்காக அன்று என்று தெரிந்து கொண்டேன். அத்தகைய விளம்பரத்துக் கருகில் நின்று கொண்டு எவன் தான் அவமரியாதையாக நடக்கத் துணிவான்?

கடுமையான சொற்களைச் சொல்லி விட்டு பிறகு மனஸ்தாபப் படாதவர் யாராவது உண்டா? ஒரு இனிய சொல் இதயத்தைக் குளிர்விப்பதைப் போல ஒரு வாழ்க்கையின் தியாகம் கூடச் செய்யாது.

இனிய சொற்களால் ஏற்ற புகழை அளிக்காதவர் மௌனத்தை மேற்கொள்ளல் மேலாகும். கடுஞ் சொற்கள் வெஞ்சினத்திற்கு விதைகளாகும். சினமே பாபத்திற்கு ஆதாரம். பெண்கள் குளிரப் பேசினால் அவர்களிடமிருந்து பேசக் கற்கும் குழந்தைகள் இனிக்க இனிக்கப் பேசக் கற்றுக் கொள்வார்கள்.

ஔவைச் சித்திரம்

வித்வான் ஏ. கே. பாலாம்பிகை அம்மாள்

மேற்குத்தொடர்ச்சி மலையின் ஒரு சிறு பகுதிக்கு சிறுமலை யென்று பெயர். அங்கு மழை யதிகமாகையால் எங்கும் காடு கள் அடர்ந்திருக்கும். சந்தன மரங்களில் படர்ந்திருக்கும் மிள குக் கொடிகளையும், அதைப் பழ மென்றெண்ணிக் கடித்துக் காரம் தாளாமல் தவிக்கும் குரங் குகளையும் அக்காடுகளில் காண லாம். வெட்டிய மரத்துண்டுகளை இழுத்துச்செல்லும் யானைகள் அங்கு ஏராளமாக உண்டு.

ஒருநாள் நடுப்பகல். கதிரவன் தன் கிரணங்களால் கடுமை யாய்ச் சுட்டுக் கொண்டிருந் தான். காட்டு விலங்குகள்கூட வெப்பத்திற் காற்ருமல், நிழல் களில் பதுங்கிக்கிடந்தன. வெய் யோனுடைய வன்மையை எதிர்ப்பவள்போல், கிழவியொரு வள் அக் காட்டு வழியாய்ச் சென்று கொண்டிருந்தாள். இவளணிந்திருந்த வெண்ணிறவா டையும், தூயவெண்ணீறும், கண் டோர் மனதைக் கலைமகளோ யென்றையுறுத்தின. இடுப்பு சற்று வளைந்திருந்ததிஞல், கோலே துணையாக நடந்துசென் ருள்.

வெப்பத்திற் காற்ருமல், நிழல் தரும் மரங்களினடியில், சற்று நேரம் நிற்பதும், நடப்பதுமாய்ச் சென்று கொண்டிருந்த இவளைக் கண்டிரங்கியதுபோல் பகலவ னும், மேகமாகிய போர்வையால், தன்னை மூடிக்கொண்டான். கிழவி மகிழ்ச்சியுடன் தடை யின்றி நடந்தாள். சற்று நேரத் திற்கெல்லாம், மேகங்கள் நெருங் கிக் கறுத்து, பாட்டியைப் பரி கசிப்பதுபோல், பெருமழை பெய் தன. பாவம்! பாட்டி என்ன செய்வாள்? குளிர் வெடவெட நடுக்க மழையில் நனைந்து தங்கு மிடம் அகப்படுமாவெனத் தேடிக்கொண்டே சென்ருள்.

சற்று தூரத்தில் ஓலைக்கூரை வேய்ந்த சிறு வீடொன்று காணப்பட்டது. கிழவியின் மகிழ்ச்சிக் கெல்லையில்லை. குளி ரையும் மறந்து வேகமாய் நடந் தாள். அக் குடிலின் சாளரத்தி லிருந்து இரு கண்கள் மழையை வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்தன. கிழவியின் பரிதாபம் இக் கண்களில் பட்டது. உடனே பதைபதைத்து, 'அக்கா! அக்கா! தாழங்குடை எங்கே? ஐயோ காணவில்லையே! அக்கா! எங்கே

வெச்சுட்டே, கேக்கறேனேசீக்கிரஞ் சொல்லேன்' என்ருள்.

'என்னடீ! பதைக்கறெ, இந்த மழையில் எங்கே போகணும். மழையில் நனைந்து படுத்துக் கொண்டால் யார் படுவது? தாழங்குடையாம் வெளியில் போகணுமாம். நன்ஞயிருக்குது உன் அட்டகாசம்,' என்ருள் அக்காவாகிய அங்கவை.

'அக்கா! அக்கா! கோவிச்சிக்காதெக்கா. அதோ பாரு அந்தக் கிழவியை. மழை வெள்ளத்தில் நடக்கமுடியாமல், மிகத் தவிக்கிருள் பாவம். அவளை அழைத்துக் கொண்டு வரத்துக்குதான் குடை கேட்டேன்.

அங்கவையின் பார்வை கிழவியின் மேல் பட்டதும், குடையுடன் குடிசையின் வெளியில் ஓடினுள். மழை வெள்ளத்தில், நடக்க முடியாமல், தத்தளித்துக் கொண்டிருந்த பாட்டியின் அருகில் சென்ருள்.

'பாட்டீ! பாட்டீ! இந்தாருங்கள், என் கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்,' என்று ஒரு கையால், கிழவியின் கையைப் பிடித்துக் கொண்டாள். மெதுவாகத் தன் வீட்டிற்குள் அழைத்து வந்தாள்.

ஒருவள் கிழவியின் நனைந்த ஆடையை யவிழ்த்து, தன் சிற்ருடை யொன்றைக் கொண்டு வந்து உடுத்திஞள். மற்ருெருவள் தலையைத் துடைத்தாள். சிறு சுள்ளிகளினுல், நெருப்பு பற்றவைத்து, பாட்டியைக் குளிர் காயச் செய்தாள். இதற்குள் மற்ருெருவள் உணவுசமைத்தாள்.

இச் சிறுமிகளின் சுறுசுறுப்பைக்கண்டு கிழவி அளவற்ற ஆனந்தமடைந்து அவர்களை நோக்கி 'குழந்தைகளா! வழியில் சென்று கொண்டிருந்த என்னை அழைத்து வந்து இவ்வளவு உபசாரம் செயயும், உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன். பாவம் இருவரும் சிறுமிகளாயிருக்கின்றீர்களே? நீங்கள்யார்? உங்களைப் பெற்ருேர் எங்கு சென்றனர்?

இவ்வுரையைக் கேட்ட சிறுமிகளின் முகம் வாடியது. கண்களினின்றும் நீர் வடிந்தது. 'பாட்டீ! நாங்கள் அனுதைகள். எங்களைப் பெற்ருேர் விண்ணுலகம் சென்றனர். இனி, தாங்கள் தான் எங்கள் அன்னை.'

'பாவம்! என்ன பரிதாபம். நல்ல மனிதர்கள்தானு கடவுளின் சோதனைக்காளாக வேண்டும். நீங்கள் உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்களாகக் காணப்படுகிறீர்களே! உங்கள் தந்தையின் பெயரென்ன?'

'எங்கள் தந்தையை யறியாதவர் இத் தென்னுட்டில் ஒருவருமிரார். பாரி என்பவர்தான் எங்கள் தந்தை. அதோ தெரியும் பரம்பு மலையிலுள்ள கோட்டைதான் அவர் ஆண்டது. சேர, சோழ, பாண்டியர் மூவரும் சேர்ந்து, எங்கள் கோட்டையை முற்றுகை செய்து வஞ்சனையால் தந்தையைக் கொன்றனர்.'

'அந்தோ! பாரியின் மகளிரா நீங்கள். அவன் கருணையை என்னென்பேன்! முல்லைக் கொடி படர்வதற்குத் தன் தேரை யளித்துக் காலால் நடந்துசென்ற வள்ளலின் மக்களா கேட்பாரின்றி பரிதவிக்கவேண்டும்!'

அங்கவை; பாட்டி! எங்கப்பாவைத் தங்களுக்குத் தெரியுமா? தாங்கள் யாரென்று எங்களுக்குத் தெரியவில்லையே?

'குழந்தைகளா! நான் உங்கள் தந்தையிடம் வந்திருந்தபொழுது, நீங்கள் முறையே, மூன்று வயதும் ஒரு வயதுமுடைய குழந்தைகளாயிருந்தீர்கள். ஔவைப் பாட்டி என்று நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? அவள்தான் நான்.

'ஔவையாரா தாங்கள். தாங்கள் வெகு அழகாகக் கவிகள் பாடுவீரென்று, என் தந்தையார் சொல்லக் கேட்டிருக்கிறேன். தங்களைக் காணக் கிடைத்த எங்கள் பாக்கியமே பாக்கியம்', என்றாள் அங்கவை.

இதற்குள் சங்கவை, 'பாட்டி! உணவு தயாராய்விட்டது. சாப்பிட்டுக்கொண்டே பேசுங்கள்' என்றாள்.

இருவரும் ஔவைக்கு உணவு பரிமாறினர். மூன்று உண்கலம் பரிமாறப்பட்டன. ஔவை நடுவிலும், சிறுமிகளிருவரும். இரு பக்கங்களிலும் உட்கார்ந்தனர். சாப்பிட்டுக் கொண்டேயிருக்கையில் சங்கவை, 'பாட்டி! எங்கள் தந்தை, முல்லைக்குத் தேரளித்தாரென்று கூறினீர்களே! அதைப் பற்றிய வரலாற்றை எங்களுக்குக் கூற முடியுமா? என்று கேட்டாள்.

'ஆம், அச்சமயத்தில்தான் உன் தந்தையை நான் கண்டது. பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் ஒருநாள் நான் இந்தக் காட்டு வழியாய் வந்து கொண்டிருந்தேன். உன் தந்தை வேட்டையாடிக் களைத்து ஒரு தேரிலேறி வந்து கொண்டிருந்தான். எதிரில் ஒரு முல்லைக்கொடி படர இடமில்லாமல் தவித்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட உன் தந்தையின் மனம் பரிதவித்தது. தேரிலிருந் திறங்கி அக் கொடியைப் பார்த்து சற்று யோசித்தான். உடனே! தான் ஏறி வந்த தேரை நிறுத்தி அக் கொடியைப் படரவிட்டுத் தான் காலால் நடந்து சென்றான். இச் செய்கையைக் கண்ட நான் வியந்து அவனை யாரென்றறிய விரும்பி, தொடர்ந்தேன். அவனும் திரும்பிப் பார்த்து என்னை வணங்கித் தன்னுடன் வந்திருக்கும்படி வேண்டினான். யார் எங்களை ஆதரிக்கின்றாரோ, அவர்களிடம் சென்று கல்வியை வளர்ப்பதுதானே எங்கள் இயற்கை. நானும் உன் தந்தையுடன் சென்றேன். உன் தந்தைக்குக் கல்வியை யாராய்வதில், வெகு விருப்பம். இருவரும், கவி பாடிக்கொண்டும் கலைகளை ஆராய்ந்துகொண்டு மிருந்ததில், காலம் சென்றதே தெரியவில்லை. சுமார் ஒரு மாதம் இவ்வாறிருந்துவிட்டேன். பிறகு செல்ல விடைகேட்டேன். உன் தந்தைக்குஎன்னைப் பிரியசற்றும் இஷ்டமில்லை. அரைமனதுடன், சில பொருள்களை எனக்குப் பரிசில்களாகக் கொடுத்தனுப்பினான். பாதி வழி சென்றிருப்பேன். கொள்ளைக்காரர்கள் சிலர் என்னை மறித்து அவைகளைப் பறித்துச் சென்றனர். நான் வருத்தத்துடன் திரும்பி வந்து உன் தந்தையிடம் முறையிட்டேன். அவன் எனக்குத் தேறுதல்கூறி மேலும் பத்துநாட்கள், என்னை நிறுத்திக்கொண்டு என் வற்புறுத்துதலின்மேல், முன்பைவிட சற்று அதிகமான பொருள்களைக் கொடுத்தனுப்பினான். இம் முறையும் முன்போலவே நடந்தது. அம் முறையும் திரும்பிச்சென்று முறையிட்டதில், மேலும் பத்து நாட்களிருக்கும்படி நேரிட்டது. அந்தமுறை இருமுறையையும்விட ஏராள

மான பொருள்களையும் கொடுத்தனுப்பினன். அம்முறையும் கொள்ளை நடக்கவே, இதில் ஏதோ சூதிருக்கிறதென்று எனக்குத் தோன்றியது. அத் திருடர்களை நோக்கி, 'அப்பா! எனக்குப் பணம் வேண்டாம். உங்களுக்கே கொடுத்து விடுகிறேன். ஒவ்வொரு முறையும் நான் செல்லும் சமயமறிந்து இங்கு வரும் உங்களை யாரென்றறிய மட்டும் விரும்புகிறன்,' என்றேன்.

அவர்களு ளொருவன் தன் மாற்றுடையைக் களைந்து என் முன் சிரித்து நின்றான். ஆ! என்ன வென்பேன்! உன் தந்தையேதான் அவன்! நான் வியந்து இவ்வாறு செய்யக் காரண மென்ன வென்று கேட்டேன். அவன் என்னைப் பிரிய தனக்கிஷ்ட மில்லாததால், என்னை இன்னும் சற்று நாட்கள் வைத்துக் கொள்ள வேண்டு மென்ற விருப்பத்தால், அவ்வாறு தன்னுட்களையே விட்டு மேலும் மேலும் கொள்ளையடிக்கச் சொன்னதாகவும் தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். அவன் அன்பின் முதிர்வைக் கண்ட எனக்கு வருத்தம் நீங்கி மகிழ்ச்சியே யுண்டா யிற்று. பிறகு அவன் கொடுத்த பொருள்களைப் பெற்றுக்கொண்டு வழியே சென்றேன். இன்னும் இரண்டு சம்பவங்கள் இதைப் போல், அன்பினல் நடந்த விசித்திரச் செய்கைகள்.

ஒரு நாள் நான் பழைய னூரிலுள்ள வயலின் வழியாகச் சென்று கொண்டிருந்தேன். காரு என்னும் வேளாளனெருவன் அவ் வயல்களைக் கொத்திக் கொண்டிருந்தான். அவனருகில் சென்று பசியாயிருக்கிற தென்றேன். அதற்கு அவன் பதிலொன்றும் பேசாமல் தன் கையிலிருந்த களைக்கொத்தைக் கொடுத்துக் கொத்தச் சொன்னன். இதென்ன? பசிக்கு உணவளிக்கச் சொன்னல், வேலையிடுகிருனே, என்ன மனிதன் இவன்? என்று நினைத்தேன். இருந்தாலும் நடப்பதைப் பார்க்கலாம் என்று கொத்த வாரம்பித்தேன். அவனும் கொத்திக் கொண்டே என்னுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தான். சற்றுநேரத்துக்குப் பிறகு என்னை வீட்டிற் கழைத்துச் சென்று விருந்தளித்து பொன்னுல் செய்களைக்கொத் தொன்றைக் கொடுத்து, "நான் பசியென்றவுடன் உணவளித்து விட்டால், என்னுடன் பேசிப் பழக முடியாது என்றுதான் தன்னுடன் வயலில் வேலை செய்யச் சொன்னதாகக் கூறினன்.

மற்ெருரு முறை சேரவரசன் என்னை விருந்துக் கழைத்தான். நானும் அதற்கிணங்கிச் சென்றேன். வந்தவ ரனைவர்க்கும், இலை போட்டுப் பரிமாறியாயிற்று. எனக்கு இலையுமில்லை, உணவுமில்லை. நான் வருந்தி, அந்தோ! மதியாதார் இல்லத்திற்கு ஏன் வந்தோம் என்று வருந்தி ஒரு புறமாக நின்று கொண் டிருந்தேன். அப்பொழுது ஔவையே! இங்கு வருக என்று ஒரு குரல் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். சேரவரசனே, அங்கு நின்றிருந்தான். அவன் என்னை நோக்கி, கவியரசியே தாங்கள் வருந்த வேண்டாம். தங்களுடன் உண்ண விரும்பித்தான் இவ்வாறு செய்தேன் என்று கூறினன். அவனன்பிற்கு நானும் வியந்து

அவனுடன் உண்டேன். ஆனால், குழந்தைகளே! உங்கள் செய்கை இம் மூவரன்பையும் வென்று விட்டது. இச் சமயத்தில், நீங்கள் எனக்கு உதவி செய்திராவிடில், நான் குளிரால் இறந்தல்லவோ போயிருப்பேன்!

காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது, என்ற திருவள்ளுவர் கூற்றைப் போல் நீங்களளித்த உணவையும் இந் நீலச் சிற்றாடையையும் என்றும் மறக்க முடியாது.

பாரியளித்த பரியும் பழையனூர்க்
காரிகொடுத்தகளைக் கொத்தும்—சேர
[மான்
வாராய் எனவழைத்த வாய்மையும்
இம் மூன்றும் நீலச் சிற்றாடைக்கு
[நேர்

என்று கூறிமுடித்தாள். பிறகு அன்றைப் பொழுதை அங்கு கழித்து மறுநாள் அடிக்கடி அவர்களை வந்து பார்த்து உதவி செய்வதாகக் கூறித் தன்வழியே சென்றாள்.

யோக சக்தி

கர்மத்தைப் பலனிலே பிணைக்கும் தளைகள் எவை என்று, பகவத் கீதை பூராவும் திரும்பத் திரும்பக் கூறியிருக்கிறது. பொதுவாய்ப் பார்க்குமிடத்து, விருப்பு, வெறுப்பு, அச்சம், பகைமை இந்த நான்கும் தான் அந்தத் தளைகள். அடிப்படையிலே இவை யாவும் காமத்தால் விளைபவையே, ஒருவன் தன்னைத்தானே கட்டுப்பாடு செய்துகொள்வது மூலம் தான் யோக நிலை அடையலாம். அப்போது இந்தக் காமங்கள் சக்தி யெல்லாம் ஒன்று திரண்டு மற்றொருவிதமான ஒரு அரிய சக்தியாகி இவன் உள்ளத்தினுள்ளே ஓர் அபூர்வமான மாறுதலை உண்டாக்கி விடும்

அழகுக் குறிப்பு

ஸ்ரீமதி ஆத்மநாதன்

புடவை விஷயத்தில் பெண்கள் எப்பொழுதுமே அதிகசிரத்தை செலுத்துவார்கள். அந்த மேனிக்கு இந்தப் புடவை உடுத்தினால் நன்றாக இருக்கும். சிவப்பு உடம்புக்குப் பச்சைப் புடவை தான் பொருத்தம். என்றெல்லாம் பொறுக்குவார்கள்; சுங்குடிப் புடவையில் உயர்ந்த ரகம் கட்டினால் அதைப்பற்றிப் புகழ்ந்துபேசிய காலமுமிருந்தது. இப்பொழுது பட்டுப் புடவை உடுத்துவது அந்தஸ்தாக இருந்து வாயல் புடவை கட்டுவது பாஷனாக ஆய்விட்டது. அவரவர்களுக்குத் தகுந்த முறையில் ஆடையணிவது உயர்ந்த கலையல்லவா?

தளிர் போன்ற மேனியும் கொடி போன்ற கை கால்களும் துடியான இடையுமுள்ள ஒரு பெண்ணுக்கு மரத்திலிருந்து உரித்த நார்களாலான உடையை அணிவிக்கலாமா? அவ்வித அணிகரத்தால் அது அநாகரிகமாக ஆகாதா? அந்த உடையை அணியும் பெண்ணின் மனம் வருந்தாதா? அவ்வித டியர்ந்த எழிலுடன் படைத்த பிரமன் வேலைக்கு இதுவா பிரயோஜனம்? இவ்வித எண்ணம் அந்த ஒரு க்ஷணத்தில் வசிஷ்டருடைய மனதில் ஓடிற்று.

ராமர் வனவாசத்திற்குத் தயாராகிவிட்டார். சிற்றன்னை கைகேயி தனது கைகளாலேயே மரவுரிகளைக் கொண்டு வந்து ராமனுக்கும் லக்ஷ்மணனுக்கும் கொடுத்து கட்டிக் கொள்ளச் சொன்னாள். ராம லக்ஷ்மணர்களுமவ்விதமே தங்களுடைய பட்டு வஸ்திரங்களைக் களைந்து விட்டு மரவுரிகளை யணிந்து கொண்டனர். அப்பொழுதும் வசிஷ்டர் பார்த்துக் கொண்டு தானிருந்தார். ஒன்றும் பேசவில்லை. சீதையிடம் இரண்டு மரவுரிகளைக் கொடுக்க வந்தாள் கைகேயி. அதைக் கண்ட சீதை வலையைக் கண்ட மான் நடுங்குவது போல நடுங்கினாள் கைகளிரண்டும் நடுங்க அம்மரவுரிகளைத் தனது சின்ன மாமியிடமிருந்து வாங்கிக் கொண்டாள். கைகளில் தொங்கும் அந்த மரவுரியின் பளுவை நினைத்தவுடன் கண்களிரண்டும் நீரைப் பொழிய ஆரம்பித்தன. அவளுடைய பிராணபதி அதை உடுத்திக் கொண்டு விட்டார். அவளும் மறுமொழி கூறாமல் அணிந்து கொள்ள வேண்டியது தான். இந்த தர்மத்தையவள் நன்றாக உணர்ந்திருந்தாள். அதனாலேயே நானெப்படி இந்த ஆடைகளையணிந்து கொள்வேன்

என்று சொல்ல வில்லை. ரிஷி ஜனங்கள் எப்படி உடுத்திக் கொள்கிறார்கள் என்று கேட்டாள் ஸ்ரீராமரிடம்.

ராமர் அதற்குப் பதிலொன்றும் சொல்ல வில்லை. தானிருந்த இடத்தை விட்டு சீதையிடம் சென்றார். சீதை அணியத் தயங்கித் தனது கையில் வைத்திருக்கும் மர வுரியை வாங்கி அவளுடைய பட்டுப் புடவையின் மேலேயே சுற்றி விட்டார். அதைக்கண்ட பெண்களனைவரும் முத்து முத்தாகக் கண்ணீரையுகுக்க ஆரம்பித்தனர். இந்தக் காக்ஷியும் சேர்ந்து கொண்டதும் வசிஷ்டரின் நெஞ்சும் கரைந்து விட்டது. இதற்குக் காரணமான கைகேயியை நினைத்துப் பார்த்தார். கண்கள் சிவக்க கோபமடைந்தார். கைகேயியைப் பார்த்து, கைகேயி! உனது வரத்தில் ராமனொருவனைத்தான் காட்டிற்கு அனுப்பக் குறிப்பிட்டிருக்கிறாய். லக்ஷ்மணனும் சீதையும் தன்னிச்செயாக வனம் செல்கிறார்கள். ஆகையால் சீதையும் மர வுரி அணியத்தான் வேண்டுமென்ற, அவசியமில்லை. அவளுக்கு அந்த மர வுரியைக் கொடுக்காதே. நல்ல பட்டுச் சேலைகளையும், உயர்ந்த நகைகளையும் கொடு. சீதை இங்கிருப்பதில் எதுவும் குறைவில்லாமல் சென்று வனத்தில் ராமனுக்கு உபகாரம் செய்யட்டும் என்றார்.

ராமர் அவசியம் மர வுரி உடுத்த வேண்டியவராகிவிட்டார். லக்ஷ்மணன் அப்படியல்லவாயினும் வசிஷ்டர் அதைக்கருதவில்லை. ஆண்களுக்கு ஆடையைப் பற்றிய கவலை கிடையாதென்பதை நினைத்துக் கொண்டார் போலும். காட்டிற்குச் செல்லும்போதுகூட சீதை பட்டுச் சேலையைத் தவிர வேறென்றை உடுத்துவது அவருக்குப் பிடிக்கவில்லை. ஏன்? வேறொரு உடைக்கும் சீதைக்கும் பொருத்தமில்லை.

சீதை வனத்திற்குத்தான் செல்கிறாள். ஆனாலும் தனது பதியுடன் வசிக்கப்போகிறாள். அதனால் அவள் நகைகளை விட்டுச் செல்ல வேண்டியதில்லை. மேலும் ஒரு வேளை தனது நாயகனுடன் சேர்ந்து வசிப்பதால் வனவாஸ கஷ்டத்தை மறந்து குதூகலமேலீட்டால் தன்னை யலங்கரித்துக் கொள்ள நினைப்பாள். அப்பொழுது நகைகளில்லாவிட்டால் வீணாக அவளுடைய கண்கள் கலங்க நேரிடும். அது வேண்டாம் என்று நினைத்த வசிஷ்டர் ஆபரணங்களையும் கொடுத்தனுப்பச் சொன்னார்.

இதனால் நமது தேசத்துப் பெண்களுக்கு நகையணிவதிலுள்ள ஆவல் ராமாயண காலத்திலுமிருந்திருக்கிறதென்று தெரிகிறதல்லவா? நகைகளதிகமணியாத காலம் ஒன்றிருக்குமானால் அது விருப்பக் குறைவா யிருந்திருக்க முடியாது. பொருளாதாரக் குறைவால் தானிருந்திருக்கும்.

நாம் பார்த்த அளவில் தற்கால நாகரிகம் புகுவதற்கு முன்னால் ராமாயண காலத்து நகைகள் முழுவதும் வழக்கத்திலிருந்து வந்திருக்கின்றனவென்று தெரிகிறது. தற்காலத்தில் சில மறைந்து விட்டன. சில அதிகமாகி இருக்கின்றன. அதிகமானவை பழைய நகையிலேயே அதிகம் கற்பனை செய்யப்பட்டவைதான். உதாரணமாக மோதிர மணிவது எக்காலத்திலுமுள்ள பழக்கமென்று தெரிகிறது. இக்காலத்திலும் எல்லோரிடமும் மோதிர மணி

வது சாதாரணமாக இருக்கிறது. அது ராமாயணத்திலும் கூறப்படு கிறது. அங்கு மோதிரம் அங்குளீயக மென்று சொல்லப்படு கிறது. அங்குளீயகப்ரதான மென்பது ராமாயணத்தில் ஒரு விசேஷ கட்டம். அது படிக்கப் படும் நாள் படிப்பவருக்கும்கூட உயர்ந்த நாள். நிறைய வரும்படி கிடைக்கும். இது சீதையிடம் ராமரின் அடையாளமாக அனுமான் கொடுப்பது.

இது போலவே தான் சூடாமணி ப்ரதானமென்பதும். சூடாமணி என்ருல் தலையிலணியும் ஆபரணத்திற்குப் பெயர். அது ஜடைபில்லையாகவோ ராக்கொடியாகவோ இருந்திருக்கலாம். இது சீதையின் அடையாளமாக ராமரிடம் அனுமான் கொடுப்பது. இப்பொழுது ராக்கொடி அணிவது அநேகமாக மறைந்துவிட்டது. ஜடை பின்ன லணியும் வழக்க மிருந்து மில்லாமலுமிருக்கிறது. ராமாயணத்தில் கூறப்படும் ஆபரணங்களில் கேயூர மென்ப தொன்று. இது சமீப காலம் வரை உபயோகத்தி லிருந்து வந்தது. கடக மென்று பெயர் கூறி வந்தார்கள். கையில் தோளின் சமீபமாக அணிந்து கொள்ளக் கூடியது. இதை காலக்ஷேபம் செய்யும் பாகவதர்கள் கூட அணிந்து வந்தார்கள். இப்பொழுது பாகவதர்களின் கதா காலக்ஷேபங்களோடு இந்தப் பழக்கமும் மறைந்துவிட்டது. மற்ருென்று குண்டலம். இது மொத்தம் காதி லணியும் கடுக்கன் தோடு முதலியவைகளைக் குறிக்கிறது. இவைகளை வைத்தே பலவித ஜிமிக்கிகள் இந்தக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றன. நூபுர மென்பது ஒன்று. இது கால் பெரு விரலுக்கு அடுத்த விரலில் இரண்டு மூன்ருகச் சேர்த்து அணிந்து கொள்வது. இதற்கு மிஞ்சி உருட்டு என்றும் பெயர்க ளிருக்கின்றன. இது பெண்கள் அவசியமணிய வேண்டிய நகைகளிலொன்ருகக் கருதப்படுகிறது. ஆனுலும் முக்கால் வாசிப் பேர்கள் இதை அணிவதில்லை. நாட்டுக்கோட்டைச் செட்டிமார்ப் பெண்கள் மாத்திரம் இவ்வளவு நாகரீகத்திற் கிடையேயும் இதை யணியும் நல்ல பழக்கத்தை விடவில்லை. இந்த நகைக ளெல்லாம் சீதை யணித்திருந்தவை. வால்மீகி சீதையையோ அவள் செய்து கொண்ட அலங்காரத்தையோ வருணிக்கவில்லை. அதனுலேயே சீதை யணிந்திருந்த மற்ற நகைகளைப் பற்றிக் கூறவில்லை. ராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போகும்பொழுது அவளால் சுக்ரீவனிடம் போடப்பட்ட சில நகைகளைப் பற்றியே கூறுகிருர்,

ராமருக்கு சுக்ரீவனுடன் நட்பு ஏற்பட்ட சமயம் 'ராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு சென்றதைத்தான் கண்டதாக சுக்ரீவன் ராமரிடம் கூறுகிருன். அப்பொழுது அடையாளமாக இந்த நகைகள் காண்பிக்கப்படுகின்றன. உடனே ராமர் லக்ஷ்மணனிடம் 'லக்ஷ்மணு! பார்த்தாயா? வெறுப்படைந்த சீதை இந்த நகைகளைக் கழட்டி எறிந்திருக்கிருளென்ருர்.

அதற்கு லக்ஷ்மணன், 'நான் இந்த குண்டலம் முதலிய ஆபரணங்களைக் கண்டதில்லை. இந்த நூபுரங்கள் மாத்திரம் நான் தினந்தோறும் மதனியின் பாதங்களில் வணங்குவதால் அடிக்கடி என் கண்களில் தென்பட்டிருக்

கின்றன. அதனாலிவைகளை மாத்திரம் நானறிவேனென்றான்.

தாரை ஒட்யாண மணிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. தாரை சுக்ரீவனை யடைந்த புதிது. இருவரு மானந்தமாகக் காலங் கழித்து வரும் சமயம். அதனால் சுக்ரீவன் தான் சீதையைத் தேட ஆரம்பிப்பதாகக் கூறிய காலத்தை மறந்து விட்டான். அதனால் கோபமடைந்து லக்ஷ்மணன் வந்திருக்கிறான். அப்பொழுது ராம லக்ஷ்மணர்கள் பெண்களிடம் கோபத்தைக் காட்ட மாட்டார்கள் என்று தெரிந்த சுக்ரீவன் லக்ஷ்மணனை சமாதானம் செய்ய தாரையை அனுப்புகிறான். அவசரமாகச் செல்லுகிறாள் தாரை. அவள் சுக்ரீவனுடன் பருகிய மதுரஸத்தின் நாற்றம் இன்னும் அவள் முகத்தை விட்டு நீங்கவில்லை அவளணிந் திருக்கும் தங்க ஒட்யாணம் நழுவிக் கீழே விழுகிறதாம். இவ்விதமாக தாரை லக்ஷ்மணனிடம் செல்கிறாள் என்கிறார் வால்மீகி,

இன்னும் அனுமான் இலங்கையில் சீதையைத் தேடும் போது அங்குள்ள பெண்களணிந்திருந்த முத்து மாலை முதலிய ஆபரணங்களைக் கூறுகிறார். இவ்விதம் உயர்ந்த புடவை உடுத்துவதிலும் சிறந்த ஆபரங்களணிவதிலுமுள்ள ஆவல் ராமாயண காலத்தொட்டே நமது நாட்டிலிருந்து வந்திருக்கிறதென்று தெரிகிறது.

நல்ல நகைகளை யணிந்து கொண்டால் மாத்திரம் போதுமா? உயர்ந்த பட்டுப் புடவை உடுத்திக்கொண்டால் மாத்திரம் போதுமா? இவைகளாலேயே நல்ல செயற்கையழகு உண்டாகி விடுமா? இல்லை இதற்கு மேலும் சில நகாஸ் வேலைகள் தேவையாகத்தானிருக்கின்றன. தலையைப் பின்னிக் கொள்ளவோ அல்ல முடிந்து கொண்டை போட்டுக் கொள்ளவோ வேண்டும். முகத்தை நன்றாக அலம்ப வேண்டும். தனது பிள்ளைக்கு கலியாணம் செய்யப்போகும் தாய்மார்கள் பெண் ஓகோகோ என்று இல்லாவிட்டாலும் முகத்தை அலம்பிப் பொட்டிட்டால் பளிச்சென்றுவது இருக்க வேண்டுமென்று சொல்லக் கேட்டிருக்கிறோம். சில பேர்களுக்கு முகத்தை சுத்த ஜலத்தால் கழுவினால் பளிச்சென்றாகிவிடும். சில பேர்களுடைய முகம் முன்னிருந்ததைவிட கூடக் கொஞ்சம் எண்ணெய் வழிய ஆரம்பித்துவிடும். அதனாலிந்த எண்ணெய்யைப் போக்குவதற்கு சோப்பு மிகவும் முக்கியமாகிறது.

முகத்திலிருக்கும் எண்ணெய்யைப் போக்குவதற்கு சோப்பு வந்தவுடன் அதோடு பவுடரும் வந்துவிட்டது. இந்தப் பவுடரால் எத்தனையோ கறுப்பு முகங்கள் சிகப்பு முகங்களாகக் காக்ஷியளிப்பதுண்டு. ஆனாலிதற்கு வியர்வை மாத்திரம் சத்துரு. இதேமாதிரி இந்த அலங்கார வகையில் இன்னும் பல பொருள்களிருக்கிறன.

பார்வதியின் கலியாணத்தில் பெண்கள், பார்வதிக்குச் செய்யும் அலங்காரத்தைக் கூறுகிறார் காளிதாசர். பார்வதி மணப் பெண்ணான படியால் முதலில் மங்களஸ்னானம் செய்துவைக்க ஆரம்பித்தார்கள். அதற்கு முன்னதாக வெண்கடுகுடனும் அறுகம் புற்களுடனும் சேர்த்து வைத்திருந்த பட்டுச்சேலையை உடுத்தினார்கள். பிறகு மங்கள தைலம் தேய்த்துக் குளிக்கும்

போது கட்டிக்கொள்ளத் தகுந்த துணியை உடுத்தினர்கள். அப்புறம் லோத்ர கல்கத்தையும் சில வாஸனைப் பொடிகளையும் தேய்த்து, ஸ்னான அறைக்கு அழைத்துப் போனர்கள். லோத்ர மென்ருல் நுணுமரம் கல்க மென்ருல் ஈரப்பசையுடன் கூடிய பொடி. இதை உடம்பில் தேய்ப்பதால் சினைப்புகள் வராது என்று சாரங்கதரர் கூறுகிருர்.

வைரங்களிழைத்தும், பலவித முத்து மாலைகள் தொங்கிக் கொண்டுமிருக்கும் ஸ்னான அறையில் தங்கக் குடங்களிலுள்ள ஜலங்களால் பார்வதிக்கு ஸ்னனம் செய்வித்தார்கள். மங்கள வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. பிறகு முகூர்த்த மண்டபத்திற்கு அழைத்துவந்து அலங்காரம் செய்ய ஆரம்பித்தார்கள். அதற்குவேண்டிய ஆபரணங்களைச் சித்தமாக வைத்திருந்தார்களானுலும் பார்வதியின் இயற்கையழகு நகைகளை எங்கு அணிவிப்பதென்று தெரியாமல் அவர்களைத் திகைக்க வைத்துவிட்டது.

ஒரு பெண் பார்வதியின் கூந்தலை வாஸனைப் புகையால் பதனிட்டு, உலர்த்தி, நன்ருகப் பின்னி அறுகம் புல்லும் வெள்ளை மதூக புஷ்பமும் கலந்து தொடுத்த மாலையை அணிவித்தாள். வேருருவள் பார்வதியின் உடம்பில் வெள்ளகிற் குழம்பைப் பூசி கோரோசனையால் சித்திரமெழுதினுள். அவ்விதமெழுதப்பட்ட சக்கிரவாகம் முதலிய பறவைகளால் பார்வதி கங்கைக்கரையைவிட அழகுள்ளவளாகவே தோன்றினுள். வெள்ளகிற் குழம்பும், அதன் மேல் கோரோசனையும் சேர்ந்திருப்பதால் மிகவும் சிவந்த பார்வதியின் கன்னங்களில் சேர்ந்து அவள் காதுகளி லணிந்திருக்கும் பச்சை நாத்து தோன்றும்பொழுது பார்ப்பவர்களுடைய கண்கள் கூசத்தொடங்குகின்றன. பிறகு ஒருவள் சிறிது தேன்மெழுகை எடுத்து உதட்டில் தடவினுள் இதுவே பழையகாலத்து லிப்ஸ்டிக்போலும். வேருெரு பெண் செம்பஞ்சுக் குழம்பால் கால்களுக்கு அலங்காரம் செய்தாள். மேலும், பார்வதி இந்தக் கால்களால் உனது நாயகனின் தலையிலிருக்கும் சந்திரகலையைத் தொடுவாயா? என்றும் கேட்டாள். உடனே பார்வதி தன்கையிலிருக்கும் பூமாலையால் அவளை யடித்தாள்.

கருநெய்தல் போன்ற பார்வதியின் கண்களுக்கு அஞ்சனம் பிரமாத அழகை உண்டாக்கி விடப் போகிற தென்று நினைத்து தீட்டவில்லை. அதுவும் ஒரு மங்கள காரியமாக இருக்கிறபடியால் மை தீட்டினுர்கள். பார்வதி கண்ணுடியின் முன் நின்று தனது அழகைப் பார்த்தாளாம். உடனே பரமசிவனையடைய வேண்டுமென்ற எண்ணம் நூறு மடங்கு அதிகமாகிவிட்டதாம்.

பிறகு தாயாகிய மேனை வந்து சுட்டுவிரலால் ஹரிதானக் குழம்பையும் கோரோசனைக் குழம்பையும் எடுத்துப் பார்வதியின் முகத்தை நிமிர்த்தி வெகு கஷ்டத்துடன் திலகமிட்டாள். கண்களை ஆனந்தக் கண்ணீர் மறைத்துவிட்டதால் மேனை கஷ்டமடையநேரிட்டது.

இவ்வித அலங்காரம் புராதன காலந் தொட்டே நமது நாட்டிலிருந்து வருகிறது.

தினசரி மாலை வேளையில் அவன் வருகையை எதிர்பார்த்து ஆவலுடன் நிற்பாள் அவள். அவனும் ஓடோடியும் வருவான். ஆரம்பத்தில் இது பூலோகமா, கைலாஸமா என்று தெரியத்தான் இல்லை, ஆனால் அந்த நாலு வருஷங்கள்...

வாசல்

சாவித்திரி

கல்யாண ஊர்வலம் பெரிய தெருவின் மூலையில் திரும்பிக் கொண்டிருந்தது. நாதஸ்வரக் காரன் கல்யாணி ராகத்தை பொழிந்து கொண்டிருந்தான் நாதஸ்வரக்காரனைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் நின்றுகொண்டு அமிருதத்தைப் பருகிக் கொண்டிருந்தது.

தன்மேல் விழுந்த பன்னீரை துடைத்துக்கொள்ள திரும்பினான் கோபு. அதே சமயம் தன் சரிந்து விழ இருந்த தலைப்பைச் . சரிப்படுத்திக் கொள்ள திரும்பினாள் பங்கஜம். இருவர் கண்களும் சந்தித்தன. மின்சாரம் போன்ற ஏதோ ஓர் உணர்ச்சி தன் உடம்பில் பாய்வதுபோல இருந்தது பங்கஜத்திற்கு தன்னுடைய புதிய வாழ்க்கையைப் பற்றிய இன்பக் கனவுகள் அவள் கண் முன் தோன்றியது.

2

பங்கஜத்திற்குக் கல்யாணம் ஆனபோது, எல்லோரும் பங்கஜம் ரொம்ப அதிர்ஷ்டசாலி. மாமியார் கிட்ட இருந்து குப்பை கொட்ட வேண்டாம். கல்யாணம் ஆன உடனேயே அகமுடையானுடனே தனிக் குடித்தனம் பண்ண ஆரம்பித்து விடலாம் நல்ல அழகாய் இருக்கான் என்று சொன்னார்கள். பங்கஜத்திற்குப் பெருமை தாங்க முடியவில்லை.

முதலில் அவர்கள் இருவருக்கும் இது பூலோகமா என்பதே சந்தேகமாய்த் தோன்றியது. சாயங்காலம் ஆனதும் பங்கஜம் வாசலில் போய் நின்றுகொண்டு வாசலையே பார்த்துக் கொண்டிருப்பாள்.

கோபு ஆபிஸிலிருந்து வீடு திரும்பும் பொழுது ஆவலுடன் வீட்டின் வாசலையே நோக்குவான். தனக்காக வாசலில் நின்று கொண்டிருக்கும் மனைவியைக் கண்டு பூரித்துப்போவான். பங்கஜம் என்று அழைத்துக் கொண்டே உள்ளே நுழைவான். எல்லா சுக, துக்கங்களுக்கும் ஓர் மூற்றுப் புள்ளி உண்டென்பதை அவர்கள் வாழ்க்கை அவ்வளவு சீக்கிரத்தில் நிரூபிக்க வேண்டாம். யாருடைய கண் பட்டதோ, சீர்குலையத் தொடங்கியது.

பங்கஜம் ஒருமாத கர்ப்பிணி. அன்று நல்ல நிலவு காய்ந்து கொண்டிருந்தது. எங்கும் பூரண அமைதி நிலவியிருந்தது. பங்கஜத்தின் மனதில் கோரமான புயல் அடித்துக் கொண்டிருந்தது. குளிர்ந்த நிலவு அவளுக்கு வேதனையே தந்தது.

இதற்கு முன் ஒருநிலா இரவில் தானும் கோபுவும் இன்ப சாகரத்தில் மூழ்கி இருந்தது ஞாபகத்திற்கு வந்தது. இன்று அவளால் இந்தத் தனிமையைத் தாளவே முடியவில்லை.

'நான் அவ்வளவு பாவியா? எனக்கும் அவருக்கும் நடுவில் இந்த பாழும் சீட்டாட்டமும்

நண்பர்களும் வந்ததே. எவ்வளவோ அன்பாய் இருந்த என் கணவரை என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு போய்விட்டதே. என்று மனம் எண்ணித் தத்தளித்தது.

கோபு நிறைய சொத்து உள்ளவன் என்று அறிந்து பல நண்பர்கள் சுற்ற ஆரம்பித்தனர். கொஞ்சம் கொஞ்சமாக சீட்டாட்டமும் கெட்ட பழக்கங்களும் அவனைக் குடி புகுந்தன. புது மோக வெறியில் வீடு சரியாகத் திரும்புவதில்லை. பங்கஜத்தை அடியோடு மறந்து விட்டான்.

சொத்தெல்லாம் கரைந்து விட்டது. மிஞ்சி இருந்தது ஊரிலுள்ள பரம்பரையான சொத்து நிலம்தான். கோபு அம்மாவிற்காக பயந்து அதை இதுவரையில் பணயம் வைக்காமல் இருந்தான். அன்று ஆட்டம் வெகு சுவாரஸ்யமாய் நடந்துகொண்டிருந்தது. கடைசி ஆட்டம். மெய் மறந்து நிலத்தையும் வைத்து ஆடிவிட்டான். ஆட்டத்தில் தோற்று அதையும் பறிகொடுத்தாய் விட்டது. வேலையும் போய் விட்டது. மனைவியின் நகைகள் முதல் எல்லாம் பறிபோய்விட்டது. இனிமேல் மனைவியின் முகத்திலோ அல்லது தாயின் முகத்திலோ எப்படி விழிப்பது.

நான்கைந்து நாளாக வீட்டிற்கே வரவில்லை. பங்கஜம் சாப்பிட்டு பத்து நாட்களாய் விட்டது. தன் வாழ்வு கட்டிய இன்பக் கோட்டைகள் அடியோடு தகர்ந்து விட்டது. பெண்ணையிற்றே, எங்கு சென்று அவனைத் தேடுவது. ஒன்றுமே புரியவில்லை. தன் வயிற்று பாரம் நீங்கி இறக்கப் போகும் தருவாயில் கண்மணியைப் பற்றியே எண்ணங்களே அவள் உள்ளத்தில் அலை மோதியது. சிறு வயதிலேயே தாயை இழந்த அவள் கல்யாணம் ஆனவுடன் தந்தையையும் இழந்துவிட்டாள். வேறு வழியின்றி மாமியாரிடம் போய்ச் சேர்ந்தாள்.

விஷயத்தை அறிந்த அவளுக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இருவரும் தாளா மன வேதனையோடு ஒரு வருஷம் கழித்தனர். இந்து சமூகத்தில் புருஷன் போய் ஒரு வருஷம் வரை திரும்பா விட்டால் அவன் இறந்ததாகவே கருதி எல்லாக் கிரியைகளும் செய்துவிடுவார்.

அப்பாவையே உரித்து வைத்திருந்தான் சங்கரன். அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு கிழ ஜீவனும் பங்கஜமும் ஆறுதலடைந்தனர். கணவன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கையையே இழந்துவிட்டாள் பங்கஜம். அவளுடைய ஒரே ஒரு குறி சங்கரன் நன்றாக இருக்க வேண்டும் என்பதே. கண்ணிமையால் கண்மணியை மூடி வளர்த்தாள்.

வருடங்கள் ஓடி மறைந்தன. அந்தக் கிராமத்திலிருந்து பத்து பன்னிரண்டு பேர்கள் காசிக்குப் போவதற்கு புறப்பட்டனர். பங்கஜமும் வயதான மாமியாருடன் காசிக்குப் புறப்பட்டாள். காசிக்குப் போயாகிலும் தன்னுடைய பாப மூட்டைகளைப் போக்க எண்ணினாள் பேதை.

காசியில் எல்லோரும் ஒரு வீட்டில் தங்கி இருந்தனர். இரண்டு நாட்கள் கழிந்ததும் கூட வந்தவர்கள் ஹரித்வாருக்குப் புறப்பட்டனர். பங்கஜம் உடன் வந்திருந்த ஒருபாட்டியிடம் சொல்லிக்கொண்டிருந்தாள்.

"பாட்டி நாளைக்கு மறுநாள் சங்கரன் பண்ண வேண்டிய

சிரார்த்தம் வருகிறதே, என்ன செய்வேன் பாட்டி. ஹரித் வாரில் ஏற்பாடுகள் எல்லாம் செய்ய முடியுமா? என்ருள்.

"அங்கு எப்படி முடியும்? இங்கேதான் நீங்கள் இரண்டு பேருமாக இருந்து தெவசத்தை முடிச்சூட்டு வாங்கோ என்ருள்.

'இரண்டு நாட்கள் வந்து தங்கி இருக்கிற இடத்திலே சிரார்த்தம் பண்றதுக் கெல்லாம் இடம் கொடுப்பாளோ என்னவோ? நான் பண்ணினபாவம்தான் இது. ஐயோ! என்ன பண்ணுவேன்" என்ருள் கண்களில் நீர் பொங்கியது.

இதை யெல்லாம் உள்ளே இருந்து கேட்டுக் கொண்டிருந்த வீட்டுக்கார அம்மாள் வெளியே வந்து, "பரவாயில்லை உங்க கதையைக் கேட்டதிலிருந்து ரொம்பவருத்தமாய் இருக்கிறது. இருந்து தெவசத்தைப் பண்ணுங்கோ என்ருள்.

மிக்க மகிழ்ச்சியோடு வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டாள் பங்கஜம்.

4

சிரார்த்தத்தன்று காலை எல்லாம் நடந்துகொண் டிருந்தது. வீட்டின் யஜமானர் திடீரென்று ஆபிஸிலிருந்து வீடு திரும்பி வந்தார். வீட்டிற்குவந்து சாரதா சாரதா என்று கூப்பிட்டார். அவர் மனைவி ஓடி வந்தாள்.

எனக்கு கார்த்தாலேயிருந்து தலையை வலித்துக் கொண்டிருந்தது. ஆபிஸிற்குப் போனதும் எனக்கு என்னவோ செய்தது உடம்பை. என்னுல் மூச்சே விட முடியவில்லை என்று கூறிக் கொண்டே கட்டிலில் தொப் என்று விழுந்தார்.

'ஐயையோ என்ன பண்ணுவேன்! டாக்டரை கூப்பிட்டுக் கொண்டு வரட்டுமா? காபி கொண்டு வரட்டுமா' என்று பதறினுள்.

உள்ளே என்ன நடக்கிறது?

"சிராத்தம் நடக்கிறது" என்ருன்.

முதல் நாள் இரவு பங்கஜத்தின் வரலாறுகளைச் சாரதா விடமிருந்து அறிந்து கொண்டிருந்த அவனுக்கு சிறிது சந்தேகம் மனதில் புகுந்தது. இப்பொழுதோ அது ஊர்ஜிதமாய்விட்டது.

சாரதா போய் அந்த அம்மாளை அழைத்துக் கொண்டு வாயேன் என்ருன். ஒன்றும் புரியாமல் போய் பங்கஜத்தை அழைத்துக் கொண்டு வந்தாள்.

பங்கஜத்தைப் பார்த்ததும் "பங்கஜம்,இந்தப் பாவியை மன்னித்து விடுவாயா? என்னுல் முடிந்த வரையில் துன்பப்படுத்தி விட்டு பூர்ண கர்ப்பிணியான உன்னைவிட்டு ஓடி வந்து விட்டேன்' என்று பிரலாவித்தான் அவள் கைகளைப் பிடித்துக் கொண்டே.

அதே சமயத்தில் உள்ளே நுழைந்த நாலு வயதுக் குழந்தை சங்கரனை வாரி எடுத்துக்கொண்டான் கோபு.

"சாரதா, பிள்ளை இல்லையே என்று மனம் உடைந்த உனக்கு இனி இவன்தான் பிள்ளை. என்று சொல்லிக் கொண்டே அவள் கையில் குழந்தையைக் கொடுத்தான்.

குழந்தையை ஆர்வத்துடன் வாங்கி அணைத்துக் கொண்டாள் சாரதா. அவள் கண்கள் ஆனந்தக் கண்ணீரால் நிரம்பியது.

கன்னடக் கதை

பயணம்

மூல எழுத்தாளர்: ஸ்ரீமதி 'வாணி'

மொழி பெயர்ப்பாளர்: ஜயலக்ஷ்மி R. ஸ்ரீனிவாசன்

"யஜமானர் விஜயம் செய்து கொண்டிருக்கிறார்," என்று பணிப்பெண் சொல்லுகையில் ஸீதாதேவி அறையில் ஒண்டியாக அமர்ந்து ஜன்னலுக்கு அப்பால் உள்ள பூந்தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். தென்றல் உள்ளும் புறமும் தவழ்ந்தவாறு அவளுடைய சுருட்டை மயிரை சிதறடித்தது. வெளியே செடிகொடிகள் எல்லாம் பொற்குழம்பில் தோய்த்தெடுத்தாப் போல் பள பளத்து காற்றுக்கு அசைந்தாடின.

ஸீதாதேவி "இப்பொ பார்ப்பதற்கு அவகாசமில்லை" என்று சொல்லி, தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருக்கும் பொழுதே ராமனாதனே உள்ளே வந்துவிட்டதால் தேவியின் யோசனை அவ்வளவுக்கே வெட்டுண்டு, சட்டென்று எழுந்து நின்றாள்.

ராமனாதன், உள்ளே வந்தவன் பணிப்பெண்ணை போகும்படி ஜாடை காட்டிவிட்டு தானும் ஜன்னலருகில் வந்து நின்று கொண்டான். வெளியே பார்க்கையில் அவ்விடத்திய எழில் அவனையும் மயக்கிற்று. அவன் பிறவிரஸிகன், நல்ல வாலிபப் பருவம்! கூட தகப்பனாரின் மரணத்தினால் புதிதாக வந்த அதிகாரம்! அவ்வளவு சிறு வயதில் அபாரமான ஐசுவரியத்துக்கும் பெரிய ஜாகீருக்கும் எகமாத்திர அதிகாரி! இவை யனைத்தையும் மீறும்படி மேன்மை தங்கிய அரசாங்கம் அவன் யுத்த காரியங்களுக்கு செய்த உதவிக்காக அப்பொழுதுதான் கொடுத்த "ராஜா" என்னும் பட்டம் அவனை மேலும் தலைகால் புரியா வண்ணம் செய்திருந்தது. என்னவென்றாலும் அவன் குலத்துக்கு பட்டம் சம்பாதித்தவன்! அச்சமயத்தில் அவனுக்கு உலகம் முழுவதும் சுக சந்தோஷங்கள் தான் நிறைந்து தளும்புவது போலவும், அவையனைத்தும் தனக்காகத்தான் என்றும் தோன்றினதில் ஆச்சரியமொன்றுமில்லை.

ஸீதாதேவி பதினேழு வயது பேரழகி. சாமான்ய குடும்பத்தில் பிறந்தவள். அவள் அழகும், சமர்த்தும் அவளை அந்தப் பதவிக்கு எற்றிற்று. மூன்று வருஷங்களுக்கு முன்னால் எதோ அலுவலாக அங்கே சென்றிருந்த ராமனாதன் அவளைப் பார்த்து மயங்கினவனாய், அழைத்துவந்து கலியாணம் செய்து கொண்டான்.

கடைசியில் வென்றவள் ஸீதாதேவிதான் ஆனாலும் அவள் இந்த வெற்றியைப் பெறுவதற்காக எத்தனை பாடுபடவேண்டியிருந்தது என்பதைப் படிக்கும்போது எவ்வளவு கஷ்டப்படுகிறது நம் மனம்!

முதன் முதலில் எல்லாம் சுகமாகவே இருந்தது. ஆனால் ராமனாதன் 'ராஜா ராமனாதனா'கி கூட அதிகாரமும் கிடைத்தது புதுப் புது சகவாசங்கள் வளர வளர நிர்மலமான சம்ஸார மென்ற ஆகாய வீதியில் அசமாதானங்கள் என்ற கருமேகங்கள் தோன்ற வாரம்பித்தன.

"இன்று தேவிக்கு ரொம்ப அசமாதானம்போலிருக்கு. அப்பொழுதிலிருந்து நின்று கொண்டிருந்தாலும் உட்காரும்படிகூட சொல்லவில்லை!" என்று ராமனாதன் (மனது) உறுத்தும்படி சொன்னான்.

"தங்கள் அகத்தில் தங்களுக்கு உபசாரம் சொல்ல நான் எம்மாத்திரம்? கேவலம் தங்கள் விருப்பத்தின் பேரில்தான் என் வாழ்வு, அழிவு இரண்டும். சுவாமிக்கு வேண்டாதவள் என்று தெரிந்ததுமே இந்த அகத்தில் நான் யாருடைய மதிப்பிலும் இல்லை. தங்கள் புருவத்தின் ஜாடையால் யாரைத் துரத்தத் தயாராக இருக்கிறீரோ, அவளிடம் உபசாரம் விரும்புவது எத்தகைய நியாயம்?"

"தேவி! நீ அநியாயமாக என்னைப் பழிக்கிறாய்! நான் யாரையும் துரத்தவில்லை. நீயாக போவதற்கு விரும்பினால் என் தவறென்ன?"

"ஆத்ம கௌரவம்படைத்த எந்தப் பெண்ணும் இச்சமயம் வேறொன்றும் செய்ய முடியாது!"

"தேவி, வீண் கர்வத்தில் மயங்குவதைவிட ஆற அமர யோசிப்பது நல்லதல்லவா?"

"இந்த நாட்களில் என் பங்கில் யோசிப்பது தவிர வேறொன்றும் மிஞ்சவில்லை. யோசிக்க யோசிக்க, நான் முதலில் எல்லாம் என்னுடையதுதான் என்று எண்ணியிருந்த மாயத் திரை விலகி, என் உண்மையான நிலைமையின் அறிவு உண்டாகிறது. அவ்வளவேன்? மொத்தத்தில் இந்தியப் பெண்களின் நிலைமையானது பக்ஷபாதிகளின்—சாஸ்திரக்காரர்களின் கையில் அகப்பட்டுக்கொண்டு எத்தனை இழிவான நிலைமைக்கு இறங்கியுள்ளது என்பது பளிச்சென்று விளங்கி, ரத்தம் கொதிக்கிறது. ஆனால்—என் அசகாயத்தன்மை நினைவுக்கு வர வர வாழ்க்கையே அலுத்துப் போகிறது."

"அப்படியே ஆகட்டும்; உன் கக்ஷிபோல் சாஸ்திரக்காரர்கள் எல்லாம் பக்ஷபாதிகள் என்றே நம்புவோம். அது கிடக்கு—நான் சொல்வதை கேட்பாயா தேவி—நான் மறு விவாகம் செய்துகொண்டால் உன் சுகத்துக்குக் குறைவென்ன? உனக்கு எவ்விதத்திலும் குறைவு ஏற்படா வண்ணம் பார்த்துக்கொள்ள, நான் இல்லையா? வேறு யார் வந்தால்தான் உனக்கு இணையாவார்கள்......!"

"மன்னிக்க வேண்டும்....மகாராஜா. வஞ்சனையுடன்கூட நடிப்பையும் கற்றுக்கொண்டிருக்கிறீர் போல் இருக்கு. அப்படியானால் என் ஸ்திதி கடினமாகும். தாங்கள் சொல்வதுபோல் சுகம் அவ்வளவு சுலபமாகக் கிடைக்கக்கூடியதாக இருந்தால், அதற்காக இங்கேயே இருந்துகொண்டு ஏன் திண்டாடவேண்டும்? தாங்கள் பெரிய மனது வைத்து கொடுப்பதாக உத்தேசித்திருக்கும் பணத்தில், அவ்விடத்திலும் இதே நாற்காலி, மேஜை, நகை நட்டுகள் எல்லா

வற்றையும் (விலக்கு) வாங்கிக் கொண்டு சுகமாக இருக்க வாமே!''

"தேவி! நான் வந்திருப்பது உன் அனுமதியைப் பெறுவதற் காக அல்லாமல் வாதம் (தர்க்கம்) செய்வதற்கல்ல! தெரிந்ததா?''

''மகாராஜா சுதந்திரர். என் அனுமதியை (ஒப்பந்தத்தை) கேட்கும் அவசியம்தான் என்ன? நீங்களே கேட்ட பிறகு என் மனது திறந்து பேச அவகாசம் இருக்க வேண்டும். அப்படி இன்றி வற்புறுத்தி என்னிடம் "ஊம்'' கொட்ட வைத்தால் அது ஒப்பந்தமாகுமா?''

"அப்படி யென்றால் கடைசி வரைக்கும் உன் பிடிவாதத் தையே சாதிக்கப் போகிறாயா?''

''ஆமாம், நான் இந்த வீட் டில் இருக்கும் வரைக்கும் வேறொருத்தி தங்கள் அந்தரங்கி யாய் இங்கே பிரவேசிக்க முடி யாது. ஆனால்...தாங்கள் தங்கள் பிடிவாதத்தையே சாதிப்பதாக விருந்தால் என் வழி எது என் பது எனக்குத் தெரியும். இது வரைக்கும் பலவித அவமானங் களை சகித்தாகிவிட்டது. ஆனால், ...இது......''

"நான் கேட்பதும் அதுவே தான்! அப்பொழுதெல்லாம் எப் படி சகித்தாய்?''

'' அந்த விஷயமே வேறு. எல் லாம் வாலிப முறுக்கு. கொஞ்ச நாள் கழிந்தால் விலைமாதுக்கும், அன்புக்குகந்த மனைவிக்கும் இருக்கும் வேற்றுமையையும் அறிந்து விவேகியாய் திரும்பி வருவீரென்னும் நம்பிக்கை யுடன் சும்மா இருந்தேன். ஆனால் என் ஊகம் பிழையாகி விட்டது. மகாராஜா, அதெல் லாம் முடியும் வேளைக்கு வேறொரு சம்பந்தம் செய்து கொள்வதற்குத் தயாராகுவீ ரென்று கனவிலும் நினைத்திருக்க வில்லை......''

ராமனுஜனின் முகம் கோபத் தால் சிவந்தது. கொஞ்சம் மூர்க்கமாகவே சொன்னான்.

'' ஸ்ரீமதி ஹரிணி, விலைமா தல்ல. சத்கிருஹிணி.''

''மகாராஜாவின் அகராதியில் 'கிருஹிணி' என்கிற சொல் லுக்கு வேறு பொருள் போலிருக்கு! எவள் ஒருவள் மாலையிட்ட மணாளனை வஞ்சித்து, மற்றொரு ஆடவனை.......அவன் ஜாகீர் தாராகட்டும்......யாரே ஆகட்டும்........இச்சித்து, அவ னுடைய குடும்பத்தைக் கவிழ்க்க முயற்சிப்பாளோ.........அவள் "சத்கிருஹிணி! அப்படி என்றால் நம் குடும்ப சுகத்தில் விஷத்தைக் கலக்க, தன் பெண்ணை தங்க ளுக்கு தாரை வார்க்க இணங்கி இருப்பவனும் 'சத்கிருஹஸ்தன்' தான்!''

"ஆமாம், தேவி! உன் வார்த்தை நிஜம். அவன் அரசனை தேவாம்சம் என்று நம்பி என் பேச்சை மீறாத "சத்பிரஜை!''

சீதாதேவி சும்மா இருந் தாள். அவள் பார்வை நிலத்தின் மீது படிந்திருந்தது. அவளுடைய நீண்ட இமைகள் பாதிமூடினுப் போல் இருந்ததால், ஒருவித காம் பீரியத்தை அளித்தது. தியானத் தில் லயித்த தேவியைப் போல் தோன்றிய அவளை ராமனுஜன் மௌனமாகப் பார்த்துக்கொண் டிருந்தான்.

கொஞ்சநேரம் கழித்து, திடீ ரென்று தேவி நிமிர்ந்து "பிரபூ! லலிதாதேவி நிஜமாகவே அவ் வளவு அழகியா?'' என்று கேட் டாள்.

ராமனாதன் சிரித்து, "தேவி! நிஜமாகச் சொல்லப்போனால்... உன்னை மீறும் படியான அழகியை இதுவரையிலும் நான் பார்த்ததில்லை. ஆனால்......மனிதனின் உள்ளம் எப்பொழுதும் அழகிற்கே அடிபணிவதில்லை. அவளை பார்த்ததிலிருந்து என் உள்ளம் கட்டுக்கடங்கவில்லை. காரணம் என்னவென்று கேட்டால் சொல்லமுடியாது. தெய்வ சிருஷ்டியில் இதுவும் ஒரு விசித்திரம். இதை இதயத்தின் பலவீனம் என்றாவது சொல், அல்லது... தேவீ! உன் மனதை மாற்றிக் கொண்டு உத்தரவு கொடு, சும்மா விதண்டாவாதம் செய்யாதே."

"மன்னிக்க வேண்டும். இந்த ஒரு விஷயத்தில் தங்கள் சொற்படி நடக்க சாத்தியமில்லை....... பிரபூ! எனக்குப் புறப்பட அனுமதி கொடுங்கள்."

"இதுதான் உன் கடைசி தீர்மானமா? தேவீ!

"ஆமாம்."

"நான் அத்தகைய தவறு என்ன செய்துவிட்டேன்? அரசர்களுக்கு பல மனைவிகள் இருப்பது ஆதிகாலந் தொட்டு வழங்கி வரும் வழக்கம். ஆனால் யாருடைய ராஜ மகிஷியும் இவ்வாறு செய்ததில்லை!"

"ஆதிகாலத்தில் ஸ்ரீ ராமனைப் போன்ற அரசர்களுமம இருந்தார்கள்!......அதுவும் அன்றி இதிகாசம் என்றைக்கும் மாறுபடாமல் ஒரே மாதிரி இருக்காது."

ராமனாதன் கொஞ்ச நேரம் சும்மா இருந்து, பிறகு மிக மென்மையாக, "சீதா" என்று அழைத்தான்.

தேவிக்கு தூக்கிப் போட்டது. அந்தக் குரல்—அந்தச் சம்போதனை இரண்டும் கடந்துபோன சுகமயமான நாட்களை நினைவுக்குக் கொண்டுவந்தன. கல்லைப் போல் உறுதியாக்கிக் கொண்டிருந்த மனது நெகிழ்ந்து, கண்ணில் நீர் சுரந்தது.

"சீதா, கலியாணமான புதிதில் நாம் எவ்வளவு சுகமாக இருந்தோம்! இப்பொழுது என் மனதின் பலவீனத்தால் இவ்வளவு தொந்திரவுக்கும் காரணம். நீ பெரிய மனது வைத்து ஒத்துக்கொண்டால், என் பித்து சமாதானமடைந்து முன்னிலும் நம் பங்குக்கு சுகமய நாட்கள் வரலாம். எனக்காக இவ்வளவு சகித்துக்கொள்ள மாட்டாயா!"

சொல்லிக் கொண்டே ராமனாதன் ரோஜாப் பூப்போன்ற அவள் கையை தன் கையால் தடவிய வண்ணம் நீர்நிறைந்தும் தளும்பாமலிருந்த கண்களை ஆர்வத்துடன் பார்த்தான்.

சீதாதேவி க்ஷணப்பொழுதில் எல்லாவற்றையும் மறந்தாள். அவளுடைய சினம், (கோபம்) அகங்காரம், (அபிமானம்) பிடிவாதம் (ஹடம்) எல்லாம் அவளைத் துறந்து நழுவிப் போவதுபோல் தோன்றிற்று. அவன் பிடி ஒன்று மாத்திரம் உண்மையாகத் தோன்றி அதிலிருந்து விடுவித்துக் கொள்வது சாத்தியப்படாது போல் தோன்றிற்று. ஒரு வகை அசகாய பலவீனமும் அவளை ஆவரித்தது. ஜலம் பொங்கி வரும் கண்களால் துடிப்புடன் அவன் புறம் பார்வையைச் செலுத்தினாள்.

நடுங்கும் கைகளின் மூலம் அவளுடைய மனநிலையை அறிந்த ராமனாதனின் முகம் கெலித்த புன்னகையை தோற்றுவித்தது.

தேவி அதைப் பார்த்துச் சீறினுள். நெகிழ்ந்து மிருதுவாகிக் கொண்டிருந்த இதயம் ஒரே அடியில் திமிறிக்கொண்டு கல்லாக உறைந்துவிட்டது. தன்னிடமே தனக்கு வெறுப்பு உண்டாகவே கையை 'சரக்' கென்று இழுத்துக் கொண்டாள்.

ராமனுதன் கைக்குக் கிடைத்தது வாய்க்குக் கிடைக்கவில்லையே என்று வருந்தியவனுய் வேட்டையில் குறி தவறவே மேலும் முன்னுக்குத் துரத்திக் கொண்டு போகும் வேடனைப் போல் இரண்டடி முன்னுல் வைத்து, மறுபடியும் கையைப் பற்றிக்கொண்டு— "தேவீ! நீ ஒன்றை மாத்திரம் ஆலோசிக்கவில்லை. இப்போ நீ சிறு பெண்; அதை அறியமாட்டாய். அதிர்ஷ்டம் நன்ருகவிருந்து ஆகும் யோகமிருந்தால், நாளைக்கு உன் மகன் என் சகல ஐசுவரியத்துக்கும், ஜாகீருக்கும் அதிபதியாவான். நீ புறப்பட்டுப் போய், என்றென்றைக்கும் அதற்கு அவகாசமே இல்லாமல் போகச் செய்கிருய். எதிர்காலத்தில், கருவில் அடங்கி இருக்கும் அந்தக் குழந்தையின் ஸ்தானமானங்களை இவ்வாறு பிரஷ்டம் செய்வதற்கு உனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை" என்ருன்.

ராமனுதன் கடைசி அஸ்திரம் என்று அந்த வார்த்தையைச் சொன்னுன். அது தன் குறியை எட்டிவிட்டது. பெண் உள்ளத்தில் சிறு வயதிலிருந்தும் மண்டிக் கிடக்கும் தாய்மை பாசமா (மாத்ரு பிரேமை)னது உயிர்ப்பித்தெழுந்தாற்போல் தோன்றி, கணப்பொழுது, காணுத சுகத்தை விரும்பிற்று. ஆனுல் ராமனுதன் ஒன்றன்பின் ஒன்ருகக் காரணம் சொல்லி, — தன் தாய்மையின் பாசத்தை ஊனம்செய்து, தன் விருப்பத்தை சாதித்துக் கொள்வதற்கு முயல்கிருன் அல்லாமல், அது அவன் மனதாரச் சொன்ன சொல் அல்லவென்று அவள் மனதுக்குப் புலப்படவே அந்த எண்ணம் அடங்கிப்போய், அவளுடைய அகங்காரமும், பிடிவாதமும், இருமடங்காக தலையெடுத்தது. தேவி அலட்சியமாக, "அக்கினி சாக்ஷியாக மாலையிட்ட மனைவியின் சுகத்தையும் ஸ்தானமானங்களையும் காரணமின்றி பிரஷ்டம் செய்வதற்கு தயாராக இருப்பவருக்கு கண்ணுக்குப் புலப்படாத—இன்னும் உலகில் ஜனிக்காத, உயிரின் ஸ்தானமானங்களைக் காப்பாற்றுவதற்கு எனக்கு உத்திரவுபோட அதிகாரம் ஏது?" என்ருள்.

ராமனுதன் கணப்பொழுது ரோஷமும், அகங்காரமும் ஜொலிக்கும் தேவியின் முகத்தைப் பார்த்தவன் ஒன்றும் சொல்லாமல் தலையைக் கவிழ்த்துக்கொண்டு மெள்ள அறையிலிருந்து வெளியே சென்ருன்.

விடிந்தது. பகலவன் உச்சியை எட்டிக்கொண்டிருந்தான், பறவைகள் உதயராகம் பாடிக் கொண்டிருந்தன. இதோ தேவி ரயில் வண்டியில் ஜன்னல் மூலம் வர்ண ஜாலத்துடன் சோபிக்கும் ஆகாயத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். ஊர் சமீபிக்கச் சமீபிக்க அவள் உள்ளம் குழந்தைப் பருவத்தின் வேடிக்கை விளையாட்டுகளை நினைந்து நினைந்து உருகிற்று. சில வருஷங்களுக்கு முன்பு ராமனுதனுடன்கூட முதல் தடவை அவ்வழியே வந்தபொழுது அவளுக்கு உலகமே அழகும் சுகமும் நிரம்பித் தளும்புவதுபோல் தோன்றிற்று. இப்பொழுது அவ

ளுடைய நிலைமை அதற்கு முற்றிலும் நேர்மாறாக விருந்தது. ரயிலின் வேகத்தைவிட இதயத்தின் வேகம் ஜோராக விருந்தது. இரண்டு நாளாகஒரே மூச்சில் பிரயாணம் செய்த அலுப்பால் உடல் துவண்டு விட்டது. தூக்கமின்றி கண்கள் சிவந்திருந்தன. இரவு பகலாக அலுப்புச் சலிப்பின்றி ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். என்ன பார்த்துக் கொண்டிருந்தளோ அவளுக்கே தெரியாது!

பொழுது ஏறிக்கொண்டிருந்தது. சேடிப்பெண் தட்டத்தில் பலகாரம் கொண்டுவந்தாள். தேவி தான் என்றைக்கும் பார்க்காத எதையோ பார்ப்பது போல் பார்த்து விட்டு, என்னவென்றே அறியாதவள் போல் அப்படியெ பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். சேவகி யஜமானியின் நிலைமையைக் கண்டு ஒன்றும் சொல்லமாட்டாதவளாய், கண்களை துடைத்துக் கொண்டு போய்விட்டாள். வெய்யில் இறங்கி இரவு சூழ்ந்து கொண்டது. ஆனாலும் கூட தேவியானவள் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்திருக்கவில்லை.

ராமனாதனின் அதிகாரம் தன் உடலின்மேல் அல்லாமல் இதயத்தின் மேலும் எத்தனை பிரபலமாக விருக்கிறது என்பது அப்பொழுதுதான் அவளுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியவாரம்பித்தது. அவனைப் பிரிந்து துலைவில் இருப்பது தான் எண்ணியபடி சுலபமில்லை என்று தோன்றி—எதிர்காலத்தில் நாட்களை எப்படிக் கழிப்ப தென்கிற கவலை இதயத்தைப் பிளந்தது. அச்சமயம் அவளுடைய உள்ளத்தில் எழும்பிய எண்ண அலைகளை விவரிக்க யாரால்தான் முடியும் நடுநடுவில் அவளையும் மீறி கண்ணிலிருந்து இரண்டொரு சொட்டுக் கண்ணீர் சிந்த அதைத் துடைத்துக் கொள்ள வேண்டுமென்று கூடத் தோன்றாமல் சும்மா இருந்தாள்.

வெகு நேரம் அசைவற்று உட்கார்ந்திருந்தாள் தேவி. பிறகு உடல் ஒருபக்கமாகச் சாய்ந்தது. தேவி தன் அறிவின்றியே தூக்க மயக்கத்தில் அகப்பட்டுக் கொண்டாள்.

“அன்று கார்த்திகை பௌர்ணமி. நிலவொளியில் இருவரும் உல்லாசமாகப் படகில் கிளம்பினார்கள். படகோட்டிகள் யாரும் வேண்டாமென்றுசொல்லிவிட்டு ராமனாதனே துடுப்பைப் பிடித்து ஓட்டலானான். அன்றைய நிலவைப்போல் ஆனந்தம் இதயத்தில் நிறைந்து பொங்கிவழிய, இதோ தேவி சிறு பெண்ணைப் போல், அலைகளின் மீது நெளியும் நிலாவை கை விரல்களால் கலக்கி விட்டு விளையாடிக் கொண்டிருந்தாள். சந்திரன் கடகடவென்று நடுங்கி, அவளுக்கு அகப்பட்ட மாதிரி நடித்து அவள் கலக்குவதை நிறுத்தவும், மறுபடியும் சிரித்துக்கொண்டு எதிரே வருவான். மறுபடியும் அவனைப் பிடிக்க யத்தனிப்பாள் தேவி. ராமனாதன் இந்த விளையாட்டைக் கண்டு சிரித்தவண்ணம் மெல்லிய குரலில் பிரேமகீதம் ஒன்றை பாடிக்கொண்டிருந்தான். விளையாட்டை நிறுத்திவிட்டு அவனுடைய தோள்மீது தலை சாய்த்துக்கொண்டு பாடலை ரசித்துக் கொண்டிருந்தாள். அழகான ஆற்றின் வளம், இதமாகத் தவழும் தென்றல், தொட்டில்போல் அசைந்தாடும் படகு இவையனைத்தும் கூடின பிறகு கேட்க

வேண்டுமா! அவளுக்கு எப்பொழுதோ தூக்கம் வந்துவிட்டது.

"உடல்மீது மழைத் துளிகள் விழுந்து ஜில்லிட, திடீரென்று விழித்துக்கொண்டு பார்த்தாள் தேவி. சந்திரன் மோகத்தின் இடையே மறைந்துபோக, இருள் கவிந்து மழைத் தூறல் விழுந்தது. அவளுக்கு தான் எவ்விடம் இருக்கிறோம் என்று தெரியவில்லை. தூக்கம் சற்று தெளியவே அவளுக்கு எல்லாம் நினைவுக்கு வந்து வெட்கத்துடன் திரும்பிப் பார்த்தாள். என்ன கேடு! ராமனுதன் அங்கே இல்லை! படகு மாத்திரம் அசையாமல் நிற்கிறது. தான் இருப்பது ஆற்றின் நடுவிலா அல்லது கரையா...ஒன்றும் புரியமாட்டேன் என்கிறது. சுற்றிலும் இருள்.

"தேவி சுபாவமாக தைரியசாலி. கிராமத்து இயற்கையான சூழ்நிலையில் வளர்ந்தவள். ஒண்டியாக இருப்பதற்கும் இருளுக்கும் பயப்பட மாட்டாள். ஆனால் ராமநாதன்? அவன் என்னவானுன்!

"தேவி திக் பிரமை அடைந்தாள். போதாக் குறைக்கு தூக்க மயக்கம் முழுக்கத் தெளியவில்லை. அந்த வேளையில் நல்ல யோசனையைவிட கெட்ட யோசனையே தோன்றுவது சகஜம்! அவள் தான் இருக்கும் இடத்தைப் பற்றிய அறிவின்றி பைத்தியக்காரியைப்போல் அவனைத் தேடிக் கொண்டு முன்னால் போனாள். படகு சாய்ந்து ஜலத்தில் உருண்டாள்.

"ரமனுதன் படகை கரையில் கட்டிவிட்டு மறைவில் நின்றுக் கொண்டு பார்த்துக்கொண்டிருந்தான். தன் விளையாட்டித்தனம் இவ்விதம் நேர்ந்ததைப் பார்த்து ஓடிவந்து அவளைப் பிடித்துக் கொண்டான்.

"தேவிக்கு விழிப்புண்டான பொழுது வீட்டில் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்தாள். பால சூரியனின் கிரணங்கள் அறையில் படிந்திருந்தன. கவலையுடன் அவளுடைய படுக்கையருகில் அமர்ந்திருந்த ராமனுதன் அவள் கண் திறந்ததைப் பார்த்து "மன்னித்துவிடு — தேவி! விழித்துக்கொண்டுவிட்டாயா?" என்றான்.

கனவு மறைந்து தெளிவடைந்தாள் தேவி. நிஜமாகவே ராமனுதன் அருகில் உட்கார்ந்து கொண்டு புன்னகையுடன், "விழித்துக்கொண்டுவிட்டாயா? கீதா!" என்றான்.

"சட்டென்று எழுந்து உட்கார்ந்தாள் தேவி. இது நிஜம் தானு—இல்லை இன்னும் கனவா? என்று தடுமாறிக்கொண்டு கேட்டாள்,—

"இதென்ன? தாங்கள் இங்கே! நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேனு என்ன?"

"இல்லை, கீதா! இது உண்மை. நான் உன் ராமனுதன். என் அறியாமைக்காக உன்னிடம் மன்னிப்புக் கோரி, திரும்பி அழைத்துச் செல்வதற்காக வந்திருக்கிறேன்................."

"இதுவும் நிஜமா? அ...ப்படி... யா...னு...ல் லலிதாதேவி?"

"அந்த விஷயத்தை மறந்துவிடு கீதா! நாம் ஊரைப் போய்ச்சேரும் வேளைக்கு அவளுக்குக் கலியாணமாகி தன்வீட்டைப் போய்ச் சேர்ந்திருப்பாள். தேவி! நீ இல்லாமல் என் வாழ்வு பாழ் என்று நீ சென்ற பிறகுதான் தெரிந்தது என்று அழைத்தான்!

'எதிர்பாராதது' இந்த இதழுடன் முடிகிறது. கற்பனைக் கதை அல்ல இது. உண்மையாக நடந்த சம்பவமாகத்தானிருக்க வேண்டுமென்று வாசகர்கள் பலர் எழுதினர்கள். நாமும் உண்மைச் சம்பவம்தான் என்று ஒப்புக்கொள்ளுகிறோம்.

எதிர்பாராதது!

"கல்பனு"

என் மனம் கவர்ந்தவள் இன்னெருவனை மணந்தாள். அவளுடைய திருமணத்துக்கு நானே சென்றேன். அவர்கள் சுகவாழ்வுக்காகப் பிரார்த்தித்தேன். வாழ்க்கை நாடகத்தில் இவைகள் எதிர்பாராத சம்பவங்களேயாகும். ஆனல்... நான் எதிர்பார்த்தது மட்டும் நடக்கவேயில்லை!

அவள் படித்தவள். உலக நடப்பு அறிய அனுபவம் உள்ளவள், நியாயத்தையும் உண்மையையும் அறிந்தவள் என்று நான் நினைத்திருந்தேன். இப்போதும் இந்த நினைப்பு இல்லாமல் இல்லை. ஆனல், அவள் அனுபவ அறிவு உண்மை நிலையை ஆராயப்போதவில்லை.

நான் முன்னர் அவளுக்கு எழுதினேன்: 'என் மனங்கவர்ந்த உன்னை உரியவனிடம் அதாவது உன்னல் விரும்பப்படும் ஆசாமியிடம் சேர்ப்பித்துவிடவே விரும்புகிறேன்.

இப்படி எழுதினதை அவள் புரிந்துகொள்ளாமல்—' உம் மனைவிக்குத் துரோகம் செய்வது தகாது,' என்று எழுதினல்—அனுபவ அறிவுக்குத் திறனில்லை என்றுதான் அர்த்தம். இதே ரீதியில் அவள் பதில் எழுதுவாள் என்பதையும் முன்கூட்டியே நான் அறிந்ததுமட்டும் அல்ல, அவளுக்கே எழுதியிருந்தேன்,

'நான் மணமானவன். என் வாழ்க்கையமைப்பில் என் மனைவியைத்தவிர வேறு எவருக்கும் இடமில்லை. ஆனல், எதிர்பாராத விதமாக நீ என் மனங்கவர்ந்தவள். இக்கவர்ச்சியிலிருந்து நான் விடுபடவேண்டும். ஆகவே நீ விரும்புபவரிடம் உன்னைச் சேர்த்துவிட்டால் நானும் விடுதலை பெறலாம்!

இதைவிடத் தெளிவாக தன் நிலையை எவனும் விளக்கமுடியாது. இதிலே பட்டவர்த்தனமாக உண்மையை விளக்கியிருந்தும் அவள் புத்திரகட்டம் புறப்பட்டால் என்ன நினைப்பது? இருந்தாலும் அவள் பெண்தானே?

நான் அவள் கல்யாணத்துக்குச் சென்றபோது—நடந்த இரண்டொரு விஷயத்தை என்னல் மறக்கமுடியாது. அவள் வீடு செல்லும் முன்னர் ஒரு நண்பரின் வீடுபோயிருந்தேன்.

என்னுடைய திடீர் விஜயம் அவருக்கு வியப்பளித்தது.

'இன்னொருடைய கல்யாணத்துக்காக வந்தேன்' என்றேன்.

'ஓஹோஹோ! அப்பவே நினைத்தேன்' என்றார் அவர். அலட்சியமான முகபாவனை—அலாதியான எளனப் புன்னகை, நெற்றிச் சுருக்கம்,' எல்லாம் என்னை என்னவோ செய்தன.

'ஏன், இப்படி? இந்தக் கல்யாணத்துக்கு வந்ததில் என்ன அதிசயம்?'

'சேச்சே! நான் அப்படியொன்றும் அதிசயப் படவில்லை! ஆனால் அவர்கள் உனக்கு என்ன உறவு?' என்று கேட்டார் நண்பர்.

'உங்கள் மாதிரி நண்பர்தான். 'இப்படித்தான் நானும் நினைத்தேன்' என்று அந்த நண்பர் சொன்னதும் எனக்குக் கோபமே வந்துவிட்டது. அவர் நண்பர் மட்டும் அல்ல, உறவினரும் கூடத்தான். இருந்தாலும்!

'மனசை விட்டுப் பேசுங்கள். பூடகமாக பேசுவார்கள் கோழைகள்,' என்றேன். என்னுடைய இந்த வார்த்தைகள் நண்பரைத் திடுக்கிட வைத்தது போலும்! இருந்தாலும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே—

'இதற்கு முன்னால் நீ அந்தப் பெண்ணைப் பற்றி கேட்டிருக்கிறாயா?' என்று கேட்டார்.

'எந்தப் பெண்ணைப்பற்றி?'

'இப்போது கல்யாணஞ் செய்து கொள்ளப் போகும் பெண்ணைப்பற்றி!'

'கேள்விப் படுவதென்ன! அவளையே எனக்குத் தெரியும்.'

'தெரிந்துமா வந்தாய்?'

'நீங்கள் கேட்டதன் தாத்பரியம்...'

'அந்தப் பெண் படித்தவள்.'

'தெரியும்.'

'அவளுடைய வயது...'

'அதுவும் தெரியும்.'

'மலையைக் கெல்லி எலிபிடித்த மாதிரி இப்போதுதான் கல்யாணம்' என்னுடைய ஆத்திரம் எல்லைமீறி விட்டது. அவருடைய இந்தப் பூடகப் பேச்சு ஆத்திரத்துக்குத் தூபம்போட்டது.

'நீங்கள் படித்த படிப்பு உங்கள் முட்டாள்தனத்தை மாற்றவில்லை. அவளைப்பற்றி விபரீதம் கற்பிப்பதில் உங்கள் அறிவு அழிவதைப் பார்க்கிறேன்.'

'என்னிடம் நீ இப்படிப் பேசிவிடுவதால் லாபம் என்ன? அந்தப் பெண்ணைப்பற்றி இங்கே ஒருமாதிரி—'

'பேசுபவர்களின் கேவலத்தன்மையை நான் அறிவேன்.'

என்னுடைய இந்தப் பதில் அவர் வாயை மூடிவிட்டது.

இரண்டாவதாக ஒரு நெருங்கின நண்பரைச் சந்தித்தேன். அவர் கொஞ்சம் உலகறிந்தவர்.

'அந்தப் பெண் கலியாணத்துக்கா வந்தீர்கள்? இங்கு ஒரு சிலர் ஒரு மாதிரி—'

'நீங்கள் கூட அந்தக் கோஷ்டியில் சேர்ந்தவரா?' என்று படபடப்பாகக் கேட்டேன்.

'சேச்சே! இன்னும் நான் அவ்வளவு முட்டாளாகவில்லை. அற்பர்கள்தான் அவதூறுக் கும்பலில் இருக்க முடியும்' என்றார்.

நண்பரிடம் விடை பெற்றுக் கொண்டு நகர்ந்தேன்.

அந்தச் சின்ன டவுனில் நாகரீக உலகில் வாழத் தெரிந்தவர்கள் ஒரு சிலர்தான் உண்டு! அவள் இந்த சிலரில் ஒருவள். குடும்பப் பாதுகாப்பு அவள் கையில். ஒக்காளித் தந்தை. சின்னத் தங்கைகள். புருஷத் துணை வேறு எவரும் இல்லை. அவள்தான் பெறுப்பாளி. இரண்டொரு பணக்காரவீட்டுக் குழந்தைகளுக்கு 'ட்யூஷன்' சொல்லிக் கொடுத்தாள். கவுரவப் பிழைப்பு. ஆனால், உலகம் - அந்தப்

பணக்காரர்கள்தான் அவளை ஒருமாதிரியாகப் பேசுகிருர்கள்.'

அவர்களுடைய நாகரீகம் ஸ்நோவிலும் பவுடரிலும் ஜார்ஜெட் புடவையிலும், இங்கிலீஷ் தாளித்த தமிழ்ப் பேசுவதிலும் தான் இருக்கிறது. ஆனல் ஒரு அபலைப் பெண் விஷயத்தில் மட்டும் அத்தனை பேரும் நல்லெண்ணம் இல்லாத பிராணிகள்!

கல்யாணத்துக்கு முதல் நாள் இரவு போனேன். மறு நாள் முகூர்த்தத்தின் போதும் போனேன்.

நேற்றைக்கு அவளைத் தூற்றிப் பேசிய நண்பர் எனக்கு முன்னரே வந்திருந்தார்! அவர் ஏனே என்னைக் கண்டதும் தலை குனிந்துவிட்டார். அவர் தூற்றுங் கோஷ்டியில் ஒருவர் தான். அதே சமயம் காக்கா பிடிக்கும் கயவர் என்ருல் தவறில்லை.

கலியாணப் பெண்ணின் மாமன் அவ்வூரிலே பெரிய உத்தியோகஸ்தர். அவர் தயவு இவருக்கு வேண்டும்!

அவளைத் தொட்டுத் தாலி கட்டிய பாக்கியசாலியைப் பார்த்தேன். தனக்கேற்றவர் அவர் என்றுதானே அவள் தீர்மானித்திருக்கிருள். உண்மைதான். ஆனலும்...அந்த இளைஞன் என் மனதில் அப்படியொன்றும் பிரமாத அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விடவில்லை. அவளைவிட அவன் சிவப்பு இல்லையென்ருே உயரம் அல்லது உடல் கட்டு இல்லையென்ருே நான் சொல்லவில்லை.

அவளுக்கு அவன் ஏற்றவன் தான் என்று ஏனே என்னல் தீர்மானிக்க முடியவில்லை. அவளுக்குப் புருஷனுக வரவேண்டியவன் எப்படியிருப்பான் என்று நான் யூகித்தேனே அப்படியில்லை அவன். ஒருவேளை என் முடிவுக்கு இது காரணமாகவும் இருக்கலாம். என்ருலும் அவள் அவனுலும், அவன் அவளாலும் விரும்பப்பட்டு, மாங்கலியப் பிராப்தியும் நடந்தபிறகு நான் பரிசீலனை செய்வதனுல் அவசியமோ,பிரயோசனமோ இல்லை. விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட வேண்டும்,

அவள் இப்போது கணவனுடன் இல்வாழ்க்கைப் பாதையில் நகர ஆரம்பித்து விட்டாள்.

மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன். ஒரு காலத்தில் அவள் என்னைப்பற்றி நினைத்தால் 'இதோ ஒருவன் இருக்கிருன். நம் வாழ்க்கையில் பங்குகொள்ளும் உரிமை படைத்தவன். கடமைக்காகவும், நியாயத்துக்காகவும், உண்மைக்காகவும் நட்புறவு கெடாது நடந்துகொண்டவன். உடன் பிறந்தவன் இல்லையே என்று நான் ஏங்க வேண்டாம். உரிமையுடன் அன்பு காட்டும் ஆதரவாளன் ஒருவன் இருக்கிருன்,' என்ற உண்மையை அறிவாள். கவர்ச்சி தற்காலிகமானதாயிருந்தாலும் எங்களிடையே பாந்தவ்யம் மகத்தானது.

இதை நாங்களிருவரும் மறுக்கவில்லை. யாரும் மறுக்கவியலாது. மாசு மறுவற்ற அன்பின் அடிப்படையிலே எங்கள் வாழ்க்கை நிலை அமைக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

என் மனைவிக்கும் இதெல்லாம் தெரியாமல் இல்லை. அவளும் இதைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லட்டும். எதிர்பாராத சந்திப்புக் கவர்ச்சி, பின்திய அன்புப் பிணைப்பு, உண்மை

விளக்கம், இப்போது விளக்கத் துக்கும் ஒரு வியாக்கியானம் சொல்லிவிட்டேன்.

சம்பவம் என்னமோ எதிர் பாராததா யிருந்தாலும் சாதா ரண நிகழ்ச்சிதான்.

அவர் மனைவி

நிகழ்ச்சி என்னமோ சாதா ரணமானதுதான். பின்னல் வேலை பழக்கத்தைப் பொறுத் தது. ஆனால் அப் பின்னலில் சிக் கல் ஏற்பட்டுவிட்டால் ரயிலில் அவர் பின்னும்போது ஏற்பட்ட சிக்கல் சீராக்கப்படுவதில் பாவம்! இருவரும் திணறி விட்டார்கள். அவள் சகோதரிக்காக—எனக் காகத்தான் இரக்கப்படுகிறாள்! இவரோ தன் மனங்கவர்ந்து விட்டவள் இன்னொருவனை மணந்து கொண்டாள் என்று கூறுகிறார்.

மனைவி இருக்கும்போது மனதை அலையவிடாதீர் என்று அறிவூட்டுகிறாள் அவள். பாவம்! அவருடைய மனம் என்றோ பரி சம் போடப்பட்டு விட்டதை அவள் அறிவாளா? இருந்தாலும் இவர் செய்ததுதான் தவறு. ஒரு பெண்ணிடம் இப்படியெல்லாம் உண்மையை மனம் விட்டுச் சொல்லக்கூடாது என்பதை ஏன் இவர் தெரிந்து கொள்ளவில்லை? அவள் என்னவோ எனக்காக ஆதரவு காட்டும் தோரணையில் அவரைத் தாக்கினால்—பெண்கள் மனதை பெண்கள்தான் அறிய முடியும் என்று அவள் சொன் னாள். உண்மைதான். ஆனால் பெண்கள் மனதைக் கவரும் எந்த ஆடவனும் அவளைப் பூரணமாக அறிந்துகொள்ள முடியும். மனச் சாட்சிக்கு விரோதமாக நடந்து கொள்ள அவர் விரும்பவில்லை. என்னிடத்திலும் சரி, யாரிடத் திலும் சரி. அவர் இப்படியே தான் நடந்து கொள்ளுவார்.

ஆனால் இந்த நிகழ்ச்சியில் சம் பந்தப்பட்ட சகோதரி மனச் சாட்சிக்கு விரோதமாக நடந்து கொண்டு விட்டாள் என்றே நான் நினைக்கிறேன்.

அவளுக்குத் திருமணம் நிச்சய மானதை அவள் அவருக்குத் தெரிவிக்கவில்லை. ஆனால் அவரோ எல்லாவற்றையும் சொல்லிவிட்டார். இங்கேதான் விபரீதம், அவளிடம் கவர்ச்சி கொண்டதை விளக்கி விட்டதில் —மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்து கொள்ளாமலிருந்தது பெருந்தன்மைக் குரியதுதான். ஆனால் அவள் பங்கில் இந்தத் தன்மை இல்லை என்று நான் சொல்லும்போது எனக்கு வருத்தமாகத்தானிருக்கிறது.

என்ன இருந்தாலும் அவள் என்னைப்போல ஒரு பெண். அவ ரைப்போல ஒரு வாலிபனை மணந்து கொண்டிருக்கிறாள்.

வாழ்க்கை நடைமுறையில் தான் அவள் அனுபவ பூர்வமான உண்மையை அறிய முடியும். அவரும்தான்.

நான் இப்படிச் சொல்லுவேன் என்று அவர்கள் எதிர்பார்த் திருக்க மாட்டார்கள். நீங்களும் தான் எதிர்பார்த்திருக்க முடி யாது. நாம் எதிர்பார்க்கிறபடி எதுதான் நடக்கிறது?

பெண்களும் யோக ஆசனமும்

சீதாலக்ஷ்மி குமாரஸ்வாமி

மயூர ஆசனம்

மலச்சிக்கலால் வருந்தாதார் இக்காலத்தில் ரொம்ப சிலர்தான் இருக்கமுடியும். இதை அறிந்து தானோஎன்னமோ, மருந்து விளம்பரக்காரர்கள் விதவிதமாக வசீகரமாய் விளம்பரப் படுத்துகிறார்கள். க்ருஷன் சால்ட் சாப்பிட்டால்தான் ஓடும் பஸ் பிடிக்க முடியுமாம். இரவு படுக்கப் போகும் முன் மாத்திரை சாப்பிட்டால்தான் மல நிவர்த்தியாகி பூரண ஆரோக்கியமாய் இருக்க முடியுமாம். அவ்வளவும் உபயோகமற்றுப் போய்விடவில்லை. அநேகருக்கு மேற்கண்ட மருந்துகள் இல்லாமல் வாழ்க்கை நடத்துவது முடியாது என்று நினைக்கும்படி ஆகிவிட்டது. காலையில் எழுந்ததும் ஏதாவது சால்ட் குடிப்பவர்கள் எத்தனையோபேர். இரவு படுக்கப் போகுமுன் மாத்திரை, லேகியம் விழுங்குபவர் அநேகர். இவர்கள் ஒரு நாள் அம் மருந்தை உபயோகிக்காவிட்டால் அன்று அவ்வளவுதான். மலச்சிக்கல், வயிற்றுக் கடுப்பு, வயிற்று வலி இன்னும் என்னென்னமோ கஷ்டங்கள். அவர்களைக் கேட்டால் புதுப்புதுப் பெயர்களுடன் வரிசையாய்ச் சொல்லுவார்கள்.

மலச்சிக்கல் ஏற்படுவது பெருங் குடலிலேயே. அதில் எங்கு வேண்டுமானாலும் ஏற்படலாம். நம் வயிற்றைச் சுற்றி பெரிய வளையமாக பெருங்குடல் வந்திருக்கிறது. அதை ஏறும் குடல், குறுக்கு குடல், இறங்கும் குடல் என்று மூன்று பாகமாகப் பிரித்திருக்கிறார்கள். மலச்சிக்கல் எங்கு உண்டானால்தான் என்ன? அங்கு அது தேங்கி அழுகி, அதிலுள்ள நீர் பெருங்குடலின் சுவர் வழியாய் கிரகிக்கப்பட்டு, அவ் விஷ நீர் சரீரம் பூராவிற்கும் பரவுகிறது. அதனால் அனேக வியாதிகளுக்குப் பாத்திரமாகிறோம். இதை நீக்கத்தான் மேற்கண்ட மருந்துகளும், மாத்திரைகளும், எத்தனை காலம் தான் தார்போட்டுக் குத்திக் குத்தி வேலை வாங்க முடியும். கடைசியில் தாரின் வலி தாங்காமல் சீக்கிரம் விடை பெற்றுக் கொள்ளுவாருமுண்டு.

இயற்கை வழிகளாகிய யோக ஆசன வழி நமக்கு முன்னோர் அளித்திருக்க நமக்கேன் இக் கொடுமையெல்லாம்.

நந்தவனத்தில்
ஓர் ஆண்டி—அவன்
நாலைந்து மாதமாய்க்
குயவனை வேண்டி,
கொண்டுவந்தான்
ஒரு தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப்
போட்டுடைத்தாண்டி.

என்று சித்தர்கள் பாடிய பாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. வாருங்கள், அத்தோண்டியினால் ஆரோக்யம் எனும் ஜலத்தை மொண்டு பாய்ச்சி நறுமலர் தரும் நந்த

வனங்களை சிருஷ்டிப்போம். அம் மலர்களைக் கொய்து ஈசனை ஆராதிப்போம்.

நாம் சாப்பிடும் வஸ்து ரத்தமாக மாறித்தான் நமக்குப் போஷணை அளிக்க வேண்டும். அந்த ரத்தமாக மாறும் இடம் சிறு குடல்தான். அதன் சுற்றுச் சுவர்களின் துவாரங்களின் மூலமாகச் சத்து கிரகிக்கப்பட்டு ரத்தமாக மாறுகிறது. மீதி சக்கையை பெருங்குடலுக்கு தள்ளி விடுகிறது.

சிலர் ரொம்ப ஒல்லியாகவும் தாடை ஒட்டி உலர்ந்து எலும்பும் தோலுமாக இருப்பார்கள். அவர்கள் என்னதான் டானிக்குகளும், புஷ்டி லேகியங்களும், பாதம் ஹல்வா, பாதம்கீர்களும் சாப்பிட்டாலும் கொஞ்சமும் சதை பிடிக்காது. காரணம் அவர்கள் சாப்பிடும் ஆகாரத்தின் சத்துக்களை கிரகிக்கக்கூடிய சக்தி, சிறு குடலுக்கும், அதன் சம்பந்தப்பட்ட நரம்புகளுக்கும் இல்லாமையே. அவர்களின் சிறு குடல், நரம்புகள் மந்தமாயும், உணர்ச்சியற்றும் இருப்பதினால் தான் அதன் வேலை சரிவரச் செய்வதில்லை. அவர்கள் என்ன தான் மருந்துகள் சாப்பிட்டாலும் அம் மருந்தின் வேகத்தால் சாப்பிடும்வரை வேலைசெய்யும். பிறகு மதுபானம் செய்பவனின் நரம்புகள் தளர்ந்து முன்னைவிட பலவீனமாவதுபோல், பலவீனமாய்விடும். மறுபடி வேலை செய்ய வேண்டுமானால், மது பானம் செய்பவன் மறுபடி குடிப்பதுபோல் ஏதாவது மருந்து சாப்பிட்டால்தான் முடியும். இதற்கு விமோசனம் மயூராசனமே.

நாம் சாப்பிடும் ஆகாரம் சரிவர ஜீரணிக்க உதவுவது பித்தநீர். இந்த நீர் உற்பத்தி செய்யும் பித்தப்பை சரியாய் வேலை செய்யாவிட்டால் என்னென்ன வியாதிகள் வரும் என்று மருந்து விளம்பரங்களில் பார்த்தால் தெரியும். இந்த நீர் சரிவர ஆகாரத்துடன் கலக்காமல் ரத்தத்துடன் கலந்துவிட்டால் மஞ்சட்காமாலை வந்துவிடும். பித்தப்பை அதிகமாய் வேலைசெய்தால் தூக்கம் குறைந்துவிடும். மந்தமாய் வேலை



மயூராசனம்

செய்தால் சோம்பல் அதிகமாகி தூக்கம் அதிகம் வரும். இக்குறைகளை யெல்லாம் விலக்குவது மயூராசனமே.

பழகும் விதம்:— மண்டியிட்டு விரிப்பில் உட்காரவும். விரல்கள் நம் பக்கம் பார்க்க உள்ளங்கைகளை சேர்ந்தாற்போல் தரையில் ஊன்றவும். இரண்டு முழங்கைகளை சேர்த்து கெட்டுக்குத்தாய் தொப்புளுக்கு நேராய் ஊன்றி, வயிற்றின் மேல் பக்கம் முன்புறமாய் இறக்கி சாய்த்து, பின் கால்களை பின் பக்கம் நீட்டி, படத்திலுள்ளபடி வரவும். இது செய்யும்போது மூச்சைப் பிடித்துத்தான் செய்ய வேண்டும்.

இதைப் படிக்க சுலபமாய் இருக்கிறதல்லவா? வேறு ஒன்றும் இல்லை. இந்த ஆசனம் பழகுபவர்களின் மூக்கின் மேல் பூமிதேவிக்கு ஆசையோ அல்லது பூமி தேவியிடம் சாதகர்களுக்கோ ஆசை உண்டாகிவிடும். மூக்கும், முகவாய்க் கட்டையும் கொஞ்சம் அடிபடும். முன்னால் சாய்ந்து, பின்பக்கம் கால் நீட்டும்போது சிலசமயம் பக்கவாட்டிலும் விழவேண்டியிருக்கும். இதற்கெல்லாம் மெல்லிய தலையணைகள் போட்டு, அடிபடாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனால் கடைசிவரை தலையணையே போட்டு செய்து, தலையணை ஆசனமாக்கிவிடக் கூடாது. கொஞ்சம் பாலன்ஸ் வந்ததும் தலையணையில்லாமல் செய்யவேண்டும். சிலருக்குக் கைகளைமடக்கி தொப்புளில் ஊன்றும்போது மணிக்கட்டுகளில் மின்சார ஷாக் அடிப்பது போல் நரம்புகள் இழுத்து வலிக்கும். காரணம் மணிக்கட்டுகளின் நரம்புகள் தளர்ந்தில்லாமல் இழுத்திருப்பதே, தவிர நம் சரீர பளுவை தாங்கியும் பழக்கமில்லையல்லவா? மெல்லிய சரீரமுடையவர்களுக்கும், நடுத்தர தேகமுடையவர்களுக்கும் சீக்கிரமாய் இவ்வாசனம் வந்துவிடும். ஸ்தூல சரீர முடையவர்களுக்கு வருவது கஷ்டம். அவர்கள் சரீரத்தின் பளுவை மணிக்கட்டுதாங்க,சக்தி கொஞ்சம் கொஞ்சம்தான் பெற முடியும். தவிர ஸ்தனங்கள் பெருத்திருக்கும் சகோதரிகளுக்கு முழங்கை தொப்புள் வரை எட்டாது. இருந்தாலும் முயற்சிசெய்து வந்தாலே பலன் உண்டு. ராமா என்று சொல்லுவதற்கு வராத ஒரு வேடன், மரா மரா என்று சொல்லி ஜபித்ததற்கே, ராமாயணத்தை எழுதக்கூடிய மகாகவியாகி, வால்மீகி என்ற நாமதேயமும் அடைந்தான் அல்லவா? ஆகையால் முயற்சிக்குத் தகுந்த பலன் உண்டு.

இவ்வாசனத்தை மூன்றிலிருந்து ஆறுதடவை செய்யலாம். ஒவ்வொரு தடவை முதலில் சில விநாடிதான் நிற்கமுடியும். பிறகு 1, 2 நிமிஷமும் நிற்க வரும். அப்பொழுது 3 தடவையாக குறைத்துக் கொள்ளலாம். மூச்சும் சமயத்திற்குத் தகுந்தாற்போல் வாங்கவும் விடவும் செய்யலாம். இந்த நிலைக்கு வந்தபின், பின்கால்கள் விரித்து, மயில் தோகையை விரித்தாடுவது போல், கால்கள் எவ்வளவு தூக்க முடியுமோ தூக்கி நிற்கலாம். பிறகு இரண்டு கைகளுக்குப் பதில் ஒரு கையால் நிற்கப்பழகலாம். பிறகு மற்றொரு கையால் நிற்கப் பழகலாம். இவைகளெல்லாம் நீண்டநாள் அப்பியாசத்தினால் செய்யவரும்.

பலன்:—முழங்கைகளுக்கு மேல் வயிறுதாங்கி சரீர பளுவை

யெல்லாம் தாக்கி அமுக்குவதால் பெருங்குடலில் பழைய மலங்கள் தங்க வகையின்றி திக்குமுக்காடி வெளியில் தள்ள முயற்சிக்கும். அதன் சுற்றுச் சுவர்களெல்லாம் தூக்கத்திலிருந்து எழுப்பினது போன்ற விழிப்படைந்து, சுறு சுறுப்பாய் வேலைசெய்யும். சிறு குடலுக்கும் அமுக்கம் அதிகம் கிடைப்பதால் அதுவும் விழிப் படைந்து அதன் நரம்புகளெல் லாம் சுறுசுறுப்பாய் வேலைசெய் யும். பித்தப்பையும் கசக்கப் படுவதால் அதன் வேலையும் கிரம மாய் நடக்கும். ஒரு கைமாற்றி ஒரு கைசெய்யும்போது ஏறும் குடல், இறங்கும் குடல் நசுங்கி அங்கு மலத்தைக் கொஞ்சமும் வைக்காமல், மலச்சிக்கலில்லா மல் சுத்தமாய் இருக்கும். தூங் கும் நேரம் தவிர மற்ற நேரங்க ளில் சுறுசுறுப்பாய் இருக்கச் செய்யும். தூக்கமும் நன்றாய் வரும். ஆனால் அதிகம் அல்ல. நம்முடைய வயதிற்கும், வேலை களுக்கும் தக்கபடி தூக்கத்தில் ஒய்வு எடுத்துக் கொண்டபின் உடனே விழிப்பு உண்டாகி விடும்.

குறிப்பு:—இதை கர்ப்பஸ்திரீ கள் பழகக்கூடாது. வழக்கமாய் செய்பவர்களும் கருக்கொண் டால் இதை செய்யக்கூடாது.

செய்து காட்டுக

இதைச் செய், அதைச் செய் என்று பிறரிடம் அதுவும் குழந்தைக ளிடம் சொல்லக்கூடாது. குழந்தைகள் கேட்டுச் செய்யும் சக்தியை விடப் பார்த்துச் செய்யும் சக்தி அதிகம் கொண்டவை. ஆகவே குழந்தைகள் எதிரில் நாம் செய்யும் காரியங்கள் எதுவும் நன்மை தரக் கூடியதாகவும் பயனுண்டாக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

'டாக்டர் ரீட்'

உலகம் உண்மையை உணராது

ஜெயஸ்ரீ

ஆண்களின் அன்பு நிரந்தரமில்ல. மலருக்கு மலர் தாவும் வண்டைப் போன்றது என்று இக் கதையை எழுதியவர் அபிப்பிராயம் போலும்! ஆனல், உலகம் உண்மை உணராது என்று இக்கதைக்குத் தலைப்புப் பெயர் இடப்பட்டிருக்கிறது! உங்கள் அபிப்பிராயம் என்னவோ!

சாவித்திரியைப் பற்றி எதுவும் விவரம் சரியாகப் புரியாமலிருந்தது ஆச்சரியமே. பெரிய கொத்தவால்சாவடிக்குச்சமானமாக இருந்தது அவள் குடியிருந்த வீடு. பத்துப் பதினைந்து குடித்தனங்கள். பலதரப்பட்ட வம்பர்களும், வீணர்களும் தவிர நல்ல யோக்யதை யுடையவர்களும் கலந்து வசித்தனர். இவ்வளவிற்கிடையில் தனிமையாகசாவித்திரி குழந்தை ரமணியுடன் சுமார் ஆறேழு வருஷங்களுக்கு முன்பு குடியேறினளென்ருல் ஆச்சரியமாகத்தா னிருந்தது. ஆனல் அவளை அவ்வப்பொழுது அவள் கூடப் பிறந்தோன் வந்து கவனித்துச்செல்வதுமட்டும் உண்டு. அவன் பெங்களூரில் டாக்டராயிருப்பதாக மட்டும் கேள்வி. மற்றபடி அவள் வாழ்க்கை மர்மமாகவே யிருந்தது.

யாரிடமும் நெருங்கிப் பழக மாட்டாள். ஆனலும் பழகக் கூடாத சுபாவமென்றும் சொல்வதற்கில்லை. வீண் வம்புகளில் கலந்து கொள்ளமாட்டாளே தவிர, மற்றப்படி தனக்குத் தெரிந்த விஷயங்களை, அதாவது தையல் வேலை செய்தல், பத்திரிகைகளையும் படித்து அதில் வரும் முக்கியவிஷயங்களைப்பற்றி சொல்லுதல் போன்றவைகளைப் பிறர்க்குக் கூறுவதில் ஆசையும், சிரத்தையுமுண்டு. ஆனல் பொதுவாக யாவருக்குமே நல்ல விஷயங்க ளென்ருல், பிடிக்குமா? ஏதோ ஒரு சிலர் தவிர மிகுதியுள்ளவரெல்லாம் வீண் வம்பு பேசுவதில்தான் ஆர்வமுள்ளவர்கள். அத்தகையவர்கள் சாவித்திரியிடம் நெருங்கவே முடியாது. எனவே அவர்களுக்கு இவள்மீது துவேஷமும் பொருமையும் அதிகரித்தன. மனம்போன போக்கின்படி அவளை குறை கூறினர்.

"எவனுக்கோ திருட்டுக் குழந்தைப் பெற்றுவிட்டு தலை மறைவாக இருக்கிறது" என்ருர் சிலர்.

"வாழாவெட்டி....அடங்காப் பிடாரி, ஆம்படையான் அடிச்சுத் துரத்தி விட்டானு...." என்றனர் ஒரு பகுதியினர். இம்மாதிரி வெட்டிப் பேச்சுக்களெத்தனையோ. ஆனல் இவ்வளவும் தலை மறைவாக நடக்கும் பேச்சுக்கள் தாமே யொழிய அவள் எதிரில் ஒன்றும் கூறுவது அசாத்தியம். அவள் இவர்களை லக்ஷியம் செய்தாலல்லவா, அவர்கள் தன்னைப் பற்றி எப்படி நினைக்கிருரென சிந்திக்க அவகாசமிருக்கப் போகிறது. தன் வேலை யுண்டு தானுண்டு யென்றிருப்பவள் சாவித்திரி. ஒழிந்த நேரங்களில் பத்திரிகை படிப்பதற்கும், குழந்தையின் துணிமணிகளுக்குப் பூத்தையல் வேலை செய்வதற்கே பொழுது போதாது. பிறகு வம்

பிற்கிட மெங்கே. இவ்வித மாகவேதான் ஆறேழு வருஷங் களும் வந்து மறைந்தன.

ஆனல் உலகம் உண்மையை யுணரமுடியா விட்டாலும், அவள்மீது மட்டும் தகாப் பழி களைச் சுமத்துவதில் மட்டும் குறையவே யில்லை.

* * *

லலிதா புதிதாகக் குடி வந்த வள். அவள் வந்து சில மாதங் கள் தானிருக்கும். இருந்தாலும் சாவித்திரியின் சிநேகத்திற்குப் பாத்திரமானுள்.

சாதாரணமாகப் படித்த பெண் லலிதா. கணவன் பெரிய கம்பெனி யொன்றில் தலைமை குமாஸ்தா.

கலியாணமான புதிசு. தனிக் குடித்தனம் வைக்க வீட்டுக்காக சென்னையில் அலைந்தது கொஞ்ச நஞ்சமல்ல. கடைசியில் தெய்வா தீனமாக இந்த கொத்தவால் சாவடியில் ஒரு அறை காலியாக யிருந்தது. ஒரு பெரிய பங்க ளாவே கிடைத்தது போன்ற ஆனந்தமாக விருந்தது அவ் விளர் தம்பதிகளுக்கு. ஒரு வருஷ "அட்வான்சு" கொடுத்துவிட்டு ஒரு நல்ல நாளில் குடி வந்தனர்.

அவள் குடியிருந்த அறை சாவித்திரி யறைக்குப் பக்கத்தி லிருந்தது. கள்ளங் கபடமற்ற லலிதாவின் புதிய வாழ்க்கைக்கு சாவித்திரியின் யோசனைகள் பெரும் உதவியாக யிருந்தன. அன்று முதலாக இருவரும் இணை பிரியாத் தோழியராயினர். கண வன் ஆபீஸுக்குச் சென்ற பிறகு லலிதாவை சாவித்திரியின் அறை யில்தான் காணலாம். பொது வாக பேசிக்கொண்டும், ஏதாவ தொரு வேலைகளை செய்தும் பொழுதைக் கழிப்பர்.

இந்தசிநேகத்தைக்கண்டமற்ற வர்களுக்குலலிதாமீதுபொறுமை தான். லலிதாவையும் கேலி செய்யத் தொடங்கினர். அவர்க ளுடைய அநாவசிய வம்பே "சாவித்திரியின் நட்பை" பெற தடையாகயிருப்பதை அவர்கள் அறிந்தவர்களானல் அப்படி யெல்லாம் நினைப்பார்களா...ஆம் ...உலகம் உண்மையை யறியாது என்பது நிச்சயமானதுதான்...

* * *

"அக்கா........." வென்று அழைத்தபடியே நுழைந்தாள் லலிதா. என்றுமே அவள் அம் முறையில் வைத்துதான் பேசு வாள்.

ஏதோ அடுக்குள்ளில் வேலையி லிருந்த சாவித்திரி, அங்கிருந்த படியே, "வாம்மா, லலிதா!" என்று குரல் கொடுத்துவிட்டு, பரபரவென்று வேலைகளை முடித் துக் கொண்டு வெளியே வந் தாள்.

லலிதாவின் கையில் மஞ்சள் தடவிய கடிதமொன் றிருந்தது.

"ரமணி பள்ளிக்கூடம் போயிட்டாளா, அக்கா" என்று கேட்டுவிட்டு, "உஸ்" ஸென்று ஆயாசத்துடன் கீழே உட்கார்ந் தாள். சாவித்திரியும் அவளரு கில் உட்கார்ந்தாள்.

சற்று நேரம் இருவரும் அன் றைய சமையல் விஷயங்களைப் பற்றியும், பொதுவாகப் பேசிக் கொண்டனர். பிறகு லலிதாவே, "அக்கா எந்த சமாச்சாரத்தை அவசரமாய் சொல்லணும்னு நினைச்சேனே, அதை மறந்துட்டு ஏதேதோ பேசிக்கொண் டிருக் கேன்......அக்கா,......" என்ற பீடிகையுடன் "எங்க மாமா பெண் டில்லியில் டாக்டருக்கு படிக்கிறுன்னு சொல்லி யில்லே. அவளுக்கு கலியாணமாம்.

மாமா, மாமி, உசிரோடே யிருக்கிறவரை அவா எவ்வளவோ சொல்லியும் கேட்காமே பிடிவாதமா படிப்பே பிரதான்மா யிருந்தது. ஏராளமான ஆஸ்தி யிருக்கு. ஒரே பெண். செல்லம். பிடிவாத குணம் அதிகமா யிருத்து. பெற்றவாளுக்கே நிராசையாக்கி விட்டது. அதே ஏக்கம் இரண்டு பேரும் ஒருத்தரொத்தரா போயிட்டா. இந்த கலவரம் நடந்ததே அப்போ எனக்குத் திகில்தான். விஜயா சங்கதி ஒண்ணுந் தெரியலேன்னு ...இப்போ இந்த கடிதாசி வந்திருக்கு......" என்று கூறிய படியே சாவித்திரியிடம் தான் கொண்டு வந்திருந்த கலியாண கடிதத்தை நீட்டினாள்.

"சரி, உனக்கு ஒரு பிரயாணம் இருக்கு.....யாரு மாப்பிள்ளை..." என்று கேட்டபடியே கடிதத்தைப் பிரித்தாள் சாவித்திரி. கலியாண கடிதத்துடன் வைத்திருந்த ஒரு புகைப் படம் கீழே விழுந்தது. கலியாணப் பிள்ளையின் படமாகத்தானிருக்க வேண்டுமென நினைத்தவளாய் அதை எடுத்துப் பார்த்தாள்.

எங்கோ பார்த்த முகம். ஆம் பழகினதும் கூடத்தான்.....அந்த நினைவு முகம் மறக்க முடியாதது. சந்தேகமே யில்லை. அவர்தான். அதன் கீழ்தான் பெயர் எழுதப் பட்டிருக்கிறதே. அதற்குப் பிறகும் சந்தேகமேன்.........ஒரே மயக்கம்...உலகமே சுழலுகிறது போன்ற உணர்ச்சி......

"அக்கா, போட்டோவிலே மாப்பிள்ளை நன்றாயில்லை. விஜயா பிடிவாதமே யொழிய சுத்த வெகுளி. கள்ளங்கபடு தெரியாது. பகவான்தான் அவளுக்குத் துணை. எல்லாம் எழுதியிருக்காள். என்கிட்டேதான் அவளுக்கு ஆசை. வேறே யார் கிட்டேயும் நெருங்கமாட்டா. முதல் மனைவி............" யென்று ஏதேதோ லலிதா சொல்லிக் கொண்டே போனதும்கூட பழைய நினைவுகளின் சுழற்சி வேகத்தில் கலந்து மறைந்தன.

* * *

இயற்கை வனப்பு மிகுந்த ஒரு சிற்றூரின் பிராமண அக்கிரகாரம். தெருவின் இருபுறத்திலும் சேர்ந்து இருபது வீடுகள் தானிருக்கும். ஒவ்வொரு வீட்டிலும் நாலைந்து குழந்தைகளிருக்கும். இதற்காக எல்லோரைக் காட்டிலும் சற்று செல்வாக்குடையவர் மெத்தை வீட்டு கிருஷ்ணய்யர். அவர்களுடைய அருமையான ஒரே புதல்வன் ராமு. தெருக்களில் சிறுவர் சிறுமியர், பண்ணும் அட்டகாசங்கள் சொல்லத்தரமல்ல.

இதில் ராமு, சாவித்திரி, அவளது சகோதர சகோதரிகள் ஒரு பகுதியாக விளையாடுவர்.

சாவித்திரியின் தந்தைதான் ராமு வீட்டாரின் நிலபுலன்களை மேற்பார்வைப் பார்த்து வந்தார். எனவே இரு வீட்டாரிடை தொடர்பு அதிகமேற்பட்டிருந்ததில் ஆச்சரியமில்லை.

கிராமத்து மற்றப் பெண்களை விட சாவித்திரிதான் அழகி. மாநிறம். ஆனால் எடுப்பான வசீகர முகம். படபடப்பில்லாத சாந்த சுபாவம். ராமுவிடம் ஏதோ ஒருவித பாசத்தைத் தோற்றுவித்தது அச் சிறு வுள்ளத்தில்.

அவர்களிருவரும் விளையாடுவதைக் கண்ட அவ்வூரார் "இந்த இரண்டுகளுக்குமே கலியாணம் நடந்தால், ஒற்றுமையாக வாழ்க்கை நடத்தும்..." என்றெல்லாம் பேசிக்கொள்ளுவர்.

பணக்காரர்களே யொழிய ராமுவின் பெற்றேரும் நல்லவர். அவர்களும், ''பணமென்ன இன்றைக்கு வருகிறது. நாளைக்குப் போகிறது. ஒத்த அன்பு கிடைக்கிறது கஷ்டம். எப்படியாவது சிறுசுகள் ஆயுசுடன் இருந்தால் போதும்'' யென்று நினைப்பர். 'தெய்வ சித்த'த்தில் முழு நம்பிக்கை கொண்ட அவர்களுக்குத் தமது எண்ணத்தை வெளியிடத் தைரியமில்லை. காலப் போக்கின் மாறுதலை நாம் முன்கூட்டி அறிந்து செய்வது சாத்தியமா. எனவே தமது இஷ்டத்தை வெளிப்படுத்தாமல் மௌனம் சாதித்தனர். அந்த மௌனத்தை பலர் பலவிதமாக அர்த்தம் செய்து கொண்டனர்.

பணக்காரர்கள் கர்விகள்... யென்கிற பட்டந்தான் அதன் சாராம்சம். பெரியவர்களிடைதான் இப்படி.

சிறு உள்ளங்களில் அந்தஸ்தின் வேற்றுமை புரிகின்ற சக்தியில்லை.

ராமு தருதரு வென்றிருப்பான். எல்லோரும் அவனுக்கு வேண்டியவர்களே.

சாவித்திரி ராமுவுக்காக எது செய்தாலும் அதில் ஏதோவொரு ஆனந்த மிருப்பதாக உணர்வாள். இளம் உள்ளத்தின் உணர்ச்சியை உணர்த்தவோ, அறியவோ போதுமான வயதில்லை. ஆனல் ஏதோ ஒன்று இருவரையும் பிணைக்கச் செய்தது. அன்றைய சம்பவம் இன்று நடந்தது போலவேத்தான் இருக்கிறது.

மத்தியானம். ராமுவின் வீட்டுத் திண்ணையில் ராமு, சாவித்திரி அவளது அத்தான் அண்ணுச்சாமி மூவரும் உட்கார்ந்து அவர்களுக்கே புரியாத விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

சாவித்திரி கீழே நின்றபடியே முழு சுவாதீனத்துடன் ராமுவின் தொடையில் சாய்ந்தபடியே அவனது கைகளைப் பிடித்து விரல்களில் விஷமம் செய்து கொண்டிருந்தாள். அப்பொழுது அவளுக்கு ஒன்பது வயதிருக்கலாம். உம்.........அன்று ராமு கேட்டதை மட்டும் உயிருள்ள வரை அவள் மறக்க முடியாது...

''சாவித்திரி, நான் உன்னை ஒன்று கேட்கிறேன். சரியாக பதில் சொல்லணும். உம்...தெரியுமா...'' என்றுன் ராமு. கொஞ்சலாகச் சாவித்திரியின் கன்னத்தை லேசாகக் கிள்ளியபடியே.

''உம்...சொல்லேன்....'' என்ருள் வெட்கத்துடன் சாவித்திரி. இதோபார். உங்கப்பா, அம்மா எல்லோரும் உன்னை இந்த அண்ணுச்சாமியை கலியாணம் பண்ணிக்கச் சொல்லப் போரு. நேத்திக்கு பேசிண்டிருந்தா. நான் கேட்டேன். நெஜம்மா சொல்லு. உனக்கு யார்மேலே இஷ்டம்னு ......'' என்று சாவித்திரியின் தலையை தன் பக்கமாகத் திருப்பி அவள் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தபடியே கேட்டான் ராமு. அவள் கண்களில் நீர் துளித்தது. ''உன்னைத்தான் பண்ணிப்பேனே தவிர......'' என்று கூறி நிறுத்திக் கொண்டாள். மேலே அவளால் பேச முடியவில்லை. அவன்மீது தலையைச் சாய்த்துப் படுத்துக் கொண்டாள். அவளது கண்ணீர் அவனது தொடையை நனைத்தது. அவனது அன்புக் கரங்கள் அவளைப் பற்றித் தடவின. ஆனந்தத்தால் அவளது மெய் சிலர்த்தது. அவளையுமறியாமல் அத்

தான் மீது கோபம் பொங்கி வந்தது. சீ, போடா, அண்ணாச்சாமி, நீ ஒண்ணும் எங்களோடெ விளையாட வரவேண்டாம்..........'' என்றாள்.

''இரு இரு, அம்மாகிட்டே சொல்றேன்'' என்று கை விரலை ஆட்டு ஆட்டியபடியே அச்சிறுவன் ஓடிவிட்டான். ஏதோ ஒரு பெரிய வெற்றி கிட்டியது போல சாவித்திரி ஆனந்தக் கூத்தாடினாள்.

அன்று அவர்களது செய்கையிலோ, சொல்லிலோ, ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் நாளடைவில், இன்று அதன் பூர்ணமான அர்த்தத்தை உணர்ந்தாள்.

பெண்ணுள்ளம் அன்பைப் போற்றி வளர்க்கும் இயல்புடையது. ஆணுள்ளம் நிலையற்றது. இனிப்பை நாடி தேனிருக்கு மிடமெல்லாம் செல்லும் வண்டினத்தை யொத்தது. சஞ்சல சுபாவம் ஆணுக்கே தவிர ண்பெணுக்கல்ல.

காலச் சக்கரம் வெகு வேகமாகத்தான் சுழலுகிறது. மக்களின் பருவங்களுக் கேற்ப மாறுதல்கள். சாவித்திரியும் யௌவன பருவ மடைந்தனள். இயற்கையின் பூரண பொலிவுடன் விளங்கினாள். பெற்றோர் வரன் தேடலாயினர். ஆனால் சாவித்திரிமட்டும் ஒரே பிடிவாதமாக விருந்தாள். ராமுவைத் தவிர வேறு யாரையும் அவள் மணக்கத் துணியவில்லை. பெற்றோரின் இஷ்டத்திற்கு அசைந்து கொடுக்கவில்லை. அவளது வழிக்கே அவர்கள் வர வேண்டியதாகி விட்டது. ராமுவிற்குத் தவிர அவள் மனதில் வேறு யாருக்கும் இடமில்லை.

ராமு கலாசாலை மாணவன்—சென்னையின் நவநாகரிக வாசனை அவனை நன்கு சூழ்ந்துகொண்டது. ஆடம்பரவாழ்க்கை அதிகமாயிற்று. பழக்க வழக்கங்கள் மாறின. புது மனிதனாகிவிட்டான்—அவனது உள்ளமும் நிலை தடுமாறிக்கொண்டிருந்தது. நகரத்தின் மோகத்தில் நாட்டை மறந்துவிட்டானென்றே கூறலாம். விடுமுறைகளில் கிராமத்திற்கு வந்தால், சாவித்திரியின் அன்புடன்கூடிய இயற்கையெழில் அவனை யாட்கொண்டுவிடும். ஆனால் மறுகணம் சென்னையின் நாகரிக மங்கையரின் தோற்றம் சற்றே மனத்தை நிலைகுலையச் செய்யும். நெடுநாட் பழக்கத்தினால் சாவித்திரியை ஏற்கவும் துணியாமல், மறுக்கவுந் துணியாமல் இரண்டுங்கெட்டான் நிலைமையில் ஏதோவொரு சாக்கு சொல்லி அவனை ஏமாற்றி வந்தான்.

''சாவித்திரி! என்மேல் தப்பு சொல்லாதே. படிப்பு முடிந்த பிறகுதான் கலியாண யோசனை. அதுவரை நீ காத்திருக்கவேண்டும். உன்னிஷ்டம். என்மீது வீண்பழி போடாதே...'' என்று கூட கூறிவிட்டான். சாவித்திரியின் நெஞ்சு வேதனையினால் படபடத்தது. என்ன கல்நெஞ்சு. ஆண்களே இப்படித்தானா...'' என்றெல்லாம் நினைத்தாள். ஆனால் பொறுமையுடன், ''தங்கள் சித்தம்...கார்த்திருக்றேன்...இல்லாவிட்டால் கன்னியாகவே கழிப்பேன்...'' என்று கலங்கிய கண்களுடன் அவனை நோக்கினாள். அதைக் கண்ட ராமுவிற்கு சகிக்கமுடியவில்லை. ''சரி, படிப்பு முடிந்ததுமே நம் விவாகம் நடக்கும். கவலைப் படாதே...'' என்று தேற்றிவிட்டுச் சென்றவன், பிறகு அவளைப் பார்க்கும் சந்தர்ப்பமே இல்லை. அவனது வார்த்தைகளை உண்மை

யென நம்பிவிட்டாள் அப் பேதை. தன் காதலனுடன் வரப் போகும் காலத்தில் இன்பமாகக் கழிக்கப் போவதை யெண்ணி யெண்ணி கனவு கண்டுகொண் டிருந்தாள்.

சென்னையில் ராமுவின் செய்கை வேறு விதமாகவே யிருந்து வந்தது. அவனது சிநேகிதர்களுடன் உல்லாச வாழ்க்கை நடத்தியது கணக்கில்லை. போகாத சினிமாயில்லை. உல்லாச வாழ்வென நினைத்து தன் மானத்தையே இழக்கும் நிலையில் வந்துவிட்டான். இவ் விஷயங்களை சாவித்திரியும் அறிந்தாள். ஆனால் அவள் நம்பவில்லை. அன்பே அவளது அறிவை மறைத்தது. அவனது தவறுதல்களை மன்னித்து ஆவலுடன் என்று அவன் தனது படிப்பை முடித்துக் கொண்டு வருவானோ என்றே ஏங்கினாள். ஒருநாள் போவது ஒரு யுகமாகத் தோன்றியது.

மனிதன் எண்ணியபடியே நடந்துவிட்டால் "விதி"யைக் குறைகூற அவசிய மிராதே.

பரீக்ஷை முடிந்து விடுமுறையும் வந்துவிட்டது. ராமுவின் வரவை யெல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். மறுதினம் வருவதாக விருந்தது. சாவித்திரி தன்னை அலங்கரித்துக்கொண்டு அவன் வரவை எதிர் பார்த்தவளாய் வாசலுக்கும் உள்ளுக்கும் நடந்துகொண் டிருந்தாள். வண்டி வரும் நேரமும் கழிந்துவிடவே ஏதோவொரு பயம் ஒவ்வொருவர் மனதிலும் புகுந்து கொண்டது. அவர்கள் மனம் ஈசனை நாடி நிம்மதிபெற வழி தேடியலைந்தது.

கடைசியாக ராமுவிற்குப் பதில் அவனது கடிதம்தான் அவர்களை நாடிவந்தது. அதைக் கண்ட பெற்றோர் மனந் துடித்தது. திடுக்கிடும்படியான எதிர் பாராத விஷயங்கள். ஒரே கணத்தில் சமாச்சாரம் பரவிவிட்டது. சாவித்திரியைப்பற்றி ஒன்றுமே கூறுவதற்கில்லை. இடி விழுந்தவள் போலானாள்.

"என்னுடன் படித்துப் பழகி நேசித்த பெண்ணொருத்தியையே மணக்கப்போகிறேன். சாவித்திரி எனக்காக காத்திருக்க வேண்டாம். என் மனம் அவளை விரும்பவில்லை. தகுந்த ஒருவனை மணந்து வாழ்க்கையை நன்றாக நடத்த வேண்டிக் கொள்ளுகிறேன் என்று சொல்லவும்..."

"என்ன தாராளமான மனசு ....பாவம்.........எனக்காக இரங்குகிறது போலப் பாசாங்கு. நான் இனி எப்படிப் போனால் என்ன. ஆனால் என் உறுதியை சர்வேச்வரனாலும் அசைக்க முடியாது. அன்பைப் பறி கொடுத்த உள்ளம் வறண்டு விட்டது... உம்..." என்று பித்துப் பிடித்தவள்போல புலம்பினாள்.

காலம் போகிற போக்கில் மக்களின் புண்பட்ட மனதையும் சமனப் படுத்திப் செல்லுகிறது தான் அனுபவமுதிர்ந்தவார்த்லதை.

இச் சம்பவத்திற்குப் பிறகு அவளுக்கு இருப்பாகவே யில்லை. ராமுவின் உருவத்தை மட்டும் மறக்க முடியவில்லை. தன்னை அவ் விதம் அவன் ஏமாற்றுவானென்றே நினைக்கவில்லையல்லவா அவள். அவ்வூரில் அவளுக்கு இருப்பாகவே யில்லை

பெங்களூரில் அவளது அண்ணன் டாக்டராக இருந்தான். சகோதரியின் மனக் கஷ்டத்தை மாற்ற தன்னுடன் அழைத்துச் சென்றான்.

எப்படியோ இரண்டொரு வருஷங்கள் ஓடி மறைந்தன.

ஒரு நாள் ஏதோ சிக்கலான பிரசவ 'கேஸு'க்காக டாக்டர் மூர்த்திக்கு 'போன்' மூலம் அழைப்பு வரவே அவசர அவசரமாகச் சென்று திரும்பினன்.

அன்று புது வருஷப் பிறப்பு தினம். எனவே அவன் வந்த பிறகு அவனுடன் சாப்பிடலாமென காத்திருந்தாள் சாவித்திரி. வெகு நேரங் கழித்தே அவன் வந்தான்.

"என் அண்ணு இவ்வளவு நேரம். 'கேஸ்' ரொம்ப சிக்கலானதா?" என்று கேட்டாள்.

"ஆமாம். சாவித்திரி! யாரோ ஒரு ஸ்திரீ. கர்ப்பிணி விவரம் தெரியவில்லை. 'மெயின்' ரோட்டில் விழுந்துகிடந்தாளாம். சுமாரான குடும்பத்தைச் சேர்ந்தவள்போலக் காணப்பட்டாள். வழியில் போகிறவர்கள் அவளைத் தூக்கி வந்து ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அவளுக்கு நினைவில்லை. குழைந்தை பிறந்திருக்கிறது. ரொம்ப நன்ருயிருக்கிறது. அவ..." என்று கூறி வரும் போதே, சாவித்திரி, "குழந்தை, ஆணு, பொண்ணு, அண்ணு..." என்று கேட்டாள்.

"பெண்தான். தங்க விக்ரகம் மாதிரியிருக்கு சாவித்திரி. தாய் பிழைப்பது கஷ்டந்தான். அவ்வளவு ஹீன நிலை. குழந்தையின் கதி என்னவோ. எந்த ஊரோ என்னமோ..." வென்று கூறிவிட்டு உடைகளைக் கழற்றினன். பிறகு ஸ்னனஞ்செய்து சாப்பிட்டான். சாவித்திரியும் கூட சாப்பிட்டாள். பிறகு இருவரும் அன்று பிறந்த குழந்தையைப்பற்றியே பேசிக்கொண் டிருந்தனர். வாய் பேசியதே தவிர அவள் மனது மட்டும் ஏதோ வொரு யோசனையி லிறங்கி ஈடுபட்டிருந்தது.

திடீரென்று அவள் "அண்ணு, நான் அக் குழந்தையைப் பார்க்க வேண்டும்......" என்ருள்.

"அதற்கென்ன, வாயேன்..." என்று தக்ஷணம் எழுந்து ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டான். அவளது புண்பட்ட உள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கவே விரும்பியது அச் சகோதரவுள்ளமும்.

அவ் விருவரும் ஆஸ்பத்திரியை யடையு முன்னரேயே 'தாய்' இறந்துவிட்டாள். அங்குள்ள சிப்பந்திகள் டாக்டரின் வரவை எதிர்பார்த்து அவரது யோசனையின்பேரில் குழந்தையை என்ன செய்வது என்பதை அறியவே காத்துக்கொண் டிருந்தாராகையால் டாக்டரின் எதிர்பாராத வரவு நன்மையாக முடிந்தது.

உயிரற்ற தாயின் பக்கத்தில் கிடந்த சேயின் பரிதாபக் குரல் சாவித்திரியின் உள்ளத்தைக் கிளறிவிட்டது. பரிதாபத்துடன் அக் குழந்தையை வாரியணைத்துக் கொண்டாள். அக் குழவியும் அவளது மார்பில் தன்முகத்தைப் புதைத்துக்கொண்டு நிம்மதியாக இருந்தது.

"அண்ணு, இக் குழந்தையை எங்கும் அனுப்ப வேண்டாம். நான் பார்த்துக் கொள்ளுகிறேன்..." என்று கெஞ்சலாகக் கூறவே, "சாவித்திரி, உன்னிஷ்டம் அதுவானல் அப்படியே செய். உன் மனம் நிம்மதியடையவே நான் விரும்புகிறேன். ராமுதான்..." என்று சொன்னவன் அதை அப்படியே விட்டுவிட்டு மேலே நடக்க வேண்டியவைகளை கவனிக்கச் சென்ருன்.

தாயைதான் இழந்துவிட்டாய். தந்தை எப்படி யிருக்கிருரோ......" என்று எண்ணியபடியே குழந்தையின் அழகிய வதனத்தைப் பார்த்த படியே

கண்ணீர் வடித்தாள். அச் சிறு முகத்திலும் ஏதோ வொரு நினைவு முகங் தோன்றி அவள் மனதை வாட்டிய போதிலும், அதேசமயத்தில் ஒரு வித ஆறுதலும் தோன்றியது.

அன்று குழந்தை ரமணியுடன் தனியாக வாழ்க்கை நடத்தவந்தவள், என்பது வருஷகாலமாகவே அச் சம்பவங்களைச் சற்று மறந்திருந்தாளென்று சொல்லலாம்.

இன்று இப்புகைப்படம் கடந்த கால சம்பவங்களை நினைப்பூட்டி விட்டது.

"என்னைத்தான் வஞ்சித்துவிட்டார். விஜயாவின் வாழ்க்கையாவது நன்ருக யிருக்க வேண்டுமே... அவர் விவாகஞ் செய்து கொண்டவள் என்னவானுள். ஒன்றும் தெரியவில்லையே. அதைப் பற்றி கேட்டுத்தான் என்னவாகப் போகிறது. பழைய சம்பவங்களை கிளறுதிருப்பதேமேல்..." என்றெண்ணினுளே யொழிய "லலிதா, முதல் மனைவி என்னவானுள்" என்று கேட்டுவிட்டாள்.

"அதுவா, பாவம். அவள் கர்ப்பிணியா யிருந்தபொழுது பெங்களூருக்குச் சென்றார்களாம். அங்கு உல்லாசமாக மைசூருக்குச் சென்றுவர புறப்பட்டார்களாம். வழியில் ஏதோ விபத்து நேர்ந்ததாம். அதில்தான் மனைவியை இழந்தார். பிறகு அவள் சமாசாரமே தெரியாதாம். இவரும் வெகு நாள் ஒரு ஆஸ்பத்திரியிலிருந்து தேறினராம். பிறகு வாழ்க்கை கசந்துவிடவே தேசிய இயக்கத்தி லீடுபட்டாராம். ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமைக்காக கலகத்தின் போது டெல்லியில் பெரிதும் வேலை செய்தாராம். அப்பொழுதே விஜயாளுடைய சினேகம் கிடைத்து இருக்கிறது. மேலும் அவள் டாக்டரல்லவா, கடைசியில் அவர்களது சிநேகம் கலியாணத்தில் கொண்டுவிட்டது. எப்படியோ விஜயாவிற்கும் ஒரு ஆதரவு ஏற்பட்டது பற்றி எனக்கு மிகவும் சந்தோஷம்." என்று முடித்தாள்.

லலிதா, ரமணியின் தந்தை ராமுவே யென்பதை யுணர்ந்தால் சாவித்திரியின் மனதில் என்ன தோன்றுமோ. ரமணியின் தாய் பிரக்ஞையுட னிருந்திருந்தால் உண்மை கட்டாயம் வெளிப்பட்டிருக்கும். ஆனல் தெய்வம் அதை மறைத்துவிட்டது.

சாவித்திரி உண்மை யுரைக்கக் கூடாதென்பதே அதன் எண்ணமும்போலும். அவ்விதமே உலகமும் அவளைப்பற்றிய உண்மையை உணரக் கூடாதென்பதே அவளது எண்ணமும்.



197649

மங்கை வாசகர்களுக்கு,

பம்பாயிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும், மற்றும் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மங்கையில் வெளியாயுள்ள பல கட்டுரைகளைப் போற்றி கடிதங்கள் வந்துள்ளன "பட்டினத்தார் காதல்" பலர் உள்ளங்களில் "மங்கை" மேல் காதலை தூண்டி விட்டிருக்கிறது. இலங்கைக் கடிதம் "இம்மாத மங்கையில் பட்டினத்தார் காதலைப் படிக்க படிக்க, கன்னியா குமரியாக வாழத் தோன்றவில்லை. இப்பொழுது "மங்கை" பெரிய குடும்பியாகி விட்டாள். பல குழந்தைகளுக்கு அறிவு, வளர்ச்சி, தேகப்பயிற்சி, உண்மை நாகரீகப் பயிற்சி தெய்வீகப் பயிற்சி அனைத்தும் தந்து இன்பநிலையில் வாழ வைக்கும் தாயாக விளங்குகிறாள்.

ஞாலமெலாம் ஈன்றும் கன்னியென என்றும் திகழும் மங்கையான பராசக்தியின் அருள் வாழ்க, உலகம் அவளை வாழ்த்தி வாழுமாக. "என்று எழுதியிருக்கிறது.

"இனிக்கும் சொற்களை" படித்து ஒரே நாளில் பலன் கண்டு விட்டேன். இளம் எழுத்தாளர் சியாமளாவின் யோசனையை என் சகோதரிகளுக்கு அனுபவ பூர்வமாக சிபார்சு செய்கிறேன்.

ஸ்ரீமதி ரங்கதேவியின் "கன்னியா குமரி" தமிழகத்தில் புரட்சியையே கிளப்பி விட்டதோ என்றெண்ணும்படி இளம் பெண்களின் கடிதங்கள் தோற்றுவித்தன. அவரது 'லேடி டைபிஸ்ட்' 'கன்னியா குமரிக்கு வழிகாட்டியாக இருக்கும்! கதையின் போக்கை நாம் முழுவதும் ஆதரிக்கா விட்டாலும் அதைப் பின்னப்படுத்த மனம் வரவில்லை.

'காமாட்சியின் ஹாஸ்யச் சுவையை' காணாமற் போன பேனா' ஓரளவுக்குக் காட்டுகிறது. அவரது அடுத்த கட்டுரைக்கு நீங்கள் தயாராக வேண்டும். வயிறு புண்பட சிரிக்க வைத்துவிடும்.

'புழைக்கடைக் கீரை' என்று டாக்டர் நாமகிரியவர்கள் ஆரம்பித்திருக்கும் கட்டுரைகள் நம் நாட்டு மருந்துகளின் எளிமையை விளக்குகின்றன. அவற்றை உபயோகித்தவர்கள் தமது அனுபவத்தைத் தெரிவிக்கும்படி வேண்டப்படுகிறார்கள்.

அத்தைக்கு எல்லோரும் எழுதலாம்; மாட்டுப்பெண் வீட்டிற்கு வந்து விட்டபடியால் சாவகாசம் அதிகமாக இருக்கிறது. அத்தையின் அனுபவத்தை யொட்டிய அறிவைப் பயன்படுத்திக் கொள்ள மங்கை வாசகர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த, இதழில் ஸ்ரீமதி 'ரமா' என்பவர் 'தையல்' குறிப்புகள் படங்களோடு உதவ இசைந்துள்ளார்கள்.

உங்கள் ஒழிவு நேரத்தை வீணாக்காதீர்கள். உங்களுக்குத் தோன்றுவதை தாள்களின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதியனுப்புங்கள். உசிதமாகத் தோன்றுபவை பிரசுரிக்கப்படும்.

"ஆசிரியை"

Printed and Published by Vai. Govindan at Shakti Press Ltd. (Shanti Press) 115-E; Mowbrays Road, Royapettah, Madras; 14. Editor: S. VISALAKSHI.



இந்தியாவின் ஒப்பற்ற தலைவர் நேருஜியின் சகோதரி கிருஷ்ணா ஹதீ சிங்கும்
பர்மாவின் ஒப்பற்ற தலைவர் வீர மரணமடைந்த ஆங்சானின் மனைவியும் உரையாடுகிறார்கள்.

ஆங்கிலம் - தமிழ் அகராதி

ENGLISH - ENGLISH & TAMIL

DICTIONARY

•

தொகுத்தவர்:

தி. நா. சுப்பிரமணியன்

•

500-க்கு மேற்பட்ட பக்கங்கள். வெள்ளைக் காகிதம். கலிகோ பைண்டு. அருமையான பதிப்பு.

•

ரூபாய் ஐந்து

தபால் செலவுடன் ரூ. 5-8

வியாபாரிகளுக்கு 15% கமிஷன்

•

சக்தி காரியாலயம்

சென்னை-14